# A Text Book

OF

# TAMIL GRAMMAR

**Book III**

BY

M. MAHALINGA IYER

# தமிழ் இலக்கணம்

மூன்றாம் புஸ்தகம்

**மழவை - மகாலிங்க ஐயரவர்கள்**

இயற்றியது.

[மாணாக்கர்கள் எளிதாய் உணரத்தக்க வகையில் இயல்களை மாற்றி அமைத்தும், விதிகளை ஒழுங்குபடுத்தியும், இன்றியமையாத பலவிதிகளைக் கூட்டியும், வேறு பலவகைத் திருத்தங்கள் செய்தும் புதுப்பிக்கப்பட்டது.]

MACMILLAN & CO., LIMITED
MADRAS, BOMBAY, CALCUTTA AND LONDON
1921

*All Rights Reserved*

Price, 8 Annas] [விலை, 8 அணா

T17557
R005K03

# MACMILLAN'S EASY SELECTIONS FROM TAMIL POETRY.

## பாலநீதிச் செய்யுள் திரட்டு.

ஔவையார் அதிவீர ராமபாண்டியன் முதலிய முற்கால வித்வ சிரோமணிகள் எழுதிவைத்த அருமையான நீதிநூல்கள், சிறுவர்கள் மனத்திலும் பதியக் கூடியவாறு தெளிவான எளிய நடையில் மனப் பாடம் பண்ணுவதற்கு அனுகூலமான செய்யுள் வடிவில் அமைந் திருக்கின்றன. ஆதரிப்பாரில்லாமல் அந்நூல்கள் இப்பொழுது பாட சாலைகளில் அதிகமாகப் போதிக்கப்படவில்லை. தங்களைக் கல்வி மான்கள் என்று மதித்திருக்கும் பல தமிழ்மக்கள்கூடத் தங்கள் முன் னோர்களுக்கு அரிச்சுவடிப் பாடமான இவ்வரிய நூல்களைக் கண்ணாலும் கண்டறியாதவர்களா யிருக்கிறார்கள். இது தமிழ்நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும் மிகவும் மானக்கேடான விஷயமன்றோ? இக்குறை பாட்டை நிவர்த்திக்கக் கருதி அவ்வரிய நீதிநூல்களைச் சிறுவர்களும் பிறரும் படிப்படியாய்க் கற்று அறிந்துகொள்வதற் கேற்றவாறு பல பகுதிகளாகப் பிரித்து, பதவுரையுடன், நல்ல கடிதத்தில் தெளிவான எழுத்துகளால் அழகாக அச்சிடலாயிற்று. அந் நீதிநூல்களின் பகுப் பும் அடக்கமும், வருமாறு :—


| | | அ. | பை. |
|---|---|---|---|
| **முதற்படி.** (ஜூனியர்—Junior) | | | |
| பகுதி | 1. உலகநீதி, ஆத்திசூடி .. .. .. (2—வது வகுப்புக்கு ஏற்றது). | 1 | 6 |
| ,, | 2. கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை .. (3—வது வகுப்புக்கு ஏற்றது). | 2 | 0 |
| ,, | 3. வாக்குண்டாம், நல்வழி .. (4—வது வகுப்புக்கு ஏற்றது). | 2 | 0 |
| **இடைப்படி** (இன்டர்மீடியேட்—Intermediate) | | | |
| பகுதி | 1. நீதிவெண்பா .. .. .. (5—வது வகுப்புக்கு ஏற்றது). | 2 | 6 |
| ,, | 2. நன்னெறி, இனிது 40, இன்னா 40 .. (6—வது வகுப்புக்கும் 1—ம் பாரத்துக்கும் ஏற்றது). | 3 | 0 |
| **உயர்படி** (ஸீனியர் – Senior) | | | |
| பகுதி | 1. முதுமொழிக்காஞ்சி, நீதிநெறி விளக்கம் .. (7—வது வகுப்புக்கும் 2—ம் பாரத்துக்கும் ஏற்றது). | 3 | 6 |
| ,, | 2. திரிகடுகம், நான்மணிக்கடிகை .. .. (8—வது வகுப்புக்கும் 3—ம் பாரத்துக்கும் ஏற்றது). | 5 | 0 |

# முகவுரை.

இவ் விலக்கணநூலை இயற்றிய மழவை—மகாலிங்க ஐயர் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்தவர்; பிராமண மரபினர்; திருத்தணிகை விசாகப் பெருமாளையர் சரவணப் பெருமாளையர் என்னும் வித்வசிரோமணிகளிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகக் கற்றுணர்ந்து சிறந்த தமிழ்ப் புலவராகத் திகழ்ந்தவர்; துரைத்தனத்தாரால் நன்கு மதிக்கப்பெற்றவர்; சாதுரியமாக உரையாடுவதில் வல்லவர். மிகவும் சமீப காலத்தவரேயாயினும், இவருடைய சரித்திரம் விரிவாகக் கிடைப்பது அரிதாயுள்ளது. இவ்விலக்கண நூலையன்றி, பெரிய புராணத்தில் முதல் தொள்ளாயிரம் செய்யுள்களுக்கு உரையும், அருணாசல புராணத்துக்கு உரையும், மழவைச் சிங்காரசதகம் முதலிய சிறு நூல்கள் சிலவும் இவர் இயற்றியுள்ளார். ஆயினும், இவருடைய பெயர் இன்றளவும் பிரபலமுற்றிருப்பதற்குக் காரணமாவது இளைஞர்க்கென்று இவர் இயற்றிய இச் சிற்றிலக்கணமே.

மாணவர்களுக்கென்று இயற்றப்பட்ட இந் நூல், முக்கியமான இலக்கண விதிகளையெல்லாம் தெளிய விளக்குவதாயினும், இயல்முறைவைப்பு முதலியவை இளைஞர்களுக்கு மயக்கந் தருவனவா யிருப்ப துணர்ந்து, அக் குறைவை நீக்கக்கருதி, அவசியமான பல சீர்திருத்தங்கள் செய்து, மாணாக்கர்க்கு நன்கு பயன்படும் வகையில் பதிக்கப்பட்டுள்ளது. தமிழ் இலக்கணக் குறியீடுகளுக்குச் சரியான ஆங்கிலக் குறியீடுகளடங்கிய அனுபந்தம் ஒன்றும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளது.

# உள்ளுறை


| | பங்கி எண்கள். |
|---|---|
| I. *எழுத்தியல்* ... ... ... | (1–35) |
| i. எழுத்தின் பெயரும் எண்ணும் ... | 1–15 |
| (1) *உயிரெழுத்து* ... ... | 5–8 |
| (2) *மெய்யெழுத்து* ... ... | 9–13 |
| (3) *உயிர்மெய்யெழுத்து* ... | 14 |
| (4) *ஆய்தவெழுத்து* ... ... | 15 |
| ii. சுட்டெழுத்து ... ... ... | 16 |
| iii. விஞவெழுத்து ... ... ... | 17–18 |
| iv. இனவெழுத்து ... ... ... | 19–20 |
| v. மாத்திரை ... ... ... | 21–26 |
| vi. எழுத்தின் நிலை... ... ... | 27–32 |
| (1) *மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள்* ... ... ... | 27–31 |
| (2, *மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துகள்* ... ... | 32 |
| vii. போலி ... ... ... ... | 33 |
| viii. எழுத்துக்களின் சாரியை ... ... | 34–35 |
| II. *சொல்லியல்* ... ... ... | (36–51) |
| i. சொல் இன்னதென்பது ... ... | 36 |
| ii. சொல்லின் பொதுவிலக்கணம் ... | 37–50 |
| (1) *திணை* ... ... ... | 38–40 |
| (2) *பால்* ... ... ... | 41–46 |
| (3) *எண்* ... ... ... | 47–48 |
| (4) *இடம்* ... ... ... | 49–50 |
| iii. சொற்களின் பாகுபாடு ... ... | 51 |
| III. *பெயரியல்*... ... ... ... | (52–112) |
| i. பெயர்ச்சொல் ... ... ... | 52 |
| ii. *a*. பெயரின் வகை... ... ... | 53–87 |
| (1) *இடுகுறிப்பெயர்* ... ... | 54 |
| (2) *காரணப்பெயர்* ... ... | 55 |

பங்கி எண்கள்.

ii. *b*. பெயர்ச்சொல்லிற் பிற பாகுபாடு ... 56–87

(1) பொருளாதி அறுவகைப்பெயர் 57–62
(2) திணையாதி ஐந்தால் வருபெயர் 63–75
(3) சுட்டுப் பெயர் ... ... 76
(4) வினாப்பெயர் ... ... 77
(5) வினையாலணையும்பெயர் ... 78
(6) எண்ணினடியாகப்பிறந்தபெயர் 79–80
(7) பொதுப்பெயர் ... ... 81–85
(8) இயற்பெயர்... ... ... 86
(9) ஆகுபெயர் ... ... ... 87

iii. வேற்றுமை ... ... ... 88–112

IV. வினையியல் ... ... ... (113–185)

i. வினைச்சொல் ... ... ... 113
ii. வினைச்சொல்லின் வகை ... ... 114–185

(1) தெரிநிலை வினை ... ... 115–124

(*a*) உடன்பாட்டு வினைகள் ... 125–147

1. வினைமுற்று ... ... 126–142

*a*. தன்மை வினைமுற்று ... 128–130
*b*. முன்னிலை வினைமுற்று 131–133
*c*. படர்க்கை வினைமுற்று ... 134–137
*d*. ஏவல் வினைமுற்று ... 138–140
*e*. வியங்கோள் வினைமுற்று 141–142

2. பெயரெச்சம் ... ... 143
3. வினையெச்சம் ... ... 144–147

(*b*) எதிர்மறை வினைகள்... ... 148–157

1. வினைமுற்று ... ... 150–155

*a*. முக்காலத்திற்கும் பொது வானவை ... ... 150–151
*b*. ஒவ்வொரு காலத்திற் குரிய வை ... ... 152

பங்கி எண்கள்

c. ஏவல் வினைமுற்று ... 153–154
d. வியங்கோள் வினைமுற்று.. 155
2. பெயரெச்சம் ... ... 156
3. வினையெச்சம்... ... 157
(2) குறிப்புவினை ... ... 158–167
(a) உடன்பாடு... ... ... 159–161
1. வினைமுற்று ... ... 159
2. பெயரெச்சம் ... ... 160
3. வினையெச்சம் ... ... 161
(b) எதிர்மறை ... ... ... 162–167
1. வினைமுற்று ... ... 164
2. பெயரெச்சம் ... ... 165–166
3. வினையெச்சம் ... ... 167
iii. ஒழிபு ... ... ... ... 168–185
(1) பொது வினைகள் ... ... 168–172
(2) வினைமுடிபு ... ... 173–183
(3) வினையடியாகப் பிறந்த பெயர்கள் ... ... ... 184–185
V. இடையியல் ... ... ... 186–200
VI. உரியியல் ... ... ... ... 201–202
VII. சொற்றொடரியல் ... ... (203–244)
i. சொற்றொடர் இன்னதென்பது ... 203
ii. சொற்றொடர் வகை ... ... 204–244
(1) எச்சச் சொற்றொடர் ... 205
(2) முற்றுச் சொற்றொடர் ... 206–224
(3) தொகைநிலைத் தொடர் ... 225–243
(4) தொகாநிலைத் தொடர் ... 244
VIII. புணரியல்... ... ... ... (245–337)
i. புணர்ச்சி ... ... ... ... 245–253
ii. உயிரீற்றுப் புணர்ச்சி ... ... 254–321
iii. மெய்யீற்றுப் புணர்ச்சி ... ... 322 337

பங்கி எண்கள்.

**IX. பதவியல்** ... ... ... ... (338–374)

i. பதம் ... ... ... ... 338
ii. பகாப்பதம் ... ... ... 339–340
iii. பகுபதம் ... ... ... ... 341–374
(1) *பகுபத உறுப்புகள்* ... ... 343–351
(2) *பெயர்ப் பகுபத உறுப்புகள்*... 352–355
(3) *வினைப் பகுபத உறுப்புகள்* ... 356–374

**X. பொதுவியல்** ... ... ... (375–440)

i. சொல் பொருளை உணர்த்துமாறு ... 375–376
ii. திணைபாலிடப் பொதுமை நீங்குமாறு 377–378
iii. செய்யுள் வழக்கிலாம் சில திரிபுகள் 379–381
iv. சொன் முடிபு ... ... ... 382–388
v. வினாவகை ... ... ... 389
vi. விடைவகை ... ... ... 390
vii. மரபு ... ... ... ... 391–400
viii. வழு ... ... ... ... 401
ix. ஐயமும் துணிவும் ... ... ... 402–403
x. வழுவமைதி ... ... ... 404–410
xi. இருவகைச் சொற்கள் ... ... 411–413
(1) *இயற்சொல்* ... ... 412
(2) *திரிசொல்* ... ... ... 413
xii. வழக்கு ... ... ... ... 414–423
(1) *இயல்பு வழக்கு* ... ... 415–418
(2) *தகுதி வழக்கு* ... ... 419–423
xiii. அந்நிய பாஷைச் சொற்கள்... ... 424–440
(1) *வடசொல் தமிழில் வழங்குமாறு* ... ... ... 429–439
(2) *திசைச் சொற்கள் தமிழில் வழங்குமாறு* ... ... 440

# தமிழ் இலக்கணம்

## I

## எழுத்தியல்.

### 1. எழுத்தின் பெயரும் எண்ணும்.

**1.** மொழிக்கு முதற்காரணமாகிய ஒலியே **எழுத்தாகும்**

இது ஒலிவடிவ **எழுத்து.** இதன் அறிகுறியாகக் கண்ணுக்குப் புலப்படும்படி எழுதப்படுவது வரிவடிவ எழுத்து எனப்படும்.

[குறிப்பு—எழுத்து என்னும் பெயர் வரிவடிவில் எழுதத் தொடங்கிய பின்னர் உண்டானதே. "எழுதப் படுதலின் எழுத்தெனப் படுமே" என்பது சூத்திரம்.]

**2.** எழுத்து — உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் என நான்கு வகைப்படும்.

**3.** உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு, ஆய்தம் ஒன்று, உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு.

[இவ்வெழுத்து முதலெழுத்தென்றும், சார்பெழுத்தென்றும் இரு வகைப்படும்.]

**4.** உயிரும் மெய்யும் முதலெழுத்தென்றும், உயிர்மெய் யும் ஆய்தமும் சார்பெழுத்தென்றும் சொல்லப்படும்.

### (1) உயிரெழுத்து

**5.** உயிரெழுத்துப் பன்னிரண்டு. அவை—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன.

[பிற எழுத்துக்களி னுதவியின்றித் தானே தனித்து உச்சரிக்கப் படும் எழுத்து உயிரெழுத் தெனப்படும்.]

**6.** உயிரெழுத்து—குறில் நெடிலென இருவகைப்படும்.

[குறில் : குறுகியொலிக்கு மெழுத்து. நெடில் : நீண்டொலிக்கு மெழுத்து.]

**7.** அ, இ, உ, எ, ஒ இவ்வைந்துங் குறில்.

[ஆ, ஈ முதலியவற்றைவிட அ, இ முதலியவை குறுகிய ஓசை உடையனவாய் இருத்தலைக் கவனிக்க. இவை குற்றெழுத்து என்றும் கூறப்படும்.]

**8.** ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ இவ்வேழும் நெடில்.

[அ, இ முதலியவற்றைவிட ஆ, ஈ முதலியவை நீண்ட ஓசை உடையனவாய் இருத்தலைக் கவனிக்க. இவை நெட்டெழுத்து என்றும் கூறப்படும்.]

## (2) மெய்யெழுத்து.

**9.** மெய்யெழுத்துப் பதினெட்டு—அவை, க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பன.

உயிரெழுத்தி னுதவியின்றித் தானே தனித்து உச்சரிக்கப்படாத எழுத்து மெய்யெழுத் தெனப்படும்.

[எப்படி ஓர் உடம்பானது உயிரில்லாவிடின் இயங்காதோ அப்படியே மெய்யெழுத்துகளும் உயிரெழுத்துக ளில்லாமல் இயங்க மாட்டா.]

**10.** மெய்யெழுத்து — வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்.

**11.** க, ச, ட, த, ப, ற என்ற இவ்வாறும் வல்லினம். (இவை வன்கணம், வல்லெழுத்து, வன்மை என்றுஞ் சொல்லப்படும். இவை வலிய ஓசையுடன் உச்சரிக்கப்படுவன வாகையினாலே இப் பெயர் பெற்றன.)

**12.** ங, ஞ, ண, ந, ம, ன என்ற இவ்வாறும் மெல்லினம். (இவை மென்கணம், மெல்லெழுத்து, மென்மை என்றுஞ் சொல்லப்படும். இவை மெல்லிய ஓசையுடன் உச்சரிக்கப்படுவன வாகையினாலே இப் பெயர் பெற்றன.)

**13.** ய, ர, ல, வ, ழ, ள என்ற இவ்வாறும் இடையினம். (இவை இடைக் கணம், இடையெழுத்து, இடைமை என்றுஞ் சொல்லப்படும். இவை வலிய ஓசையும் மெல்லிய ஓசையுமின்றி அவ்விரண்டிற்கும் நடுத்தரமான ஓசையுடன் உச்சரிக்கப்படுவன வாகையினாலே இப் பெயர் பெற்றன.)

## (3) உயிர்மெய்யெழுத்து.

**14.** உயிர்மெய் யெழுத்தாவது உயிரும் மெய்யுங் கூடிப் பிறக்கும் எழுத்தாம். உயிர்மெய் யெழுத்து 216.

[குறிப்பு—ஒரு மெய்யெழுத்தினோடு பன்னிரண்டு உயிரெழுத்துகளும் தனித் தனியே கூடுவதனால், பன்னிரண்டு உயிர்மெய் யெழுத்துகள் உண்டாகின்றன. அவ்வாறே, 18 மெய்களோடும் தனித்தனியே பன்னிரண்டு உயிர்களுங் கூடுவதனால் $18 \times 12 = 216$ உயிர்மெய் யெழுத்துகள் உண்டாகின்றன.]

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | க் + அ = க | க் + உ = கு | க் + ஐ = கை |
| | க் + ஆ = கா | க் + ஊ = கூ | க் + ஒ = கொ |
| | க் + இ = கி | க் + எ = கெ | க் + ஓ = கோ |
| | க் + ஈ = கீ | க் + ஏ = கே | க் + ஔ = கௌ |

## (4) ஆய்தவெழுத்து.

**15.** ஆய்தம் குற்றெழுத்துக்குப் பின்னும் உயிரெழுத்தோடு சேர்ந்த வல்லெழுத்துக்கு முன்னும் வரும் ஓர் எழுத்து.

(உ-ம்.) எஃகு, கஃசு, இருபஃது.

## ii. சுட்டெழுத்து.

**16.** அ, இ, உ இம் மூன்றும், சொல்லுக்கு முதலில் அகத்துறுப்பாகவேனும், புறத்துறுப்பாகவேனும் நின்று, சுட்டுப் பொருளைத் தருமாயின் சுட்டெழுத் தெனப்படும்.

[சுட்டுப்பொருளைத் தருதலாவது ஒரு பொருளைக் குறித்துக்காட்டும் அருத்தத்தைக் கொடுத்தலாம்.]

அகரம் தூரத்திலுள்ள பொருளையும், இகரம் சமீபத்திலுள்ள பொருளையும், உகரம் நடுவிலுள்ள பொருளையுங் காட்டும்.

(உ-ம்.) அவன், இவன், உவன்—அகச்சுட்டு.
அக் கொற்றன், இப் பலகை, உவ் வீடு—புறச்சுட்டு.

[அவன் என்பதிலுள்ள அகரம்போலச் சொல்லிற்குள்ளாகவே யோரெழுத்தாய் அமைந்து, பிரித்த காலத்து முதனிலையாகிய சுட்டெழுத்து மாத்திரம் பொருள் தந்து நிற்பது அகச்சுட்டு.

அக் கொற்றன் என்பதிலுள்ள அகரம்போலச் சொல்லிற்கு வெளியேயிருந்து, பிரித்த காலத்து முதனிலையாகிய சுட்டெழுத்தும் மற்றைப் பகுதியுமாகிய இரண்டும் பொருள்தந்து நிற்பது புறச்சுட்டு.

அறம், இடை, உடு முதலிய சொற்களிலுள்ள அகர இகர உகரங்கள் ஒரு பொருளையுங் குறித்துக் காட்டாமையினாற் சுட்டெழுத்துகள் ஆகமாட்டா.

அ, இ, உ, என்னும் இம்மூன்றும் அந்த, இந்த, உந்த எனத் திரிந்தும் வரும்.]

## iii. வினாவெழுத்து

**17.** ஆ, எ, ஏ, ஓ என்னும் இந்நான்கு உயிரும், யா என்னும் உயிர்மெய்யும், சொல்லின்கண் வினாப்பொருளில் வந்தால், வினா எனப்படும்.

வினா = கேள்வி.

[அகச்சுட்டு புறச்சுட்டு என்பன போல, வினாவின் கண்ணும் அகவினா புறவினா என்பன உண்டு.]

**18.** ஆ ஓ சொல்லுக்கீற்றில் புறத்துறுப்பாகவும், ஏ முதலில் அகத்துறுப்பாகவும் ஈற்றிற் புறத்துறுப்பாகவும், எ முதலில் அகத்துறுப்பாகவும் புறத்துறுப்பாகவும், யா என்னும் உயிர்மெய், சொல்லுக்கு முதலில் அகத்துறுப்பாகவேனும், புறத்துறுப்பாகவேனும் நின்று வினாப்பொருளைத் தரும்.

(உ-ம்.) { தச்சனா = (தச்சன் + ஆ)
தச்சனோ = (தச்சன் + ஓ)
பொன்னனே = (பொன்னன் + ஏ) } ஆ, ஓ, ஏ ஈற்றிற் புறத்துறுப்பாக வந்தன.

{ எவன்
ஏவன் } எ, ஏ முதலில் அகத்துறுப்பாக வந்தன.

எக்கொற்றன்—எ முதலில் புறத்துறுப்பாக வந்தது.

{ யாவன்
யாங்ஙனம் } யா முதலில் அகத்துறுப்பாகவும் புறத்துறுப்பாகவும் வந்தது.

## iv. இனவெழுத்து.

**19.** எழுத்துகளுள், பிறப்பு அளவு முதலியவற்றால் ஒன்றுக்கொன்று சம்பந்தமான எழுத்துகள் உண்டு. அவை இனவெழுத்து என்று சொல்லப்படும்.

**20.** அகரத்துக்கு ஆகாரமும், இகரத்துக்கு ஈகாரமும், உகரத்துக்கு ஊகாரமும், எகரத்துக்கு ஏகாரமும், ஐகாரத்துக்கு இகரமும், ஒகரத்துக்கு ஓகாரமும், ஔகாரத்துக்கு உகரமும், ககரத்துக்கு ஙகரமும், சகரத்துக்கு ஞகரமும், டகரத்துக்கு ணகரமும், தகரத்துக்கு நகரமும், பகரத்துக்கு மகரமும், றகரத்துக்கு னகரமும் இனவெழுத்தென்று சொல்லப்படும்.

இடையினம் ஆறும் ஓரினம் எனப்படும்.

[தமக்கென இனமில்லாத ஐகார ஔகாரங்கள் முறையே இகர உகரங்களை இனமாகக் கொள்ளும்.]

| அ—ஆ | இ—ஈ | உ—ஊ | எ—ஏ |
|---|---|---|---|
| (இ)—ஐ | ஒ—ஓ | (உ)—ஔ | |

[இவ்வறைகளில் உள்ள இரண்டிரண்டு உயிரெழுத்துகளில் ஒன்று மற்றொன்றுக்கு இனமாம் என்று கொள்க.]

| க—ங | ச—ஞ | ட—ண | த—ந |
|---|---|---|---|
| ப—ம | ற—ன | | |

[இவ்வறைகளில் உள்ள இரண்டிரண்டு மெய்யெழுத்துகளில் ஒன்று மற்றொன்றுக்கு இனவெழுத்தாம் என்று கொள்க.]

| ய, ர, ல, வ, ழ, ள. |
|---|

[இவ்வறையில் உள்ள எழுத்துகள் ஆறும் ஓரினம்.]

## v. மாத்திரை.

**21.** எழுத்துகள் உச்சரிக்கப்படும் காலஅளவு மாத்திரை எனப்படும்.

**22.** கண்ணிமைப்பொழுதும் கைந்நொடிப்பொழுதும் மாத்திரைக்கு அளவாம்.

குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று ; நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டு ; மெய்யெழுத்துக்கும், குற்றியலுகரத்துக்கும், ஆய்தத்துக்கும், தனித்தனி மாத்திரை அரையாம்.

[குற்றியலுகரம் இன்னது என்பதை 24—வது பங்கியிற் காண்க.]

உயிர்மெய்க்கு மெய்ம்மாத்திரை ஒழிய ஏறிய உயிர்மாத்திரையே மாத்திரையாம். எனவே, உயிர்மெய்க் குற்றெழுத்திற்கு ஒருமாத்திரை எனவும், உயிர்மெய் நெட்டெழுத்துக்கு இரண்டு மாத்திரை எனவுங் கொள்ளவேண்டும்.

**23.** பண்டமாற்றிலும், விளியிலும், இசையிலும், புலம்பலிலும் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் தமக்குச் சொன்ன அளவைக் கடந்து நீண்டொலிக்கும்.

(உ-ம்.) பாலோஒஒ பால்!—பண்டமாற்று.
அம்மாஅஅ! வா.—விளி(=கூப்பிடுதல்).
மகனேஎஎ மடிந்தனையேஎஎ!—புலம்பல்.

[இசையாவது இராகம். இராகத்தில் எழுத்துகளை நீட்டிச் சொல்வது கேட்டறிக.]

## குற்றியலுகரம்.

[உகரம், மாத்திரையின் சுருக்கத்தாலும், இயல்பாலும், குற்றியலுகரம் முற்றியலுகாம் என இருவகைப்படும்.]

**24.** ஒரு குறிலிணுலும் இணைந்துவரும் இரண்டு குறிலிணுலும் ஆக்கப்படாத மொழியீற்று வல்லின மெய்யின்மேல் ஏறிய உகரம் குற்றியலுகரம் எனப்படும்.

**25.** அது ஈற்றெழுத்துக்கு அயலெழுத்தை நோக்கி நெடிற்றொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர் என அறுவகையாம்.

(1) ஈரெழுத்தாலான ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து உயிரும் உயிர் மெய்யுமாகிய நெடில்களு ளொன்ருக வரின் அது நெடிற்றொடராம்.

(உ-ம்.) ஆகு, காசு, பாடு, ஓது, ஏறு.

(2) ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து, தனிநெடி லாகாமல் உயிரும் உயிர்மெய்யுமாகிய குறினெடில்களு ளொன்ருக வரின் அது உயிர்த்தொடராம்.

(உ-ம்.) அலகு, அரசு, குருடு, தனது, எனது, அறிபு, களிறு.

(3) ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து வல்லினமாக வரின் அது வன்றொடராம்.

(உ-ம்.) சுக்கு, கச்சு, பாட்டு, பூத்து, பார்ப்பு, பற்று.

(4) ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து மெல்லினமாக வரின் அது மென்றொடராம்.

(உ-ம்.) சங்கு, நெஞ்சு, வண்டு, வந்து, நம்பு, கன்று.

(5) ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து இடையினமாக வரின் அது இடைத்தொடராம்.

(உ-ம்.) பல்கு, செய்து, சார்பு, போழ்து, தெள்கு.

(6) ஒரு மொழியின் ஈற்றயலெழுத்து ஆய்தமாகவரின் அது ஆய்தத் தொடராம்.

(உ-ம்.) எஃகு, கஃசு, பஃது, கஃறு.

[நெடிற்றொடர்க் குற்றியலுகர மொழிகளெல்லாம் ஈரெழுத்துடையன. மற்ற யாவும் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகளுடையன. இக் குற்றியலுகரமெல்லாம் தமிழ்மொழிக்கேயாம்.]

## முற்றியலுகரம்.

**26**. தனித்தும், தனிக்குறிலைச் சேர்ந்தும் வரும் வல்லின மெய்களின்மேலும், மெல்லின இடையின மெய்களின் மேலும் வரும் உகரம் **முற்றியலுகரமாம்**.

(உ-ம்.) கு, து, நடு, பசு, தாணு, கதவு.

## vi. எழுத்தின் நிலை.

### 1. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள்.

**27**. உயிரெழுத்துப் பன்னிரண்டும், க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ என்னும் ஒன்பது மெய்யெழுத்தும் மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) அடை, ஆடை, இடை, ஈடு, உடை, ஊடல், எடு, ஏடு, ஐயம், ஒதி, ஓதி, ஔவியம்—12 உயிரும் மொழிக்கு முதலாயின.

மெய்யெழுத்து முதலாதற்கு உதாரணம் பின்னர்க் கூறப்படும்.

[மெய்யெழுத்துகள் தனித்து மொழிக்கு முதலில் வாரா; உயிரெழுத்தோடு கூடி உயிர்மெய் யெழுத்தாகவே வரும். ஆயினும் உயிர்மெய் யெழுத்துகளில் ஒற்றொலி முன்னும் உயிரொலி பின்னுமாக வருதலின் மெய்யெழுத்துகள் மொழிக்கு முதலில் வரும் எனப்பட்டன.

க்+அ=க, ப்+ஆ=பா, த்+ஈ=தீ, ம்+ஓ=மோ—என உயிர்மெய்யெழுத்துகளில் மெய் முதலானமை காண்க. உயிரெழுத்து முதலும் மெய்யெழுத்துப் பின்னுமானால் அவை, ஓ+ம்=ஓம் எனத் தனித்தனியே உயிரும் மெய்யுமாக நிற்குமேயொழிய ஒன்று சேர்ந்து உயிர்மெய்யெழுத்தாய் நில்லா என அறிக.]

**28.** ஒன்பது மெய்களிற் க, ச, த, ந, ப, ம என்னும் இவ் வாறு மெய்யும் பன்னிரண் டுயிரோடுங்கூடி மொழிக்கு முதலாகும்.

(உ-ம்.) கடு, கால், கிள்ளை, கீழ்மை, குடில், கூந்தல், கெண்டை, கேழல், கைதவம், கொற்றவன், கோட்டம், கௌவை.

சம்பு, சார்பு, சிறுவன், சீயம், சுகம், சூடகம், செப்பம், சேதகம், சைவம், சொல், சோம்பல், சௌரியம்.

தங்கை, தாளாண்மை, திசை, தீங்கு, துடி, தூய்மை, தெற்றி, தேட்டம், தையல், தொண்டை, தோயம், தௌவை.

நன்மை, நாடு, நிறை, நீட்சி, நுரை, நூல், நெல், நேர்மை, நைதல், நொடி, நோன்பு, நௌவி.

பதி, பாயல், பிதிர், பீழை, புகழ், பூண், பெண், பேதைமை, பையல், பொறுமை, போது, பௌவம்.

மதி, மாளிகை, மின், மீளி, முன், மூங்கில், மெல்லியல், மேடை, மையல், மொழி, மோத்தல், மௌவல்.

**29.** வகரம் அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்கிற எட்டுயிரெழுத்தோடு மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) வலி, வாழை, விளி, வீடு, வெளி, வேலை, வையம், வெளவால்.

**30.** யகரம் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்கிற ஆறுயிரெழுத்தோடு மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) யவனர், யானை, யுகம், யூசம், யோகம், யௌவனம்.

**31.** ஞகரம் அ, ஆ, இ, எ, ஒ என்கிற ஐந்துயிரெழுத்தோடு மொழிக்கு முதலில் வரும்.

(உ-ம்.) ஞமலி, ஞாலம், ஞிமிறு, ஞெண்டு, ஞொள்கிற்று.

## 2. மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துகள்.

**32.** அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பதினொருயிரும் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்கிற பதினொரு மெய்யுமாகிய இருபத்திரண்டெழுத்தும், மொழிக்கு இறுதியில் வரும்.

(உ-ம்.) பல, பலா, இடி, தீ, பந்து, பூ, சே, மனை, நொ, போ, கௌ, உரிஞ், மண், வெரிந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், காழ், புள்.

[மெய்யீறு என்பது ஒற்றீறு. உயிர்மெய் முதலில் வரப்பெற்ற மொழிகள் மெய்ம்முதல் மொழிகளாகக் கொள்ளப்பட்டாற்போல உயிர்மெய் ஈற்றில் வரப்பெற்ற மொழிகள் மெய்யீருகக் கொள்ளப்படா; உயிரீருகவே கொள்ளப்படும் என்பதுணர்க.]

## vii. போலி.

**33.** சில சொற்களில் ஓரெழுத்திருக்குமிடத்து வேருரெழுத்து வருதலு முண்டு. அது போலி யெனப்படும்.

(1) அவற்றுள் இரண்டு குறிலையடுத்த அஃறிணைப் பெயரி னிறுதியிலிருக்கிற மகரத்துக்கு னகாரம் வரும்.

(உ-ம்.) பலம்—பலன்; முகம்—முகன்.

(2) அகரத்திற்குமுன் இகரமும், யகரமும், தனித்தனி வந்தால் ஐகாரத்தை ஒத்தொலிக்கும்.

(உ-ம்.) வைத்தியன்—வயித்தியன் ; வையம்—வய்யம்.

(3) அகரத்துக்கு முன் உகரமும் வகரமும் தனித்தனி வந்தால் ஔகாரத்தை ஒத்து ஒலிக்கும்.

(உ-ம்.) பௌத்தர்—பவுத்தர் ; ஔவை—அவ்வை.

(4) சில சொற்களின் முதலில் நகரத்துக்கு ஞகாரம் போலியாக வரும்.

(உ-ம்.) நாயிறு—ஞாயிறு ; நயம்—ஞயம்.

(5) சில சொற்களின் இடையில் உள்ள தகரத்துக்குச் சகரம் போலியாக வரும்.

(உ-ம்.) பித்து—பிச்சு ; வைத்தபொருள்—வைச்சபொருள்.

(6) சில சொற்களின் இடையில் நகர தகரங்களுக்கு ஞகர சகரங்கள் முறையே போலியாகும். அச் சொற்களின் முதலில் ஐகாரம் இருக்கின் அதற்கு அகரம் போலியாக வரும்.

(உ-ம்.) உய்ந்தனன் — உய்ஞ்சனன் ; நீந்தினான் — நீஞ்சினான் ; ஐந்து—அஞ்சு ; மைந்தன்—மஞ்சன்.

(7) தொடர்மொழி ஐகாரத்தின் கீழ்நின்ற நகரத்துக்கும் ஞகரம் போலியாம்.

(உ-ம்.) ஐந்நூறு—ஐஞ்ஞூறு.

(8) சில சொற்களில் ஈற்று லகரத்துக்கு ரகரமும், சில குற்றியலுகரங்களுக்கு அர் என்பதும் போலியாம்.

(உ-ம்.) பந்தல்—பந்தர் ; சுரும்பு—சுரும்பர் ; வண்டு—வண்டர் ; சிறகு—சிறகர் ; இடக்கு—இடக்கர்.

## viii எழுத்துக்களின் சாரியை.

**34.** மெய்யெழுத்துக்கள் அகரச்சாரியையும், உயிர்நெட்டெழுத்துக்கள் காரச்சாரியையும், உயிர்க்குற்றெழுத்தும் உயிர்மெய்க்குற்றெழுத்தும், கரம், காரம் என்கிற இரண்டு சாரியையும் பெறும்.

(உ-ம்.) க, ங, எனவும், ஆகாரமெனவும், ஐகாரமெனவும், அகரம், மகரம், அகாரம், மகாரமெனவும் வரும்.

**35.** மெய் சாரியை பெற்றே வரும். உயிர்மெய்ந்நெடில் சாரியை பெறாமலே வரும்.

எழுத்தியல் முற்றிற்று.

---

# II

# சொல்லியல்.

## i சொல் இன்னதென்பது.

**36.** எழுத்துகள் தனித்தாவது, இரண்டு முதலாகத் தொடர்ந்தாவது, ஒரு பொருளைத் தெரிவித்தாற் சொல்லாம். அது பொருளை உணர்த்துங்கால் வெளிப்படையாகவேனும் குறிப்பாகவேனும் உணர்த்தும்.

(உ—ம்.) கை, பூ, வா, போ—ஓரெழுத்தா லான சொற்கள். குரு, படம், வந்தான்—பல எழுத்துகள் தொடர்ந்தான சொற்கள்.

[சொல், பதம், மொழி—என்பன ஒரே பொருளன.]

## ii சொல்லின் பொதுவிலக்கணம்.

**37.** சொல்லில் திணை, பால், எண், இடம் இந் நான்கை யும் அறிதல்வேண்டும்.

### (1) திணை.

**38.** திணை என்பது ஜாதி. அது உயர்திணை அஃறிணை என இருவகையாம்.

[உயர்திணை—உயர்வாகிய ஜாதி. அஃறிணை—(உயர்வு) அல்லாத (அதாவது, தாழ்வாகிய) ஜாதி.]

**39.** மக்களும், தேவரும், நரகரும், உயர்திணைப் பொருள்களாவர். மற்ற உயிருள்ளனவும் உயிரில்லாதன வும் ஆகிய எல்லாப் பொருள்களும் அஃறிணைப் பொருள் களாம்.

**40.** மனிதருடைய உடம்பையும் உயிரையும் பிரித்தால் அவையும் அஃறிணையாம்.

### (2) பால்.

**41.** ஆண், பெண், பலர், ஒன்று, பல எனப் பால் ஐந்து.

| | | | |
|---|---|---|---|
| (உ—ம்.) | ஆண்பால் | ... | அவன், அரசன். |
| | பெண்பால் | ... | அவள், அரசி. |
| | பலர்பால் | ... | அவர், அரசர். |
| | ஒன்றன்பால் | ... | அது, பசு. |
| | பலவின்பால் | ... | அவை, பசுக்கள். |

**42.** உயர்திணைக்கு ஆண்பால், பெண்பால், பலர்பால் ஆகிய இம் மூன்றும் உரியன.

**43.** அஃறிணைக்கு ஒன்றன்பால் பலவின்பால் ஆகிய இவ் விரண்டும் உரியன.

[உயர்திணைப் பொருள்களுள் ஆடவருள் ஒருவராயின் ஆண்பால் எனவும், பெண்டிருள் ஒருவராயின் பெண்பால் எனவும், ஆடவரேனும் பெண்டிரேனும் அவ்விருவருங் கலந்தேனும் ஒருவரின் மிக்கவராயின்

பலர்பால் எனவும்; அஃறிணைப் பொருள்களுள் ஒரு பொருளாயின் ஒன்றன் பால் எனவும், ஒன்றின் மிக்க பொருளாயின் பலவின்பால்எனவுங் கொள்க.]

**44.** அஃறிணையிலும், உயிருள்ளவற்றுட் பலவற்றில், ஆண்பாற் பொருளைக் காட்டும் களிறு ஏறு சேவல் என்னும் இவை முதலிய சொற்களும், பெண்பாற் பொருள்களைக் காட்டும் பிடி பெட்டை என்னும் இவை முதலிய சொற்களும் உண்டு. ஆயினும், அஃறிணையில் உயிருள்ளன பலவற்றில் அப் பிரிவு விளக்கமாய்த் தெரியாமையாலும், உயிரில்லாதனவற்றுள் அப் பிரிவு இல்லாமையாலும், அஃறிணை அனைத்திற்கும் ஆண்பால் பெண்பால் என்னும் பகுப்புக் கூறப்படவில்லை

**45.** கடவுளை உயர்திணையாகவும் அஃறிணையாகவுஞ் சொல்லலாம்.

(உ—ம்.) சுவாமி வந்தார், சுவாமி வந்தது.

**46.** ஆணும் பெண்ணும் அல்லாத பேட்டை ஆணுறுப்பு மிகுந்திருந்தால் ஆணாகவும் பெண்ணுறுப்பு மிகுந்திருந்தாற் பெண்ணாகவும் சொல்லலாம். அப்பொழுது அது முறையே அலி எனவும் பேடி எனவும் சொல்லப்படும்.

## (3) எண்.

**47.** எண் என்பது எண்ணிக்கை. ஒரு பொருளைக் குறிக்குஞ் சொல் ஒருமை எனவும், ஒன்றின் மிக்க பொருளைக் குறிக்குஞ் சொல் பன்மை எனவுங் கூறப்படும்.

**48.** ஐந்து பால்களுள் ஆண்பால் பெண்பால் ஒன்றன் பால் என்னும் மூன்று பால்களும் ஒருமை எண்ணுக் குரியன. பலர்பால் பலவின்பால் என்னும் இரண்டும் பன்மை எண்ணுக் குரியன.

| | | | |
|---|---|---|---|
| (உ—ம்.) | தம்பி வந்தான் | — ஆண்பால். | ஒருமை. |
| | தங்கை வந்தாள் | — பெண்பால். | |
| | அது வந்தது | — ஒன்றன்பால். | |
| | மனிதர்கள் வந்தார்கள் | — பலர்பால். | பன்மை. |
| | மரங்கள் வளர்ந்தன | — பலவின்பால். | |

## (4) இடம்.

**49.** இடமாவது சொற்கள் வழங்குதற் குரிய தானம். அது தன்மை முன்னிலை படர்க்கை என மூன்று வகையாம்.

**50.** அவற்றுள், தன்மையிடம் பேசுவோர்; முன்னிலையிடம் முன்னின்று கேட்போர்; படர்க்கையிடம் அவர்களாற் பேசப்படும் மற்றை எல்லாப் பொருள்களுமாம்.

[அவற்றுள் படர்க்கையிடத்தில் இருதிணைகளும் ஐம்பால்களும் தோன்றும். தன்மையிடத்தினும் முன்னிலையிடத்தினும் இருதிணை ஐம்பால்கள் தோன்ற. அவற்றிற்குப் பதில் ஒருமை பன்மை என்னும் எண்கள் தோன்றும்.]

### 1. தன்மை.

| | |
|---|---|
| நான் வந்தேன்<br>யான் ,, | ஒருமை. |
| நாம் வந்தோம்<br>யாம் ,,<br>நாங்கள் ,,<br>யாங்கள் ,, | பன்மை. |

### 2. முன்னிலை.

நீ வந்தாய் — ஒருமை.

| | |
|---|---|
| நீர் வந்தீர்<br>நீங்கள் வந்தீர்கள் | பன்மை. |

### 3. படர்க்கை.

| | | | |
|---|---|---|---|
| (உ—ம்.) | கண்ணன் வந்தான் | — ஆண்பால். | உயர்திணை. |
| | பொன்னி வந்தாள் | — பெண்பால். | |
| | மனிதர்கள் வந்தார்கள் | — பலர்பால். | |
| | அது வந்தது | — ஒன்றன்பால். | அஃறிணை. |
| | அவை வந்தன | — பலவின்பால். | |

## iii சொற்களின் பாகுபாடு.

**51.** தமிழ்ச்சொற்கள் (1) பெயர் (2) வினை (3) இடை (4) உரி—என நான்கு வகைப்படும்.

சொல்லியல் முற்றிற்று.

# III

## பெயரியல்.

### i பெயர்ச்சொல்.

**52.** பெயர்ச்சொல்லாவது *பொருள், இடம், காலம் முதலியவற்றை உணர்த்தி வேற்றுமை சார்தற்கு இடனாய் வரும் சொல்.*

(உ—ம்.) *மரம், மனிதன்; பூமி, வீடு; மணி, மாதம்.*

### ii (*a*) பெயரின் வகை

**53.** *அது இடுகுறிப்பெயர் காரணப்பெயர் என இரு வகைப்படும்.*

#### (1) இடுகுறிப்பெயர்.

**54.** இடுகுறிப்பெயராவது *காரணம் பற்றாது ஒரு பொருளை அறிதற்கு இட்ட பெயராம்.*

(உ—ம்) *மரம், சோறு.*

#### (2) காரணப்பெயர்.

**55.** காரணப்பெயராவது *காரணம் பற்றிப் பொருளை அறிவிக்கும் பெயராம்.*

(உ—ம்.) *நிலம் — (நிலையாய் இருப்பது).*
*பறவை — (பறப்பது).*

### ii (*b*) பெயர்ச்சொல்லிற் பிற பாகுபாடு.

**56.** *பெயர்ச் சொற்கள் தாம் உணர்த்தும் பொருள் முதலியவற்றால் பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்றும்; திணை, பால், எண், இடம் முதலியவற்றால், உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர் என்றும்; ஆண்பாற்பெயர், பெண்பாற்பெயர், ஒன்றன்பாற்பெயர், பலர்பாற்பெயர், பலவின்பாற்பெயர் என்றும்; ஒருமைப்பெயர், பன்மைப்பெயர் என்றும்; தன்மைப் பெயர், முன்னிலைப்பெயர், படர்க்கைப்பெயர் என்றும் பல வகைப்படும்.*

## (1) பொருளாதி அறுவகைப்பெயர்.

**57.** அவற்றுள் பொருளுக்குப் பெயராய் வருவது பொருட்பெயர்.

(உ-ம்.) *மனிதன், பசு, கிளி, மரம், மண், கல், நீர், நெருப்பு, காற்று-என வரும் இவை முதலியன.*

**58.** இடத்துக்குப் பெயராய் வருவது இடப்பெயர்.

(உ-ம்.) *வானம், பூமி, கண்டம், தேசம், ஊர், நாடு, பட்டினம், மேல், கீழ், பக்கம்-என வரும் இவை முதலியன.*

**59.** காலத்துக்குப் பெயராய் வருவது காலப்பெயர்.

(உ-ம்.) *வருஷம், ஆடி, ஞாயிறு, மணி, நாழிகை, நிமிஷம், விநாடி-என வரும் இவை முதலியன.*

**60.** சினைக்கு (= உறுப்புக்கு)ப் பெயராய் வருவது சினைப்பெயர்.

(உ-ம்.) *கண், கை, கால், கொம்பு, வால், இறகு, வேர், இலை, பூ, காய், கனி-என வரும் இவை முதலியன.*

**61.** குணத்துக்குப் பெயராய் வருவது குணப்பெயர்.

(உ-ம்.) *கருமை, வெண்மை, நன்மை, தீமை, அன்பு, அழகு, தண்மை, வெண்மை-என வரும் இவை முதலியன.*

**62.** தொழிலுக்குப் பெயராய் வருவது தொழிற்பெயர்.

(உ-ம்.) *நடத்தல், உண்ணல், படித்தல், வருகை, ஓட்டம், தேர்ச்சி-என வரும் இவை முதலியன.*

## (2) திணையாதி ஐந்தால் வருபெயர்.

**63.** உயர்திணை குறித்து வருவது உயர்திணைப்பெயர்.

(உ-ம்.) *தம்பி, தங்கை, மனிதர், — உயர்திணை.*

**64.** அஃறிணை குறித்து வருவது அஃறிணைப்பெயர்.

(உ-ம்.) *மாடு, கிளி, மரங்கள், — அஃறிணை.*

**65.** ஆண்பாலைக் காட்டும் விகுதிகள் — **அன், ஆன், மன், மான், ன்** என்பனவாம்.

[விகுதியென்பது பகுக்கப்படும் சொல்லின் ஈற்றுறுப்பு.]

| | | | |
|---|---|---|---|
| (உ—ம்.) | பொன்னன் | — அன் | விகுதி. |
| | குழையான் | — ஆன் | ,, |
| | வடமன் | — மன் | ,, |
| | கோமான் | — மான் | ,, |
| | பிறன் | — ன் | ,, |

**66.** பெண்பாலைக் காட்டும் விகுதிகள்—**அள், ஆள், ள், இ** என்பனவாம்.

| | | | |
|---|---|---|---|
| (உ—ம்.) | குழையள் | — அள் | விகுதி. |
| | குழையாள் | — ஆள் | ,, |
| | மகள் | — ள் | ,, |
| | பொன்னி | — இ | ,, |

**67.** பலர்பாலைக் காட்டும் விகுதிகள்—**அர், ஆர், மார், ர், கள்** என்பனவாம்.

| | | | |
|---|---|---|---|
| (உ—ம்.) | குழையர் | — அர் | விகுதி. |
| | குழையார் | — ஆர் | ,, |
| | தேவிமார் | — மார் | ,, |
| | பிறர் | — ர் | ,, |
| | குருக்கள் | — கள் | ,, |

**68.** ஒன்றன்பாலைக் காட்டும் விகுதி **து** என்பதாம்.

(உ—ம்.) குழையது, அது } து விகுதி.

**69.** பலவின்பாலைக் காட்டும் விகுதிகள்—**வை, அ, வ், கள்** என்பனவாம்.

| | | | |
|---|---|---|---|
| (உ—ம்.) | குழையவை, அவை | —வை | விகுதி. |
| | குழையன | —அ | ,, |
| | அவ் | —வ் | ,, |
| | குதிரைகள் | —கள் | ,, |

**70.** இ என்னும் விகுதி, உயர்திணை ஆண்பால் பெண் பால்களிலும், அஃறிணை ஒன்றன் பாலிலும் வரும்.

(உ-ம்.) வில்லி —ஆண்பால்.
குமரி —பெண்பால்.
நாற்காலி—ஒன்றன்பால்.

**71.** ஒருமை எண்ணுக்கு உரியது ஒருமைப்பெயர்.

(உ-ம்.) மனிதன், சிறுவன், சிறியது.

**72.** பன்மை எண்ணுக்கு உரியது பன்மைப்பெயர்.

(உ-ம்.) மாந்தர், பெரியோர், நல்லன.

**73.** தன்மை இடத்துக்கு உரியவை தன்மைப்பெயர்.

(உ-ம்.) நான், நாம்.

**74.** முன்னிலை இடத்துக்கு உரியவை முன்னிலைப்பெயர்.

(உ-ம்.) நீ, நீங்கள்.

**75.** படர்க்கை இடத்துக்கு உரியவை படர்க்கைப்பெயர்.

(உ-ம்.) அவன், அவள், அவர், அது அவை.

[பெயர்ச் சொற்களில், சுட்டுப் பெயர், வினாப் பெயர், வினையாலணையும் பெயர், எண்ணினடியாகப்பிறந்த பெயர், பொதுப்பெயர் என்னும் இவைமுதலிய வேறு சில பிரிவுகளும் உண்டு.]

### (3) சுட்டுப்பெயர்.

**76.** சுட்டுப்பெயராவது சுட்டுப்பொருளை உணர்த்துஞ் சுட்டிடைச் சொற்களைப் பகுதியாகப் பெற்றுவரும் பெயர்.

(உ-ம்.) அவன்.
இவன்
உவன்.
} இவற்றுள், அ, இ, உ, என்னும் சுட்டிடைச் சொற்கள் பகுதியாக வந்தமை அறிக.

[இம் மூன்றும் எழுத்தின் பிரிவுகளைக் கூறுமிடத்துச் சுட்டெழுத்தென்று கூறப்பட்டன வேனும் சுட்டிக்காட்டும் பொருளை உணர்த்தலின் சொல் என்று கூறப்பட்டன எனவும், இடைச்சொல்லுக்குரிய இலக்கணம் பெற்று நிற்றலின் இடைச்சொல் எனப்பட்டன எனவும் கொள்க. இங்ஙனமே பிற்கூறப்படும் வினா இடைச்சொற்களையும் கொள்க.]

## (4) வினைப்பெயர்.

**77.** வினைப் பெயராவது வினை இடைச் சொற்கள் ஐந்தனுள், எ யா என்னும் இவ்விரண்டு வினை இடைச் சொற்களைப் பகுதியாகப் பெற்றுவரும் பெயர்.

[பகுதியாவது பகுக்கப்படும் சொல்லின் முதல் உறுப்பு.]

(உ—ம்.) எவன், யாவன்.—இவற்றுள், எ, யா என்னும் வினை விடைச்சொற்கள் பகுதியாக வந்தமை அறிக.

## (5) வினையாலணையும்பெயர்.

**78.** வினையாலணையும் பெயராவது வினைமுற்றானது பெயர்ச்சொற்களைப் போலப் பொருளை உணர்த்தி, வேற்றுமை உருபுகளை ஏற்று, திரிந்தும் திரியாமலும் வருவது.

(உ—ம்.) வந்தவன் ராமன்.
வந்தானைக் கண்டேன்.

[இவ்விரு தொடர்மொழிகளுள் முன்னதில் வந்தான் என்னும் வினைமுற்று வந்தவன் எனத் திரிந்து நின்று எழுவாய் வேற்றுமையை ஏற்றுவந்ததெனவும், பின்னதில் அது திரியாமல் நின்று இரண்டாம் வேற்றுமையை ஏற்று வந்ததெனவும் அறிக.]

## (6) எண்ணினடியாகப் பிறந்த பெயர்.

**79.** எண்ணினடியாகப் பிறந்த பெயராவது ஒன்று இரண்டு முதலிய எண்களைப் பகுதியாகப் பெற்று வரும் பெயர்.

(உ—ம்.) ஒருவன், ஒருத்தி, இருவர், மூவர்.

**80.** ஆண்பாற் பெயரும் பெண்பாற் பெயரும் எண்ணினடியாகப் பிறக்கும்போது, ஒன்று என்னும் எண்ணினடியாகப்பிறக்கும். இரண்டு முதலிய எண்களின் அடியாகப்பிறவா.

(உ—ம்.) ஒருவன், ஒருத்தி.

ஆண்பாலும் பெண்பாலும் ஒருமை எண்ணுக்குரியன வாகையாலும், இரண்டு முதலிய எண்கள் பன்மை எண்கள் ஆகையாலும், அவ்விருபாற் பெயர்களும் இரண்டு முதலிய எண்களின் அடியாகப் பிறவா என்றறிக.]

## (7) பொதுப்பெயர்.

**81.** பொதுப்பெயர்களானவை, திணைப் பொதுப்பெயர், பாற் பொதுப்பெயர், இடப் பொதுப்பெயர் என மூவகையாம்.

**82.** அவற்றுள், திணைப் பொதுப்பெயர்களாவன உயர்திணை அஃறிணை என்னும் இருதிணைக்கும் பொதுவாய் வரும் பெயர்கள்.

தந்தை தாய் ஆண் பெண் தான் தாம் தாங்கள் முதலிய படர்க்கைப் பெயர்களும், தன்மைப் பெயர்களும், முன்னிலைப் பெயர்களும், இருதிணைக்கும் பொதுவான பெயர்கள்.

| | (உயர்திணை) | (அஃறிணை) | |
|---|---|---|---|
| (உ-ம்.) | தந்தை இவன் | தந்தை இவ்வெருது | படர்க்கைப் பெயர்கள். |
| | தாய் இவள் | தாய் இப்பசு | |
| | ஆண் மகன் | ஆண் பன்றி | |
| | பெண் மகள் | பெண் பன்றி | |
| | அவன் தான் | அது தான் | |
| | அவர் தாம் | அவை தாம் | |
| | அவர்கள் தாங்கள் | அவைகள் தாங்கள் | |
| | யான் நம்பி | யான் கிளி | தன்மைப் பெயர்கள். |
| | யாம் பாணர் | யாம் கிளிகள் | |
| | கண்ணா நீ | கிளியே நீ | முன்னிலைப் பெயர்கள். |
| | தோழர்காள் நீவிர் | கிளிகாள் நீவிர் | |

**83.** ஒருவரென்கிற சொல் உயர்திணை ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவிற் பன்மைவினையைக் கொள்ளும்.

(உ-ம்.) ஆடவருள் ஒருவர் அறத்தின்வழி நிற்பார்; பெண்டிருள் ஒருவர் கொழுநன்வழி நிற்பார்.

**84.** து, வை, விகுதிகளைப் பெறாத அஃறிணைப்பெயர்கள் அத் திணை இருபாலுக்கும் பொதுவாம். இஃது அஃறிணை யியற்பெயர் என்றும் பால்பகா வஃறிணைப்பெயர் என்றும் சொல்லப்படும்.

(உ-ம்.) குதிரை வந்தது, குதிரைவந்தன; மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன.

**85.** ஒரு பெயர்ச்சொல்லே பலவகையாற் பெயர்பெறுதற்கு உரித்தாய் நிற்பதுண்டு.

(உ-ம்.) அவன் – இது உயர்திணைப்பெயர் என்றும், ஆண்பாற்பெயர் என்றும், ஒருமைப்பெயர் என்றும், படர்க்கைப்பெயர் என்றும் சுட்டுப்பெயர் என்றும், சொல்லும்படி நிற்றல் காண்க.

இதனை ஆண்பாற் சுட்டுப்பெயர் என்று கூறலாம். ஆண்பால் என்பதில் உயர்திணையாதலும் ஒருமையாதலும் படர்க்கை ஆதலும் அடங்கும். பிறவும் இப்படியே காண்க.

தன்மை முன்னிலைப் பெயர்கள் வெளிப்படையாகப் பால் உணர்த்தா ; எண்மட்டுமே உணர்த்திவரும் என்பதறிக.

## (8) இயற்பெயர்.

**86.** இப் பெயர்கள் இயற்பெயர் என்றும் ஆகுபெயர் என்றும் இருவகைப்படும்.

இயற்பெயராவது ஒரு பொருளுக்கு இயல்பாகவுள்ள பெயராம்.

## (9) ஆகுபெயர்.

**87.** ஆகுபெயராவது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், நால்வகையான அளவு, சொல், தானி, கருவி, காரியம், கருத்தன் இவை முதலான பெயர்களுள் ஒரு பொருளின் இயற்பெயர் அப்பொருளுக்கிசைந்த பிறிதொரு பொருளுக்குப் பழைய வழியால் ஆகிவருவது. கருவியெனினும் காரணமெனினு மொக்கும்.

(உ—ம்.)

| | |
|---|---|
| **தாமரை**போன்ற பாதம் | .... பொருளாகு பெயர். (முதலாகுபெயரென்றும்சொல்லலாம்.) |
| **ஊர்** அடங்கிற்று | .... இடவாகுபெயர். |
| **கார்** அறுத்தது | .... காலவாகுபெயர். |
| **வெற்றிலை** நட்டான் | .... சினையாகுபெயர். |
| **வெள்ளை** வந்தது | .... குணவாகுபெயர். |
| **வற்றல்** உண்டான் | .... தொழிலாகுபெயர். |
| **கால்**கொண்டு நடந்தான் | .... எண்ணலளவையாகுபெயர். |
| இப் புளி **வீசை** | .... எடுத்தலளவையாகுபெயர். |
| **நாழி** யுடைந்தது | .... முகத்தலளவையாகுபெயர். |
| இந்த வீடு ஐம்பது **அடி** | .... நீட்டலளவையாகுபெயர். |
| அவன் **சொல்லை** யறிந்தான் | .... சொல்லாகுபெயர். |
| **விளக்கு** ஒடிந்தது | .... தானியாகுபெயர். |
| **திருவாசகம்** | .... காரணவாகுபெயர். |
| இந் நூல் **அலங்காரம்** | .... காரியவாகுபெயர். |
| **திருவள்ளுவர்** படித்தான் | .... கர்த்தாவாகுபெயர். |

குறிப்பு : **வெற்றிலை திருவாசகம்** என்னும் இவைபோன்றவை, வெள் திரு முதலிய அடையடுத்து வருதலால், அடையடுத்தவாகுபெயர் எனப்படும்.

## iii. வேற்றுமை.

**88.** *வேற்றுமையாவது, இயல்பாய் நின்ற பெயர்ச்சொல் வேறொரு சொல்லோடு சேரும்போது அப் பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்தி நிற்பதாம்.*

(உ—ம்.) *குதிரை ஓடிற்று.*

[*குதிரை என்னும் பெயர்ச்சொல் ஓடிற்று என்னும் வேறொரு சொல்லோடு சேர்ந்தபோது குதிரையாகிய ஒரு பொருளை உணர்த்துதலாகிய அவ்வர்த்தத்தில் மாத்திரம் நிற்றலினின்றும் வேறுபட்டு ஓடிற்று என்னும் தொழிலுக்குக் கர்த்தாவா யிருத்தலாகிய மற்றோ ரர்த்தத்தையும் ஏற்றுக்கொண்டது. இங்ஙனம் அப் பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடச்செய்வது தான் வேற்றுமையாம். ஒரு மனிதன் முன்னிருந்ததினும் பருத்துத் தோன்றினும் இளைத்துத் தோன்றினும் அவன் இப்போது வேறுபட்டுக் காணப்படுகின்றான் என்பர். அங்ஙனமே, பெயர்ச்சொல் தனக்கு இயல்பாயுள்ள பொருளோடு மற்றொரு பொருளை ஏற்றுக்கொள்ளுதலே இங்கு வேறுபாடு என்று கூறப்படுவதாகும்.*]

**89.** *இவ் வேற்றுமை எட்டு வகைப்படும். ஒரு வேற்றுமைக்கு அறிகுறியாக வருவது, அவ் வேற்றுமைக்கு உருபாம்.*
[*உருபு = உருவு = உருவம்.*]

### முதல் வேற்றுமை.

**90.** *முதல்வேற்றுமையாவது, திரிபில்லாமலிருக்கிற பெயரேயாம். இதனைப் பெயர்வேற்றுமை யென்றும் எழுவாய் வேற்றுமை என்றுஞ் சொல்வதுண்டு. வினையையும் பெயரையும் வினாவையும் கொள்ளவருதல் இதன் பொருளாம். இதை வினைமுதலென்றும், கர்த்தாவென்றும், செய்பவனென்றும் சொல்லலாம்.*

(உ—ம்.) *சாத்தன் வந்தான், பசு வொன்று, அவன் யார்?*

### இரண்டாம் வேற்றுமை.

**91.** *இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ; அதன் பொருள் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒப்புமை, உடைமை முதலியனவாம். இதனைச் செய்பொருள் வேற்றுமை யென்றுங் கருமவேற்றுமை யென்றுஞ் சொல்வதுண்டு.*

(உ—ம்.) *குடத்தைச் செய்தான் .. ஆக்கப்படுபொருள் (குடம்)*
*வீட்டையிடித்தான் .. அழிக்கப்படுபொருள் (வீடு)*
*ஊரையடைந்தான் .. அடையப்படுபொருள் (ஊர்)*

மனைவியை விட்டான் .. நீக்கப்படுபொருள் (மனைவி)
புலியை யொத்தான் .. ஒப்புமைப்படுபொருள் (புலி)
பொன்னை யுடையான் .. உடைமைப்பொருள் (பொன்)

## மூன்றும் வேற்றுமை.

**92.** மூன்றும் வேற்றுமையி னுருபு, ஆல், ஒடு, ஓடு என்பன; அவைகளின் பொருள் கருவிப் பொருளும், கருத்தாப்பொருளும், உடனிகழ்ச்சிப் பொருளும் ஆம். இதனைக் **கருவி வேற்றுமை** யென்பது முண்டு.

(*a*) கருவி, முதற்கருவி துணைக்கருவி என இருவகைப்படும்.

முதற் கருவியாவது செய்யப்படுபொருளோ டொற்றுமை யுடையதாய், செய்யப்படுபொருளுக் கின்றியமையாததாய், தானே செய்யப்படுபொரு ளாவதாயுள்ளது. **துணைக் கருவி** யாவது முதற்கருவி காரியப்படுமளவும் அதற்குத் துணையா யுடனின்று உதவுவது.

(உ-ம்.) மண்ணாற் செய்தகுடம் ... முதற்கருவி (மண்)
தண்டசக்கரங்களாற்செய்தகுடம் ... துணைக்கருவி (தண்டசக்கரங்கள்)

(*b*) **கருத்தா**—இயற்றுதற் கருத்தா, ஏவுதற் கருத்தா என இருவகைப்படும்.

**இயற்றுதற்கருத்தா**வாவது கருவியைத் தொழிற்படுத்துவது. **ஏவுதற்கருத்தா**வாவது இயற்றுதற் கருத்தாவின்றொழிலை யுண்டாக்கும் தொழிலையுடையது.

(உ-ம்.) தச்சனுலாகிய கோயில் ... இயற்றுதற்கருத்தா (தச்சன்)
அரசனுலாகிய கோயில் ... ஏவுதற்கருத்தா (அரசன்)

**முதல் வேற்றுமைக் கருத்தாவிற்கும் மூன்றும் வேற்றுமைக் கருத்தாவிற்குமுள்ள வேறுபாடு :—**

(1) முதல் வேற்றுமைக் கருத்தா தன் விகுதி வினை கொண்டு முடியும்; மூன்றும் வேற்றுமைக் கருத்தா செயப்படுபொருள் விகுதி வினைகொண்டு முடியும்.

(2) முதல்வேற்றுமைக் கருத்தா செய்வினைப் பிரயோகத்திலிருக்கும்; மூன்றும் வேற்றுமைக் கருத்தா செயப்பாட்டு வினைப் பிரயோகத்திலிருக்கும்.

(c) **உடனிகழ்ச்சிப்**பொருளாவது வினைகொண்டு முடியும் பொருளின் தொழிலைத் தன்னிடத்தும் உடனிகழ்வதாக வுடைய பொருளாம்.

(உ—ம்.) தகப்பனோடுமகன்வந்தான்.. உடனிகழ்ச்சிப்பொருள் (தகப்பன்)

இதற்குத் 'தகப்பனும் வந்தான் மகனும் வந்தான்' என்பது பொருள். இதில் எழுவாய் ஆன மகன் தொழிலாகிய வருதலைத் தன்னிடத்தும் உடனிகழக்கொண்டது தகப்பனாதல் அறிக.

## நான்காம் வேற்றுமை.

**93.** நான்காம் வேற்றுமையின் உருபு, **கு**; அதன் பொருள் கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை முதலானவைகளாம். இதனைக் **கோள்வோன் வேற்றுமை** அல்லது **கோளி வேற்றுமை** யென்பது முண்டு.

| | | |
|---|---|---|
| (உ—ம்.) | யாசகர்க்குப் பொன்னைக் கொடுத்தான் | ... கொடை. |
| | பாம்புக்குப் பகை கருடன் | .. பகை. |
| | சாத்தனுக்குச் சிநேகன் கொற்றன் | .. நேர்ச்சி. |
| | விலையுயர்ந்த ஆபரணம் அரசர்க்குரியது | ... தகுதி. |
| | கடுக்கனுக்குப் பொன் | ... அதுவாதல். |
| | கூலிக்கு வேலைசெய்தான் | ... பொருட்டு. |
| | அவனுக்கு இவன் மகன் | ... முறை. |

## ஐந்தாம் வேற்றுமை.

**94.** ஐந்தாம் வேற்றுமையினுடைய உருபு, **இன் இல்** என்பன; அவைகளின் பொருள் நீக்கப்பொருளும், ஒப்புப்பொருளும், எல்லைப்பொருளும், ஏதுப்பொருளுமாம். இதனை **நீக்க வேற்றுமை** யென்பது முண்டு.

| | | |
|---|---|---|
| (உ—ம்.) | மலையின் வீழருவி | .... நீக்கப்பொருள். |
| | காக்கையிற்கரிது களம்பழம் | .... ஒப்புப்பொருள். |
| | மதுரையின் வடக்குச் சிதம்பரம் | .... எல்லைப்பொருள். |
| | கல்வியிற் பெரியவன் கம்பன் | .... ஏதுப்பொருள். |

[இனி ஒப்புப்பொருளை உவமப்பொருவு உறழ்பொருவு என இரண்டாக்குதலுமுண்டு. 'காக்கையிற் கரிது களம்பழம்' என்றபோது, 'காக்கையின்' என்பதற்குக் 'காக்கையைப்போல்' என்பது பொருளாயின் உவமப்பொருவு என்றும், 'காக்கையைக் காட்டினும்'

என்பது பொருளாயின் உறழ்பொருவு என்றுங் கொள்க. எனவே ஏற்றத்தாழ்வு கருதுமிடத்து உறழ்பொருவு கொள்ளப்படும். இதனை எல்லைப்பொருளின்கண் அடக்குவாரு முளர்.]

## ஆரும் வேற்றுமை.

**95.** ஆரும் வேற்றுமைக்கு உருபு, அது, ஆது, அ, உடைய என்பனவாம். அவற்றின் பொருள் பண்பு, உறுப்பு, ஒன்றன் கூட்டம், பலவினீட்டம், திரிபினாக்கம் ஆகிய ஐந்து தற்கிழமைப்பொருளும், பொருள், இடம், காலம் என்கிற மூவகைப் பிறிதின்கிழமைப் பொருளுமாம். இதனை **உடைமை வேற்றுமை** அல்லது **குறைவேற்றுமை** யென்பதுமுண்டு.

பண்பு, குணப்பண்பு தொழிற்பண்பு என இருவகைப் படும்.

| | | | |
|---|---|---|---|
| (உ—ம்.) | சாத்தனது கருமை | .... குணப்பண்பு. | **தற்கிழமை.** |
| | சாத்தனது வரவு | .... தொழிற்பண்பு. | |
| | சாத்தனது கை | .... உறுப்பு. | |
| | மனிதரது கூட்டம் | .... ஒன்றன்கூட்டம். | |
| | படைகளது தொகுதி | .... பலவினீட்டம். | |
| | நெல்லினது பொரி | .... திரிபினாக்கம். | |
| | சாத்தனது பசு | .... பொருள். | **பிறிதின்கிழமை** |
| | சாத்தனது வீடு | .... இடம். | |
| | சாத்தனது நாள் | .... காலம். | |

இதுவன்றி, எனதுயிர் என உடைமையும் உடையதும் வேறாகாத ஒற்றுமைப் பொருளிலும் வரும்; இஃது **ஒற்றுமைக்கிழமை.**

மற்றைய உருபுகளோடும் இவ்வாறே ஒட்டிக்கொள்க.

## ஏழாம் வேற்றுமை.

**96.** ஏழாம் வேற்றுமையின் உருபு, **இல் கண்** முதலானவை; அவ்வுருபின் பொருள், பொருள் முதலாகிய ஆறும், தற்கிழமை பிறிதின்கிழமை இவ்விரண்டிற்கும் இடமாய் நிற்றலாம். இஃது **இடவேற்றுமை** யென்றும் சொல்லப் படும்.

(உ-ம்.)

| | | | |
|---|---|---|---|
| மணியில் ஒளி | .... | தற்கிழமை | பொருள் இட |
| பனையில் அன்றில் | .... | பிறிதின்கிழமை | மாயிற்று. |
| ஊரில் வீடு | .... | தற்கிழமை | இடம் இட |
| ஆகாயத்திற் பருந்து | .... | பிறிதின்கிழமை | மாயிற்று. |
| நாளில் நாழிகை | .... | தற்கிழமை | காலம் இட |
| சித்திரையிற் பாதிரி பூத்தது | .... | பிறிதின்கிழமை | மாயிற்று. |
| கையில் விரல் | .... | தற்கிழமை | உறுப்பு இட |
| கையில் மோதிரம் | .... | பிறிதின்கிழமை | மாயிற்று. |
| கறுப்பில் அழகு | .... | தற்கிழமை | பண்பு இட |
| இளமையிற் செல்வம் | .... | பிறிதின்கிழமை | மாயிற்று. |
| ஆட்டத்தில் அபிநயம் | .... | தற்கிழமை | தொழில் இட |
| ஆட்டத்திற் பாட்டு | .... | பிறிதின்கிழமை | மாயிற்று. |

**97.** ஏழாம்வேற்றுமை இடப்பொருளுருபெல்லாம் சமயம் நேர்ந்துழிக் காலப்பொருள் பயப்பனவாகவுங்கொள்ளப்படும்.

(உ-ம்.) இராமன் படிக்கையிற் கொற்றன் சென்றான். இங்கே 'படிக்கையில்' என்பதற்குப் 'படிக்கும்போது' என்பது பொருள்.

## எட்டாம் வேற்றுமை.

**98.** எட்டாம் வேற்றுமையினுடைய உருபுகள், பெயரினுடைய ஈறு திரிதலும், கெடுதலும், மிகுதலும், ஈற்றயலெழுத்துத் திரிதலும், இயல்பாதலும் முதலியவைகளாம். இவற்றின் பொருள் படர்க்கைப்பொருளை முன்னிலையாக அழைத்தலாம். இதனை **விளிவேற்றுமை** யென்பதே வழக்கு.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) அம்மை - அம்மா | .... | ஈறுதிரிதல். |
| அரசன்—அரச | .... | ஈறுகெடுதல். |
| மகன்—மகனே | .... | ஈறுமிகுதல். |
| தம்பி—தம்பீ | .... | ஈறுநீளல். |
| மக்கள்—மக்காள் | .... | ஈற்றயலெழுத்துநீளல். |
| ஐயன்—ஐயா | .... | ஈறுகெட்டு அயல்நீளுதல். |
| ஐயன்—ஐயே | .... | ஈறுகெட்டு அயல் திரிதல். |
| ஐயன்—ஐயாவே | .... | ஈறுகெட்டு அயல் நீண்டு ஏகாரம் மிகுதல். |
| நல்லன்—நல்லோயே | .... | ஈறும் ஈற்றயலும் திரிந்து ஏகாரம் மிகுதல். |
| தம்பி | .... | இயல்பு. |

**99.** ஐகாரத்தை இறுதியிலுடைய பொதுப்பெயரின் ஈறு, ஆ ஆய் என்று திரியும்.

(உ—ம்.) அன்னை — அன்னா ; பிள்ளை — பிள்ளாய்.

**100.** சில விடங்களில் இவ் ஐகாரங்கள் ஏகாரங்களாகத் திரிதலு முண்டு.

(உ—ம்.) அன்னை — அன்னே.

**101.** உயர்திணை அஃறிணைப் பெயர்களின் ஈற்றைகாரம் ஆய் எனத் திரியும்.

(உ—ம்.) நங்கை — நங்காய், நாரை — நாராய்.

இவ்வைகாரம் ஏகாரமாகத் திரிதலு முண்டு.

**102.** னகரவீற்றுப்பெயர், ஈறுகெடுதலும், ஈறுகெட்டு அயல் நீளுதலும், அதனோடு ஓகாரமிகுதலும், ஏகாரமிகுதலும், இயல்பாதலும், அதனோடு ஏகாரமிகுதலும், ஈறுகெட்டு அயலகரம் ஏகாரமாதலும், விளியுருபாம்.

(உ—ம்.) அப்ப, அப்பா, அப்பாவோ, ஐயாவே, அப்பன், அப்பனே, ஐயே.

**103.** அண்மை விளியில், இயல்பும் ஈறு கெடுதலும்; சேய்மை விளியில், ஈறு நீளுதலும் ஈறுகெட்டு அயல் நீளுதலும், உருபாம் (அண்மை=சமீபம். சேய்மை=தூரம்.)

(உ—ம்.) தம்பி, அப்ப .... .... அண்மைவிளி.
தம்பீ, அப்பா .... .... சேய்மைவிளி.

**104.** தன்மை முன்னிலைப் பெயர்களும், சுட்டுப்பெயரும், வினாப்பெயரும், தான் தாம் என்னும் பொதுப்பெயரும் விளிக்கப்படாவாம்.

**105.** ஐ முதலிய ஆறுருபுகளையும் ஏற்கும்போது தான் தாம் என்னும் படர்க்கைப்பெயர்கள், தன் தம் எனவும்; யான் யாம் நாம் என்னும் தன்மைப் பெயர்கள், என் எம் நம் எனவும்; நீ நீர் என்னும் முன்னிலைப் பெயர்கள், நின் உன் நும் உம் எனவும் முறையே விகாரப்பட்டுக் குவ்வுருபு ஒன்றற்கு மாத்திரம் அகரச்சாரியை பெற்றுவரும்.

(உ—ம்.) தன்னை, தன்னால், தனக்கு, தன்னின், தனது, தன்கண்; தம்மை, தம்மால், தமக்கு, தம்மின், தமது, தங்கண்; என்னை, என்

ஞல், எனக்கு, என்னின், எனது, என்கண் ; எம்மை, எம்மால், எமக்கு, எம்மின், எமது, எங்கண் ; நம்மை, நம்மால், நமக்கு, நம்மின், நமது, நங்கண் ; நும்மை, நும்மால் நுமக்கு நும்மின், நுமது, நுங்கண்.

**106.** நான் என்னுந் தன்மை ஒருமைப்பெயர் முதல் வேற்றுமையில் மாத்திரமே வரும்; ஆதலால் அது வேற்றுமை உருபுகளை ஏற்காது.

(உ-ம்.) நான் கண்டேன்.

**107.** மகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபு களை ஏற்கும்போது அம் என்பது கெட அத்து என்னுஞ் சாரியை பெறும்.

(உ-ம்.) மரம் — மரத்தை, மரத்தால், மரத்துக்கு,..........
இனம் — இனத்தை, இனத்தால், இனத்துக்கு,.........
திறம் — திறத்தை, திறத்தால், திறத்துக்கு,..........

**108.** அவ், இவ், உவ் என்னும் சுட்டுப்பெயர்களும் எவ் என்னும் விஞப்பெயரும் வேற்றுமையுருபுகளை ஏற்கும்போது அற்றுச் சாரியை பெறும்.

(உ-ம்.) அவ் — அவற்றை, அவற்ருல், அவற்றுக்கு,............
இவ் — இவற்றை, இவற்ருல், இவற்றுக்கு,............
உவ் — உவற்றை, உவற்ருல், உவற்றுக்கு,............
எவ் — எவற்றை, எவற்ருல், எவற்றுக்கு,............

**109.** அவை, இவை, உவை என்னுஞ் சுட்டுப் பெயர் களும் எவை என்னும் விஞப்பெயரும், கரியவை நெடியவை முதலிய ஐகாரவீற்று அஃறிணைப் பன்மைப் பெயர்களும் வேற்றுமை உருபுகளை ஏற்கும்போது ஈற்றில் உள்ள ஐகாரம் கெட அற்றுச் சாரியை பெறும்.

(உ-ம்.) அவை — அவற்றை, அவற்ருல், அவற்றுக்கு,..........
இவை — இவற்றை, இவற்ருல், இவற்றுக்கு,..........
உவை — உவற்றை, உவற்ருல், உவற்றுக்கு,............
எவை — எவற்றை, எவற்ருல், எவற்றுக்கு,............
கரியவை—கரியவற்றை, கரியவற்ருல், கரியவற்றுக்கு,..
நெடியவை—நெடியவற்றை, நெடியவற்ருல்,............

**110.** எல்லாம் என்பது உருபுகளை ஏற்கும்போது மகரங் கெட அற்றுச் சாரியை பெற்று, அதன்மேல் உருபுகளில் ஒன் றை ஏற்று, அதன்மேல் உம் என்பதையும் பெற்றுவரும்.

(உ-ம்.) எல்லாம் —(எல்லாம் + அற்று + ஐ + உம்.)
= எல்லாவற்றையும்.
(எல்லாம் + அற்று + ஆல் + உம்.)
= எல்லாவற்ருலும்.
(எல்லாம் + அற்று + கு + உம்.)
= எல்லாவற்றுக்கும்.

மற்ற வேற்றுமைகளுக்கும் இப்படியே.

**111.** எல்லைப்பொருளில் வரும் இன்னுருபும் ஆரும் வேற்றுமை உருபும் பெயரையும், இவையல்லாத வேற்றுமைகள் வினையையும், நான்காம் உருபும் ஏழாம் உருபும் வினையோடு பொருந்திவரும் பெயரையும் கொண்டு முடியும்.

(உ-ம்.) சென்னையின் வடக்குத் திருவொற்றியூர், அவனது கை. பசு வந்தது, வீட்டைக்கட்டினன், பிரம்பா லடித்தான், அவனுக்குக் கொடுத்தான், ஊரின் நீங்கினன், பாயிற் படுத்தான், மயிலே வா. நோய்க்குக் கொடுக்கும் மருந்து, மலையில் உள்ள மருந்து.

**112.** ஆரும் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையும் ஒழிந்த மற்றை வேற்றுமைகள் வினைகொண்டு முடியிற் **காரகம்** என்னப்படும்.

(உ-ம்.)

வீட்டையிடித்தான் : இரண்டாம் வேற்றுமைக் காரகம். வாளால் வெட்டினன் : மூன்ரும் வேற்றுமைக் காரகம். அரசனுக்குக் கொடுத்தான் : நான்காம் வேற்றுமைக் காரகம். மலையினின் றிறங்கினன் : ஐந்தாம் வேற்றுமைக் காரகம். காட்டின்கட் சென்ருன் : ஏழாம் வேற்றுமைக் காரகம். இவை தனித்துவந்த காரகங்கள்.

'இந்திரன் தாமரையைக் கரத்தாற் கொய்து இறைவனுக்குத் தந்து இருங் குற்றத்தி னீங்கி விண்மேலிருந்தான்': இது **ஒருங்கே வந்த காரகம்.** இதில்,

| | | | | |
|---|---|---|---|---|
| இந்திரன் | — முதல் வேற்றுமைக் காரகம் | | | இவை வினை கொண்டு முடிந்தமை கண்டு கொள்க. |
| தாமரையை | — இரண்டாம் | ,, | ,, | |
| கரத்தால் | — மூன்ரும் | ,, | ,, | |
| இறைவனுக்கு | — நான்காம் | ,, | ,, | |
| குற்றத்தின் | — ஐந்தாம் | ,, | ,, | |
| விண்மேல் | — ஏழாம் | ,, | ,, | |

பெயரியல் முற்றிற்று.

# IV

# வினையியல்.

## i. வினைச்சொல்.

**113.** *வினைச் சொல்லாவது, வேற்றுமை ஏற்காமல், காலத்தோடு தோன்றிப் பொருளின் செயலைத் தெரிவிப்பதாம்.*

(உ—ம்.) *வந்தான், வருகிறான், வருவான்.*

## ii. வினைச்சொல்லின்வகை.

**114.** *அது,* தெரிநிலைவினை குறிப்புவினை என இருவகைப் *படும்.*

### (1) தெரிநிலை வினை.

**115.** *அவற்றுள்,* தெரிநிலை *வினையாவது, செயலும் காலமும் வெளிப்படையாகத் தெரிய நிற்கும் வினைச்சொல்.*

(உ—ம்.) *வந்தான்.*

[*இதில் வருதலாகிய செயலும் இறந்தகாலமும் வெளிப்படையாகத் தெரிய நிற்றல் காண்க.*]

**116.** *அது தன்வினை, பிறவினை, செயப்படு பொருள் குன்றியவினை, செயப்படு பொருள் குன்றாவினை, செய்வினை, செயப்பாட்டு வினை என ஆறுவகைப்படும்.*

**117.** *அவற்றுள்,* தன்வினை*யாவது, தன்மை, முன்னிலை, படர்க்கைக் கர்த்தாக்கள் தாமே செய்கின்ற வினை.*

(உ—ம்.) *படித்தேன், படித்தாய், படித்தான்.*

**118.** பிறவினை*யாவது, அக் கர்த்தாக்கள் பிறரால் செய் விக்கும் வினை.*

(உ—ம்.) *படிப்பித்தேன், படிப்பித்தாய், படிப்பித்தான்.*

**119.** செயப்படுபொருள் குன்றிய வினை*யாவது, செயப்படு பொருள் (அதாவது கர்த்தாவின் தொழிலை ஏற்கின்ற பொருள்) இல்லாத வினை.*

(உ—ம்.) *நடந்தான்.*

**120.** செயப்படு பொருள் குன்றா வினை*யாவது செயப்படு பொருள் உள்ள வினை.*

**(உ—ம்.) (வீட்டைக்) கட்டினான்.**

**121.** செயப்படுபொருள் குன்றாவினையானது, செய்பவன், கருவி, இடம், செயல், காலம், செயப்படுபொருள் என்னும் ஆறினையும் அறிவிக்கும். செயப்படுபொருள் குன்றிய வினையாயின் அச் செயப்படுபொருள் ஒழிந்த மற்ற ஐந்தினையும் அறிவிக்கும்.

(உ—ம்.) வனைந்தான்—இது செயப்படுபொருள் குன்றாவினை.
ஓடினான்—இது செயப்படுபொருள் குன்றிய வினை.

[இவற்றுள் வனைந்தான் என்னுஞ் செயப்படுபொருள் குன்றா வினையானது, குயவனாகிய செய்பவனையும், மண் தண்டு சக்கரம் முதலிய கருவிகளையும், முற்றமாகிய இடத்தையும், வனைதலாகிய செயலையும், இறந்தகாலத்தையும், குடமாகிய செயப்படு பொருளையும் அறிவித்தல் காண்க.

'ஓடினான்' என்னும் செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் ஒழிந்த மற்ற ஐந்தினையும் அறிவித்தல் கண்டுகொள்க.]

**122.** செய்வினையாவது, கர்த்தாவின் தொழிலை உணர்த்தும் வினை.

தன்வினை, பிறவினை, செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை இந்த நான்கும் செய்வினையேயாம்.

(உ—ம்.) கொற்றன் (புலியைக்) கொன்றான்.

[இதன்கண் கொன்றான் என்பது கொற்றன் என்னுங் கர்த்தாவின் தொழிலை உணர்த்தினமை யறிக. வினையைச் செய்பவன் கர்த்தா; ஆதலின், கர்த்தாவை வினைமுதல் எனவுங் கூறுவர்.]

**123.** செயப்பாட்டுவினையாவது, கர்த்தாவின் தொழிலைத் தனக்கு விசேஷணமாகப் பெற்றுச் செயப்படு பொருளின் தொழிலை உணர்த்தும் வினையாம்.

இது, தன்வினை பிறவினை செயப்படுபொருள் குன்றாவினையென்னும் மூன்றன் பகுதியோடு அகரச்சாரியையும் படுவிகுதியும் சேர்ந்து வரும்.

(உ—ம்.) கொற்றனாற் (புலி) கொல்லப்பட்டது.

[இதன்கண் கர்த்தாவின் வினை கொல்லுதல்; அதனை விசேஷணமாகப் பெற்ற வினை படுதல்; அது புலி என்னுஞ் செயப்படுபொருளின் வினையாத லறிக.]

**124.** இவ் வினைச் சொற்கள், வினைமுற்று பெயரெச்சம் வினையெச்சம் என மூன்றுவகைப்பட்டு உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

## (a) உடன்பாட்டு வினைகள்.

**125.** உடன்பாட்டு வினைகளாவன தொழிலினது நிகழ்ச்சியை உணர்த்துவன. இவை விதிவினை எனவும் கூறப்படும்.

### 1. வினைமுற்று.

**126.** அவற்றுள் முற்றுவினை யாவது, திணை பால் இடம் என்பவற்றை விளக்கிப் பொருள் முடிந்து நிற்கும் வினை.

(உ-ம்.) படித்தான்.

**127.** முற்றுவினை, (1) தன்மைவினைமுற்று (2) முன்னிலை வினைமுற்று (3) படர்க்கை வினைமுற்று (4) ஏவல் வினைமுற்று (5) வியங்கோள் வினைமுற்று என ஐந்து வகையாம்.

#### (a) தன்மை வினைமுற்று.

**128.** அவற்றுள், தன்மை வினைமுற்றாவது, தன்மைக் கர்த்தாவின் தொழிலை உணர்த்தி வருவது. அது, தன்மை ஒருமை வினைமுற்று தன்மைப் பன்மை வினைமுற்று என இருவகை யாம்.

**129.** ஏன், என், அன், அல் என்பவை தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகளாம். அவற்றுள் அல் விகுதி எதிர் காலத்தில் மாத்திரம் வரும்.

| (உ-ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி |
|---|---|---|---|
| உண்டேன் — | உண்கின்றேன் — | உண்பேன் — | ஏன் |
| உண்டனென் — | உண்கின்றனென் — | உண்குவென் — | என் |
| உண்டனன் — | உண்கின்றனன் — | உண்பன் — | அன் |
| | — | உண்பல் — | அல் |

**130.** அம், ஆம், எம், ஏம், ஓம் என்பவை தன்மைப்பன்மை வினைமுற்று விகுதிகள்.

| (உ-ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி |
|---|---|---|---|
| உண்டனம் — | உண்கின்றனம் — | உண்பம் — | அம் |
| உண்டாம் — | உண்கின்றாம் — | உண்பாம் — | ஆம் |
| உண்டனெம் — | உண்கின்றனெம் — | உண்பெம் — | எம் |
| உண்டேம் — | உண்கின்றேம் — | உண்பேம் — | ஏம் |
| உண்டோம் — | உண்கின்றோம் — | உண்போம் — | ஓம் |

(b) முன்னிலை வினைமுற்று.

**131.** முன்னிலை வினைமுற்றாவது, முன்னிலைக் கர்த்தாவின் தொழிலை உணர்த்திவரும் வினைமுற்று. அதுவும், முன்னிலை ஒருமை வினைமுற்று, முன்னிலைப் பன்மை வினைமுற்று என இருவகையாம்.

**132.** ஐ, ஆய், இ என்பவை முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள். அவற்றுள் இகர விகுதி தானே எதிர்காலத்தைக் காட்டும்.

| (உ-ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி |
|---|---|---|---|
| உண்டனை — | உண்கின்றனை — | உண்பை — | ஐ |
| உண்டாய் — | உண்கின்றாய் — | உண்பாய் — | ஆய் |
| சென்றி — | செல்லாநின்றி — | சேறி — | இ |

**133.** இர், ஈர் என்பவை முன்னிலைப்பன்மை வினைமுற்று விகுதிகள்.

| (உ-ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி |
|---|---|---|---|
| உண்டனிர் — | உண்கின்றனிர் — | உண்பிர் — | இர் |
| உண்டீர் — | உண்கின்றீர் — | உண்பீர் — | ஈர் |

(c) படர்க்கை வினைமுற்று.

**134.** படர்க்கைவினைமுற்றாவது, படர்க்கைக் கர்த்தாவின் தொழிலை உணர்த்தும் வினைமுற்று. அது, படர்க்கை ஆண்பால் வினைமுற்று, படர்க்கைப் பெண்பால் வினைமுற்று, படர்க்கைப் பலர்பால் வினைமுற்று, படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று, படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று என ஐந்துவகையாம்.

**135.** அன், ஆன் என்பவை படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதிகள்.

| (உ-ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி |
|---|---|---|---|
| படித்தனன் — | படிக்கின்றனன் — | படிப்பன் — | அன் |
| படித்தான் — | படிக்கின்றான் — | படிப்பான் — | ஆன் |

**136.** அள், ஆள் என்பவை படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதிகள்.

| (உ-ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி |
|---|---|---|---|
| படித்தனள் — | படிக்கின்றனள் — | படிப்பள் — | அள் |
| படித்தாள் — | படிக்கின்றாள் — | படிப்பாள் — | ஆள் |

அர், ஆர் என்பவை படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதிகள்.

| (உ-ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி |
| --- | --- | --- | --- |
| படித்தனர் | — படிக்கின்றனர் | — படிப்பர் | — அர் |
| படித்தார் | — படிக்கின்றார் | — படிப்பார் | — ஆர் |

**137.** து, று என்பவை படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள். இவற்றுள் று என்பது இறந்த காலத்தில் மட்டுமே வரும்.

| (உ-ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி |
| --- | --- | --- | --- |
| நடந்தது | — நடக்கின்றது | — நடப்பது | — து |
| போயிற்று | | | — று |

அ என்பது படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று விகுதி

| (உ-ம்.) இறப்பு | நிகழ்வு | எதிர்வு | விகுதி |
| --- | --- | --- | --- |
| நடந்தன | — நடக்கின்றன | — நடப்பன | — அ |

(*d*) ஏவல் வினைமுற்று.

**138.** ஏவல் வினைமுற்றாவது, முன்னிலைக் கர்த்தாவை இதுசெய் என ஏவும் வினைமுற்று. அது எதிர்காலத்தில்மாத்திரம் வரும். அதுவும், ஏவல் ஒருமை வினைமுற்று, ஏவற் பன்மை வினைமுற்று என இருவகையாம்.

**139.** ஆய், இ, என்பவை ஏவல் ஒருமை வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) உண்ணாய் — ஆய் விகுதி.
உண்ணுதி — இ ,,

ஏவல் ஒருமை வினைமுற்று விகுதி குன்றி வருதலும் உண்டு.
(உ-ம்.) உண், படி, பார், நட, செய்.

**140.** மின், உம், ஈர் என்பவை ஏவற் பன்மைவினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) உண்மின் — மின் விகுதி
உண்ணும் — உம் ,,
உண்ணீர் — ஈர் ,,

(*e*) வியங்கோள் வினைமுற்று.

**141.** வியங்கோள் வினைமுற்றாவது, இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்குப் பொதுவாய் வரும் வினைமுற்று. இது மரியாதைக் குறிப்பால் வரும் ஏவல். (வியம் = ஏவல்.)

**142.** க, இய, இயர், இ, அ என்பவை வியங்கோள் வினைமுற்று விகுதிகள்.

(உ-ம்.) வாழ்க — க விகுதி
வாழிய — இய ,,
வாழியர் — இயர் ,,
வாழி — இ ,,
வாழ — அ ,,

[இவ் வியங்கோள் வினைமுற்று, நான் வாழ்க, நாம் வாழ்க, நீ வாழ்க, நீர் வாழ்க, அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அது வாழ்க, அவை வாழ்க, என இருதிணை ஐம்பால் மூவிடங்களிலும் வருதல் காண்க.]

## 2. பெயரெச்சம்.

**143.** அகர விகுதியையும், காலங்காட்டும் உம் விகுதியையும் ஈற்றிலுடையதாய்க் காலமும் செயலும் தோற்றிப் பாலுடனே செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படுபொருள் என்கிற ஆறும் ஒழிய நிற்பது பெயரெச்சமாம்.

[இறந்தகாலப் பெயரெச்சத்திலும், நிகழ்காலப் பெயரெச்சத்திலும், அகர விகுதி வரும். அது இடைநிலை ஏற்றுக் காலத்தைக் காட்டும். உம் விகுதி எதிர் காலப் பெயரெச்சத்தில் வரும். இவ் விகுதி தானே காலத்தைக் காட்டும்.

(உ-ம்.) உண்ட, உண்கின்ற, உண்ணும் } சாத்தன்—செய்பவன்.
உண்ட, உண்கின்ற, உண்ணும் } கலம்—கருவி.
உண்ட, உண்கின்ற, உண்ணும் } வீடு—நிலம்.
உண்ட, உண்கின்ற, உண்ணும் } தொழில்—செயல்
உண்ட, உண்கின்ற, உண்ணும் } பகல்—காலம்.
உண்ட, உண்கின்ற, உண்ணும் } சோறு—செயப்படுபொருள்.

### 3. வினையெச்சம்.

**144.** **வினையெச்ச**மாவது, வினையைக்கொண்டு முடியும் எச்சவினையாம்.

**145.** உ, இ, ய், பு, ஆ, **ஊ**, என, என்பவை இறந்தகால வினையெச்ச விகுதிகள்.

| | | விகுதி. | |
|---|---|---|---|
| (உ-ம்.) | செய்து | — உ | இவை **செய்து** என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம் எனப்படும். |
| | கூடி | — இ | |
| | போய் | — ய் | |

**146.** அ என்பது நிகழ்கால வினையெச்ச விகுதியாம்.

(உ-ம்.) கூவ — அ — விகுதி. } இது செயவென்னும் வாய்பாட்டு நிகழ்கால வினையெச்சம் எனப்படும்.

[இந்த விகுதி காரணப் பொருளில் வரும்போது இறந்த காலத்தையும், காரியப்பொருளில் வரும்போது எதிர்காலத்தையும், இவ்விரண்டும் அல்லாத பொருளில் வரும்போது நிகழ்காலத்தையும் உணர்த்தும் என அறிக.]

**147.** **இன், ஆல், கால்,** என்பவை எதிர்கால வினையெச்ச விகுதிகள்.

| | | | |
|---|---|---|---|
| (உ-ம்.) | செயின் | — இன் விகுதி | இவை **செயின்** என்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சம் எனப்படும். |
| | செய்தால் | — ஆல் ,, | |
| | செய்தக்கால் | — கால் ,, | |

### (b) எதிர்மறை வினைகள்.

**148.** எதிர்மறை வினையாவது தொழில் நடவாமையை உணர்த்துவது. இது மறைவினை எனவும் கூறப்படும்.

**149.** இது **ஆ இல் அல்** என்னும் மூன்று இடைநிலைகளில் ஒன்றைப் பெற்று வரும்.

[குறிப்பு: இம் மூன்றையும் எதிர்மறை விகுதிகள் என்று கொள்வதுமுண்டு. ஆகாரம் ஒன்றுமட்டும் படர்க்கைப் பலவின்பால் எதிர்மறை வினைமுற்றில் ஈற்றில் நின்று பலவின்பாற் பொருளையும் எதிர்மறைப் பொருளையும் தானே காட்டும். அங்கு அதனை விகுதி என்றே கொள்ளவேண்டும். மற்ற வினைச்சொற்களில் **ஆ இல் அல்** இம் மூன்றும் பகுதிக்கும் பால்காட்டும் விகுதி முதலியவற்றுக்கும் இடையில் நின்றே எதிர்மறைப்பொருள் உணர்த்தும். ஆதலின் இவை இடைநிலைகளாகக் கொள்ளப்பட்டன. இல் அல் என்பவற்றை எதிர்மறைப் பண்படிகள் என்பது முண்டு.]

## 1. எதிர்மறை வினைமுற்று.

### a. முக்காலத்திற்கும் பொதுவானவை.

**150.** மேற்கூறிய எதிர்மறை இடைநிலைகள் மூன்றனுள் ஆகார இடைநிலை பெரும்பாலும் கெட்டுநிற்கப் பால்காட்டும் விகுதிகளை இறுதியிற்பெற்று வருவன முக்காலத்திற்கும் பொதுவான எதிர்மறை வினைமுற்றுச் சொற்களாம். ஆகார இடைநிலை கெடுவது நெடிலை முதலில் உடைய விகுதியோடு புணருமிடத்தெனஅறிக.

(உ—ம்.)

| | | |
|---|---|---|
| நடவேன் — ஒருமை | } தன்மை. | |
| நடவேம் — பன்மை | | |
| நடவாய் — ஒருமை | } முன்னிலை. | |
| நடவீர் — பன்மை | | |
| நடவான் — ஆண்பால் | } படர்க்கை. | |
| நடவாள் — பெண்பால் | | |
| நடவார் — பலர்பால் | | |
| நடவாது — ஒன்றன்பால் | | |

**151.** படர்க்கைப் பலவின்பால் எதிர்மறை வினைமுற்று ஆகார விகுதி பெற்றுவரும்.

(உ—ம்.) நடவா.

### b. ஓரொரு காலத்துக்குரியவை.

**152.** இறந்தகால வினையெச்சத்தோடும், கின்று என்னும் நிகழ்கால இடைநிலை சேர்ந்த பகுதியோடும், குகரச் சாரியை சேர்ந்த பகுதியோடும் இல் என்னும் எதிர்மறைப் பண்படியும் பால்காட்டும் விகுதியும் சேர்ந்து முறையே முக்கால எதிர் மறை வினைமுற்றுக்களாம்.

(உ—ம்.) நடந்திலன், நடக்கின்றிலன், நடக்கிலன் } படர்க்கை. ஆண்பால்.

பிறபால்களுக்கும் இப்படியே கண்டுகொள்க.

### c. ஏவல் வினைமுற்று.

**153.** எதிர்மறை ஏவலொருமை வினைமுற்றுகள், ஆகார இடைநிலையும், தகர எழுத்துப்பேறும், ஏ இ என்னும் விகுதிகளுள் ஒன்றும் பெற்றுவரும்.

(உ—ம்.) உண்ணாதே, உண்ணாதி.

**154.** எதிர்மறை ஏவற்பன்மை வினைமுற்றுகள் அல் என்னும் இடைநிலையும், மின் என்னும் விகுதியும் பெற்றுவரும்.

(உ-ம்.) உண்ணன் மின், செய்யன் மின்.

*d.* வியங்கோள் வினைமுற்று.

**155.** எதிர்மறை வியங்கோள் வினைமுற்றுகள் பகுதிக்கும் வியங்கோள் விகுதிக்கும் இடையே அல் என்னும் இடைநிலை பெற்றுவரும்.

(உ-ம்.) உண்ணற்க செய்யற்க.

2. எதிர்மறைப் பெயரெச்சம்.

**156.** எதிர்மறை இடைநிலைபோடு மேற்கூறிய பெயரெச்ச விகுதிகளுள், அ என்னும் விகுதியைப் பெற்றுவருவன, எதிர்மறைப் பெயரெச்ச வினைச்சொற்களாம்.

(உ-ம்.) நடவாத, உண்ணாத, செய்யாத, தின்னாத.

இவை, நடவா, செய்யா, என ஈறு கெட்டு வருதலும் உண்டு.

3. எதிர்மறை வினையெச்சம்.

**157.** எதிர்மறை இடைநிலையோடு, மல், து, மை, மே முதலிய விகுதிகளைப் பெற்றுவருவன, எதிர்மறை வினையெச்ச வினைச்சொற்களாம்.

(உ-ம்.) நடவாமல் (மல்). நடவாது (து).
நடவாமை (மை). நடவாமே (மே).

(2) குறிப்பு வினை.

**158.** குறிப்பு வினைகளாவன, காலத்தைக் குறிப்பாக உணர்த்தும் வினைச்சொற்களாம்.

இவை, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் இவ்வாறும் அடியாகத் தோன்றி, முற்றும், பெயரெச்சமும், வினையெச்சமுமாகி வரும்.

(*a*) உடன்பாடு.

1. வினைமுற்று.

**159.** குறிப்பு வினைமுற்றுச்சொற்கள், காலத்தைக் குறிப்பாக உணர்த்திப் பால்காட்டும் விகுதிகளை இறுதியிற்பெற்று முற்றிநின்று பெயரைக்கொண்டு முடிவனவாய் வரும் குறிப்பு வினைச்சொற்களாம்.

(உ-ம்.) பொன்னன், — பொருள்.
அகத்தான், — இடம்.
வேனிலான், — காலம்
கண்ணன், — சினை.
கரியன், — குணம்.
நடையன், — தொழில்.

இவை, அன் ஆன் என்னும் ஆண்பால் விகுதிகளைப் பெற்றவாறும் 'அவன்' முதலிய பெயர்களைக்கொண்டு முடிய நிற்குமாறுங் காண்க.

இவைகளுள், 'பொன்னன்' என்பது, பொன்னையுடையனாயினான் என இறந்தகாலங் கருதியாவது; பொன்னையுடையனாகின்றான் என நிகழ்காலங் கருதியாவது; பொன்னையுடையனாவான் என எதிர்காலங் கருதியாவது, சொல்லுவோன் குறிப்பாற் கேட்போனுக்குக் காலந்தோன்ற உரைக்கப்படுவது. மற்றவைகளும் இப்படியே.

[குறிப்பு வினையில் ஏவலும் வியங்கோளும் இல்லை.]

## 2. பெயரெச்சம்.

**160.** அகரவிகுதி பெற்றுப் பெயரைக்கொண்டு முடிவது, குறிப்புப் பெயரெச்சமாம்.

(உ-ம்.) செய்ய குதிரை, உள்ள மனிதன், கரிய மால், வலிய குதிரை

## 3. வினையெச்சம்.

**161.** அகர ஈறாக நின்று வினையைக்கொண்டு முடிவது குறிப்பு வினையெச்சமாம்.

(உ-ம்.) மெல்லப் போனான், பையச் சென்றான், வலியச் சொன்னான்.

[குறிப்புப் பெயரெச்ச வினையெச்சங்கள் பொருள் முதலிய ஆறினடியாகவும் தோன்றுமாயினும் பண்படியாகத் தோன்றுவதே பெரும்பான்மை.]

## (b) எதிர்மறை.

**162.** குறிப்பில் இன்மையும் அன்மையும் என எதிர்மறை இருவகைப்படும்.

**163.** இன்மை—இல்லாமையைச் சொல்லுதல்; அன்மை—ஒரு பொருளை மறுத்து அதற்கினமானதைச் சொல்லுதல்.

### (1) வினைமுற்று.

**164.** எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுகள் அல் இல் என்னும் எதிர்மறைப் பண்படியாகத் தோன்றிப் பால்காட்டும் விகுதிகளைப் பெற்றுவரும்.

| | | | |
|---|---|---|---|
| அல்லேன் | — | ஒருமை | தன்மை. |
| அல்லேம் | — | பன்மை | |
| அல்லாய் | — | ஒருமை | முன்னிலை. |
| அல்லீர் | — | பன்மை | |
| அல்லன் | — | ஆண்பால் | படர்க்கை. |
| அல்லள் | — | பெண்பால் | |
| அல்லர் | — | பலர்பால் | |
| அன்று | — | ஒன்றன்பால் | |
| அல்ல, அல்லன | — | பலவின்பால் | |

இல் என்பதனோடும் இப்படியே ஒட்டிக் காண்க.

### (2) பெயரெச்சம்.

**165.** அல் இல் என்பவை இடையில் ஆகாரச் சாரியையும் தகரவொற்று எழுத்துப்பேறும் பெற்று, அதன்மேல் அகரவிகுதியைப் புணரின் எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சமாம்.

(உ-ம்.) அல்லாத, இல்லாத.

**166.** எதிர்மறைக் குறிப்புப் பெயரெச்சம், எழுத்துப் பேற்றோடு அகரவிகுதி குன்றியும் வரும். இது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்னப்படும்.

(உ-ம்.) இல்லாக் குதிரை, உண்ணாக் குதிரை.

### (3) வினையெச்சம்.

**167.** அல், இல் என்னும் எதிர்மறைப் பண்படிகள், ஆகாரச்சாரியை இடையிற்பெற்று, மல், மை, மே, து இவ் விகுதிகளில் ஒன்றைப் புணர்ந்தும் சாரியையில்லாமல் றிவ் விகுதியைப் புணர்ந்தும் வந்தால், எதிர்மறைக் குறிப்பு வினையெச்சங்களாம்.

(உ-ம்.) அல்லாமல், இல்லாமல் ; அல்லாமை, இல்லாமை ; அல்லாமே, இல்லாமே ; அல்லாது, இல்லாது ; அன்றி, இன்றி.

## iii. ஒழிபு.

### (1) பொது வினைகள்.

**168.** *சில வினைச்சொற்கள் பொதுவினையாக வரும்.*

*தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவினை.*

(உ-ம்.) *தேற்றிக் கொடுத்தான்.*

*செய்பொருட் குன்றிய வினைக்கும் செய்பொருட் குன்றா வினைக்கும் பொதுவினை.*

(உ-ம்.) *வெளுத்தான்.*

*விதிவினைக்கும் மறைவினைக்கும் பொதுவினை.*

(உ-ம்.) *செய்யாய்.*

*செய்வினைக்கும் செயப்பாட்டுவினைக்கும் பொதுவினை.*

(உ-ம்.) *விண்ட கமலம், விண்ட காய்.*

**169.** *தன்மை வினைமுற்றும், முன்னிலை வினைமுற்றும் ஏவல் வினைமுற்றும், வியங்கோள் வினைமுற்றும், வேறு இல்லை உண்டு யார் வேண்டும் தகும் படும் என்னும் குறிப்பு வினைமுற்றுக்களும், வினையெச்சமும், பெயரெச்சமும் இரு, திணை ஐம்பால்களுக்கும் பொதுவாம்.*

**170.** *செய்யுமென்னும் பெயரெச்சமே படர்க்கை முற்று வினையும் ஆம்.*

(உ-ம்.) *மழை வரும்.*

**171.** *செய்யுமென்னும் பெயரெச்சத்திலும் செய்யுமென்னும் வினைமுற்றிலும் இறுதியிலுள்ள உயிர்மெய் கெடுதலுமுண்டு.*

(உ-ம்.) *சாவுங்குதிரை = சாங்குதிரை, குணமாகும் = குணமாம்.*

*செய்யுமென்னும் ஏவற்பன்மை வினைமுற் றிறுதி யுயிர்மெய்யுங் கெட்டுவரும்.*

(உ-ம்.) *போம் பெரியோரே.*

**172.** *செய்யுமென்னும் முற்று உயர்திணைப் படர்க்கை யொருமைக்கும் அஃறிணைப் படர்க்கை யொருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் வரும்.*

(உ-ம்.) அவன் நடக்கும், அவள் நடக்கும், அது வரும், அவை வரும்.

அவன் நடக்கும் = அவன் நடப்பான்.
அவள் நடக்கும் = அவள் நடப்பாள்.

## (2) வினைமுடிபு.

**173.** தன்மையோடு முன்னிலையையாவது, படர்க்கையையாவது, அவ்விரண்டையுமாவது சேர்த்து ஒரு வினை கொண்டு முடிக்கும்போது ஓம் விகுதியால் முடிக்க.

(உ-ம்.) நானும் நீயும் போனோம், நானும் அவனும் போனோம், நானும் நீயும் அவனும் போனோம்.

**174.** முன்னிலையோடு படர்க்கையைச் சேர்த்து முடிக்கும்போது முன்னிலைக்குரிய ஈர் விகுதியால் முடிக்க.

(உ-ம்.) நீயும் அவனும் போனீர்.

**175.** உயர்திணைச் சொல்லையும் அஃறிணைச் சொல்லையும் எண்ணி, ஒரு வினை கொண்டு முடிக்கும்போது, உயர்திணைப் பலர்பால் வினைமுற்றைக் கொண்டு முடிக்க.

(உ-ம்.) சாத்தனும் குதிரையும் போனார்கள்.

**176.** உயர்திணைத் தன்மைச்சொல்லோடு அஃறிணையைக் கொண்டு முடிக்குங்கால், தன்மைப் பன்மை வினைமுற்றால் முடிக்க.

(உ-ம்.) நானும் குதிரையும் போனோம்.

**177.** முன்னிலைச்சொல்லோடு அஃறிணையை எண்ணி முடிக்குங்கால், முன்னிலைப்பன்மை வினைமுற்றால் முடிக்க.

(உ-ம்) நீயும் குதிரையும் போனீர்கள்.

**178.** செய்தென்னும் வினையெச்சம் தன் வினைமுதல் வினையைக் கொண்டு முடியும்.

(உ-ம்.) உண்டு வந்தான்.

**179.** செயவென்னும் வினையெச்சமும் செயினென்னும் வினையெச்சமும், தன் வினைமுதல் வினையையும் வேறு வினைமுதல் வினையையுங் கொண்டு முடியும்.

(உ-ம்.) அவனுண்ண வந்தான்—தன் வினைமுதல் வினையைக் கொண்டுமுடிந்தது.

அவன் வரப் பார்த்தேன்—வேறு வினை முதல்வினையைக் கொண்டு முடிந்தது.

அவன் உண்டால் வருவான்—தன்வினை முடிவு.
அவன் உண்டாற் போவேன்—வேறுவினை முடிவு.

**180.** செயவெனெச்சம் செய்தெனெச்சமாகத் திரிந்தாலும் அதன் பொருள் திரியாது.

(உ-ம்.) நான் வந்து பொன்னன் போனான்—என்பதற்கு நான் வரப் பொன்னன் போனான் என்பது பொருள்.

**181.** ஓர் எழுவாயோடு இரண்டு வினைமுற்று இயைந்தால் முதலில் இருக்கும் வினைமுற்றை வினையெச்சமாக்கிக்கொள்க. இதற்கு முற்றெச்சம் என்று பெயர்.

(உ-ம்.) சாத்தன் உண்டான் போனான் = சாத்தன் உண்டு போனான்.

**182.** ஒரே பெயரோடு இரண்டு மூன்று பெயரெச்சங்கள் இயைந்தால் முதலிலுள்ள பெயரெச்சங்களையெல்லாம் வினையெச்சமாக்கிக்கொள்க.

(உ-ம்.) வந்த உண்ட போன சாத்தன் = வந்து உண்டு போன சாத்தன்.

**183.** நடந்தான் முதலிய உடன்பாட்டு வினைமுற்று எதிர்மறைக் குறிப்புப் பொது வினைமுற்றோடாயினும், எதிர்மறைக் குறிப்புச் சிறப்பு வினைமுற்றோடாயினும் சேர்ந்தால் எதிர்மறையையே காட்டும்

(உ-ம்.) நடந்தானில்லை, நடந்தானிலன், நடந்தானல்லன்.
நடந்தாயில்லை, நடந்தாயிலாய், நடந்தாயல்லை.

### (3) வினையடியாகப் பிறந்த பெயர்கள்.

**184.** மேற்பெயரியலில் கூறப்பட்ட தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் வினைப்பகுதியடியாகப் பிறப்பனவாதலால் வினைச்சொல்லோடு சேர்த்துக் கூறப்படுதற்கும் உரிமையுடையனவாம்.

**185.** தொழிற்பெயர் பால் காட்டும் விகுதி பெறுமலும் வினையாலணையும் பெயர் பால் காட்டும் விகுதி பெற்றும் வரும்.

வினையியல் முற்றிற்று.

# V
## இடையியல்.

**186.** **இடைச்சொல்லாவது** பெயர்வினைகளைப் போலத் தனித்துவாரமல் அவைகளைச் சார்ந்து பொருளை புணர்த்தி வருஞ் சொல்லாம்.

அவை, வேற்றுமை உருபுகளும், விகுதிகளும், இடைநிலைகளும், சாரியைகளும், உவமை உருபுகளும், சுட்டும், வினாவும், தத்தம் பொருளை உணர்த்துவனவும் எனப் பலவகையாம்.

**187.** அவற்றுள், வேற்றுமை உருபுகளாவன:—முற்கூறப் பட்ட இரண்டாம் வேற்றுமை உருபு முதலியன.

**188.** விகுதிகளாவன:—சொல் உறுப்பிற் கூறப்படும் **அன் ஆன்** முதலியன.

**189.** இடைநிலைகளாவன: —சொல் உறுப்பிற் கூறப்படும் **த் ட் ற் இன்** முதலியன.

**190.** சாரியைகளாவன:—சொல் உறுப்பிற் கூறப்படும் **அற்று அத்து அன்** முதலியன.

**191.** உவமை உருபுகளாவன:—**போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன** முதலியன.

**192.** சுட்டிடைச் சொற்களும் வினாவிடைச் சொற்களு மாவன: — எழுத்தியலிற் கூறப்பட்ட சுட்டெழுத்துகளும் வினாவெழுத்துகளும்.

**193.** தத்தம் பொருளை உணர்த்தும் இடைச்சொற்களா வன, **ஏ, ஓ, உம், மற்று, முன், பின்** முதலியன.

**194.** ஏகாரம், தேற்றத்திலும் பிரிநிலையிலும் வினாவிலும் ஈற்றசையிலும் வரும்.

(உ—ம்.) கடவு**ளே** உயர்ந்தவர் .... தேற்றம்.
அவ**னே** கொண்டான் .... பிரிநிலை.
நீ**யே** கொண்டாய்? .... வினா.
" வகுத்தனர் கொள**லே** " .... ஈற்றசை.

**195.** ஓகாரம் ஐயத்திலும் எதிர்மறையிலும் வினாவிலும் சிறப்பிலும் வரும்.

(உ—ம்.) குற்றியோ மகனோ .... ஐயம்.
பசுவோ வந்தது .... வினா.
அவனோ கொண்டான் .... எதிர்மறை.
ஓ ஓ பெரியன் .... உயர்வு சிறப்பு.
ஓ ஓ கொடியன் .... இழிவு சிறப்பு.

**196.** உம்மை, எதிர்மறையிலும் சிறப்பிலும் ஐயத்திலும் எச்சத்திலும் முற்றிலும் எண்ணிலும் வரும்.

(உ—ம்.) வருதற்கு முரியன் .... எதிர்மறை.
குறவரும் மருளுங் குன்று .... உயர்வு சிறப்பு.
புலையனும் விரும்பாத யாக்கை .... இழிவு சிறப்பு.
பத்தாயினும் எட்டாயினுங் கொடு .... ஐயம்.
சாத்தனும் வந்தான் .... எச்சம்.
எல்லாரும் வந்தார் .... முற்று.
சாத்தனும் கொற்றனும் வந்தார். .... எண்.

**197.** மற்று என்பது, பிறிதென்னும் பொருளில் வரும்.

(உ—ம்.) அறஞ் செய்யத்தக்கது, மற்றது செய்யத்தகாதது.

**198.** பின் முன் என்பன, காலப்பொருளையும் இடப் பொருளையுந் தந்து ஏழாம் வேற்றுமைப் பொருளிலேயே வரும் இடைச்சொற்களாம்.

(உ—ம்.) பின் பிறந்தான், முன் பிறந்தான். பின் உட்கார்ந்தான், முன் உட்கார்ந்தான்.

**199.** பின் என்பதொன்றும் மற்றென்னும் பொருளிலும் வரும்.

(உ—ம்.) அதை யன்றிப் பின் எதைச் செய்வேன் ?

**200.** பின் முன் என்பவை, பின்பு, முன்பு ; பின்னை, முன்னை ; பின்னர், முன்னர் எனவும், மற்று என்பது மற்றை எனவும் விகாரப்பட்டு வரும்.

இடையியல் முற்றிற்று.

# VI

## உரியியல்.

**201.** உரிச்சொற்களாவன, தனித்து வழங்குதல் இன்றிப் பெயர் வினைகளை அடுத்து நின்று அவற்றின் குணத்தை யுணர்த்தும் உரிமை உடைய சொற்கள்.

**202.** அவை, ஒரு சொல் ஒரு குணத்தை உணர்த்து வனவும், ஒரு சொல் பல குணத்தை உணர்த்துவனவும் என இருவகையாம்.

(உ—ம்.) சால — இது "மிகுதி" என்னும் ஒரு பொருள் உணர்த்துவது.

கடி—இது, காப்பு, கூர்மை, விரைவு, அச்சம், முதலிய பல பொருள் உணர்த்துவது.

மற்றவைகளு மிப்படியே.

உரியியல் முற்றிற்று.

---

# VII

## சொற்றொடரியல்.

### i. சொற்றொடர்.

**203.** சொற்றொடராவது, சொற்கள் அர்த்தத்தினால் ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்டுத் தொடர்ந்து நிற்பது.

### ii. சொற்றொடர்வகை.

**204.** அது எச்சச் சொற்றொடர் என்றும், முற்றுச் சொற்றொடர் என்றும் இருவகையாம்.

இவற்றுள் ஒரு சொல்லோடு பிறிதொருசொல் தொடருமிடத்து (*a*) தொகைநிலைத்தொடரும் (*b*) தொகாநிலைத்தொடரும் என இருவகைத் தொடரில் ஒன்றாகத் தொடரும்.

### (1) எச்சச்சொற்றொடர்.

**205.** எச்சச் சொற்றொடராவது, பொருள் முடியாமல் நிற்கும் சொற்றொடர்.

(உ—ம்.) வீட்டுக்குச் சென்று—
அவனும் இவனும் —
வந்த மனிதன் —

(2) முற்றுச்சொற்றொடர்.

**206**. முற்றுச் சொற்றொடராவது பொருள் முடிந்து நிற்குஞ் சொற்றொடர்.

(உ—ம்.) ராமன் வந்தான்.
நான் படித்தேன்.
நீ கடிதம் எழுது.
இவன் ராமன்.

**207.** முற்றுச் சொற்றொடர் வாக்கியம் என்றும் சொல்லப்படும்.

**208**. வாக்கியமாவது, எழுவாய் பயனிலை என்னும் முக்கிய உறுப்புகளை உடையது.

**209**. அவற்றுள், எழுவாய் ஆவது, வாக்கியம் உண்டாவதற் குரிய இடம்.

[எழு = உண்டாகும் ; வாய் = இடம்.]

**210.** பயனிலையாவது, ஒன்றோடு ஒன்றாய்த் தொடர்ந்த சொற்கள் வாக்கியம் ஆவதற்குரிய அர்த்தம் தன்னிடம் பொருந்தப் பெற்றிருப்பது.

[பயன் = அர்த்தம், நிலை = நிற்கப்பெற்றது.]

['ராமனும், கிருஷ்ணனும்,' என்றாலும், 'ராமன் கிருஷ்ணன் என்னும் இருவர்' என்றாலும் சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து நிற்கின்றன. ஆனால் அவற்றால் வாக்கியம் ஆவதற்குரிய அர்த்தம் ஏற்படவில்லை. 'ராமனும் கிருஷ்ணனும் வந்தனர்,' 'அல்லது ராமன் கிருஷ்ணன் என்னும் இருவர் வந்தனர்' என்றால், வாக்கியம் ஆவதற்குரிய அர்த்தம் ஏற்படுகிறது. இங்கே எந்தச் சொல்லைச் சேர்த்தபிறகு வாக்கியம் ஆவதற்குரிய அர்த்தம் ஏற்பட்டதோ அந்தச் சொல்லே பயனிலை. மேற்காட்டிய வாக்கியங்களில் 'வந்தனர்' என்னும் சொல்லைச் சேர்த்த பிறகுதான் வாக்கியம் ஆவதற்குரிய அர்த்தம் ஏற்பட்டது. ஆகையால் அவ் வாக்கியங்களில் 'வந்தனர்' என்பதே பயனிலையாம்.]

**211**.- எழுவாய் எப்பொழுதும் பெயர்ச்சொல்லாகவே இருக்கும். பயனிலை பெரும்பாலும் வினைச்சொல்லாகவும் சிறுபான்மை பெயர்ச்சொல்லாகவும் இருக்கும்.

(உ—ம்.) ராமன் வந்தான்.

[இதில், ராமன்—எழுவாய் ; வந்தான்—பயனிலை. இங்கு எழுவாய் பெயர்ச்சொல்லாகவும், பயனிலை வினைச்சொல்லாகவும் இருக்கின்றன.]

அவன் ராமன்.

[இதில், அவன்—எழுவாய் ; ராமன்—பயனிலை. இங்கே எழுவாய் பெயர்ச்சொல். ஆனால் பயனிலை வினைச்சொல் அன்று ; பெயர்ச்சொல்.]

**212**. சில வாக்கியங்களில் எழுவாய் பயனிலைகளே யன்றிச் செயப்படுபொருள் என்று மற்றோர் உறுப்பும் வருதலுண்டு

**213**. செயப்படுபொருளாவது கர்த்தா செய்கின்ற தொழிலை ஏற்கின்ற பொருள்.

(உ—ம்.) ராமன் வீட்டைக் கட்டினான்.

[இதில், ராமன் என்னுங் கருத்தா செய்த தொழிலாகிய கட்டுதலை ஏற்ற பொருள் 'வீடு' என்பது. ஆதலால், வீடு செயப்படுபொருள் ஆகும்.]

**214**. பெயர்ச்சொல் பயனிலையாக இருக்கும் வாக்கியத்தினும், செயப்படுபொருள் குன்றியவினை பயனிலையாய் உள்ள வாக்கியத்தினும் செயப்படுபொருள் வராது. செயப்படுபொருள் குன்றாவினை பயனிலையாயுள்ள வாக்கியத்தில் மாத்திரமே செயப்படுபொருள் வரும்.

**215.** சாதாரணமாய், ஒரு வாக்கியத்தில் எழுவாய் முதலிலும், பயனிலை கடையிலும், செயப்படுபொருள் இடையிலுமாக வரும்.

(உ—ம்.) (எழுவாய்) (செயப்படுபொருள்) (பயனிலை.)
அவன் பாடத்தைப் படித்தான்.

**216.** சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து நிற்பதும் உண்டு.

(உ—ம்.) இதை எடு. ('நீ' என்னும் எழுவாய் மறைந்து நின்றது.)
பூவைப் பறித்தேன். ('நான்' என்னும் எழுவாய் மறைந்து நின்றது.)

**217.** ஒரு வாக்கியத்தின் பயனிலைக்குமுன், யார், எது, எவை என்னும் வினாச்சொற்களில் பொருத்தமான ஒன்றை வைத்து வினவினால் வரும் விடையே எழுவாயாம்.

தன்மை முன்னிலை வினைகள் பயனிலையானால், அவற்றைப் படர்க்கை ஒன்றன்பால் வினைபோல வைத்து யார் என்னும் வினாவால் வினவவேண்டும்.

| (உ—ம்.) | வாக்கியம் | | வினா | எழுவாய். |
|---|---|---|---|---|
| தன்மை. | நான் வந்தேன் | — | (யார் வந்தது?) | நான். |
| | நாம் வந்தோம் | — | (யார் வந்தது?) | நாம். |
| முன்னிலை. | நீ வந்தாய் | — | (யார் வந்தது?) | நீ. |
| | நீர் வந்தீர் | — | (யார் வந்தது?) | நீர். |
| படர்க்கை. | அவன் வந்தான் | — | (யார் வந்தான்?) | அவன். |
| | அவள் வந்தாள் | — | (யார் வந்தாள்?) | அவள். |
| | அவர் வந்தார் | — | (யார் வந்தார்?) | அவர். |
| | அது வந்தது | — | (எது வந்தது?) | அது. |
| | அவை வந்தன | — | (எவை வந்தன?) | அவை. |

**218.** ஒரு வாக்கியத்தின் பயனிலைக்கு முன், யாரை, எதை, எவற்றை என்னும் வினாச்சொற்களைத் தக்கபடி வைத்துக் கேள்வி கேட்டால், விடைபெறக் கூடாததானால் அது செயப்படுபொருள் இல்லாத வாக்கியம் எனவும், விடை பெறக் கூடியதானால் அது செயப்படுபொருள் உள்ள வாக்கியம் எனவும் நாம் அறிந்துகொள்ளலாம்.

(உ—ம்.) அவன் வந்தான்.
அவன் பார்த்தான்.

[இவற்றுள், 'வந்தான்' என்னும் பயனிலைக்குமுன் யாரை, எதை, எவற்றை என்னும் வினாச்சொற்களில் எந்தச் சொல்லை வைத்து வினவியபோதிலும் விடைபெற முடியாது ; ஆதலால், 'அவன் வந்தான்' என்பது செயப்படுபொருள் இல்லாத வாக்கியமாம். 'பார்த்தான்' என்னும் சொல்லுக்குமுன் அவ்வினாச்சொற்கள் மூன்றில் எந்தச் சொல்லை வைத்துக் கேட்டாலும் விடைபெறக்கூடும் ; ஆதலால், 'அவன் பார்த்தான்' என்பது செயப்படுபொருள் உள்ள வாக்கியமாம்.]

[ஒருவாக்கியத்தில் செயப்படுபொருள் அறிதற்குரிய வகையும் இதுவே.]

**219.** ஒரு வாக்கியத்தில் பயனிலையும் எழுவாயும் திணை, பால், இடம், எண்களால் ஒத்திருக்கவேண்டும்.

கீழ்வரும் வாக்கியங்களில் பயனிலையும் எழுவாயும் திணை, பால், இடம், எண்களால் ஒத்திருத்தல் காண்க.

| (உ—ம்.) | | எழுவாய் | — பயனிலை. | |
|---|---|---|---|---|
| தன்மை. | 1. | நான் | — வந்தேன் | (ஒருமை.) |
| | 2. | நாம் | — வந்தோம் | (பன்மை.) |
| முன்னிலை. | 3. | நீ | — வந்தாய் | (ஒருமை.) |
| | 4. | நீர் | — வந்தீர் | (பன்மை.) |
| படர்க்கை. | 5. | அவன் | — வந்தான் | (ஆண்பால்.) |
| | 6. | அவள் | — வந்தாள் | (பெண்பால்.) |
| | 7. | அவர் | — வந்தார் | (பலர்பால்.) |
| | 8. | அது | — வந்தது | (ஒன்றன்பால்.) |
| | 9. | அவை | — வந்தன | (பலவின்பால்.) |

**220.** எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்கள் அடையடுத்தும் வருதலுண்டு.

(உ—ம்.) 1. நல்ல பையன் வந்தான்.
2. அவன் நொண்டிக் குதிரையை அடித்தான்.
3. நாய் வெடுக்கென்று கடித்தது.

[இவைகளில், 1. 'நல்ல' என்பது பையன் என்னும் எழுவாயையும் 2. 'நொண்டி' என்பது குதிரை என்னும் செயப்படுபொருளையும், 3. 'வெடுக்கென்று' என்பது கடித்தது என்னும் பயனிலையையும் அடுத்து வந்த அடைமொழிகளாகும். ஆகையால், 'பையன்' என்னும் எழுவாயும், 'குதிரை' என்னும் செயப்படுபொருளும், 'கடித்தது' என்னும் பயனிலையும் அடையடுத்து வந்தன வாகும்.]

**221.** எழுவாய் ஒன்றும் பலவும் ஒரே பயனிலையையும் பல பயனிலைகளையும் கொள்ளும்; பல பயனிலைகளாகிய வினைகளிற் கடைசி வினைமாத்திரம் முற்றுவினையாம்.

(உ—ம்.) 'இவனும் அவனும் தோட்டத்தில் இருந்தார்கள்' என்பதில் இரண்டு எழுவாயும் ஒரே பயனிலை கொண்டன.

'அரசன் மந்திரியை அழைத்துக் காரியத்தை விசாரித்து உத்தரவு சொன்னான்' என்பதில் ஒரே எழுவாய் மூன்று பயனிலைகளைக் கொண்டது.

**222.** சில விடங்களில், பல பயனிலைகளைக் கொண்ட வாக்கியத்தில், முற்கூறியவாறு கடைசி வினைமாத்திரம் முற்றுவினையாக நிற்க மற்றவை எச்சவினையாக மாறுவதுபோக, யாவும் முற்றுவினையாக நிற்றலும் உண்டு.

(உ—ம்.) மனிதன் பிறந்தான், வளர்ந்தான், தவழ்ந்தான், நடந்தான், கிடந்தான், இறந்தான்.

**223.** ஒரு வாக்கியத்தில், எழுவாயடை பயனிலையடை செயப்படுபொருளடை இவைகளையல்லாமல், வேறு அடைமொழிகளும் இடத்துக்குத் தக்கபடி வருதல் உண்டு. அவை **இடைப்பிறவரல்** எனப்படும்.

(உ-ம்.) அறிவிலி நான், வீணிலே, பல மலர்களைப் பறித்து எறிந்தேன்.

இதில், நான் – எழுவாய்; எறிந்தேன் – பயனிலை; மலர்களை– செயப்படுபொருள்; அறிவிலி – எழுவாயடை; பறித்து – பயனிலையடை; பல–செயப்படுபொருளடை; வீணிலே–**இடைப்பிறவரல்.**

**224.** ஒரு வாக்கியத்திலே மற்றொரு எழுவாயும் பயனிலையும் உள்ள வாக்கியம் வந்தால், அது 'என்று' என்னும் இடைச் சொல்லாலே பிரிக்கப்பட்டு முதல் எழுவாயையும் முதற் பயனிலையையும் தழுவிக்கொண்டு இடைப்பிறவரலாய் நிற்கவேண்டும்.

(உ-ம்) ஆசிரியர் மாணாக்கனுக்கு 'நான் சீக்கிரமாய் வருவேன், பாடங்களைப் படித்துவை' என்று கட்டளையிட்டார்.

## (3) தொகைநிலைத்தொடர்.

**225.** வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத் தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை எனத் தொகைநிலைத் தொடர்மொழிகள் அறுவகைப் படும்.

**226.** ஐ முதலிய ஆறுருபும் வெளிப்படாமல் தொக்க தொடர்மொழிகள் **வேற்றுமைத்தொகையாம்.**

(உ-ம்.) நிலங்கடந்தான் — இரண்டாம் வேற்றுமைத்தொகை.
கல்லெறிந்தான் — மூன்றாம் வேற்றுமைத்தொகை.
சாத்தன் மகன் — நான்காம் வேற்றுமைத்தொகை.
ஊர் நீங்கினான் — ஐந்தாம் வேற்றுமைத்தொகை.
சாத்தன்கை — ஆறாம் வேற்றுமைத்தொகை.
காட்டுப்புலி — ஏழாம் வேற்றுமைத்தொகை.

**227.** இவை **வேற்றுமைத் தழுவுதொடர்** என்றும் பெயர் பெறும்.

**228.** இவ் வேற்றுமைத் தொகைகளுள் உருபுகள் விரிந்த விடத்துச் சொற்கள் பொருட்பொருத்த முறுது நிற்குமா

யின் அவை வேற்றுமைத் தழாத்தொடர் அல்லது உருபும் பயனுமுடன்றொக்க தொகை யெனப்படும்.

(உ-ம், கைக்களிறு என்பதிற், கையைக் களிறு என ஐயுருபு விரிந்தும் பொருள் முடியாமல் இடையில் வருவிக்கப்பட்ட 'உடைய' என்னும் வேறு ஒரு சொல்லோடு முடிந்தது. மற்றை வேற்றுமைகளு மிப்படியே.

**229.** காலங்காட்டும் இடைநிலையும் பெயரெச்சவிகுதியும் ஒழியப் பகுதி யளவாய் நின்று பெயரை அவாவி நிற்பது **வினைத்தொகையாம்.**

(உ-ம்.) கொல்யானை, விடுகணை.

நேற்று விடுகணை—இறந்தகால வினைத்தொகை.

இன்று விடுகணை—நிகழ்கால வினைத்தொகை.

நாளை விடுகணை—எதிர்கால வினைத்தொகை

இவை விட்ட, விடுகிற, விடும் என்று விரியும்.

**230.** போ, சா, மோ என்னும் பகுதிகளையுடைய பெயரெச்சங்கள் ஈறுகெட்டு வினைத்தொகை யாகா.

**231.** தா வா, தரு வரு என்றும், நட இற, நடந்திடு இறந்திடு என்றும் விகாரப்பட்டு, வினைத்தொகையாம்.

**232.** வினைத்தொகை செய்பொருளின்மைக்கும் செய்பொருளுண்மைக்கும் பொதுவாகிய பகுதியிற் செய்பொருள் இன்மைக்கே பெரும்பான்மை வரும்.

(உ-ம்.) இடி அறு கரை இவற்றோடு, சுவர் கயிறு பொருள் என்பவற்றைக் கூட்டுக. இங்ஙனம் கூட்டப்பெற்ற தொகை வினைகள் விரிந்தால், இடிந்த, இடிகின்ற, இடியும் என வருமேயன்றி, இடித்த, இடிக்கின்ற, இடிக்கும் என வாராமை காண்க. மற்றையனவு மிப்படியே.

உரைகல், கரைகல், என்பவை வழக்கிற் செய்பொருளில் வரும். இவை செயப்பாட்டு வினைத்தொகையெனவும் படும்.

**233.** பண்புக்கும் பண்பிக்கும் நடுவே அவற்றிற்கு உண்டாயிருக்கிற ஒற்றுமை நயத்தை விளக்கும் 'ஆகிய' என்னும் பண்புருபு தொக்கது **பண்புத்தொகையாம்.**

இது—வண்ணம், வடிவு, அளவு, சுவை இவைகளால் நான்கு வகைப்படும்.

(உ-ம்.) செந்தாமரை, கருங்குவளை .... வண்ணப்பண்புத்தொகை.
வட்டக்கல், சதுரப்பலகை .... வடிவுப்பண்புத்தொகை.
ஒருபொருள், எழுகடல் .... அளவுப்பண்புத்தொகை.
துவர்க்காய், இன்சொல் .... சுவைப்பண்புத்தொகை.

இவற்றில் முதலிலுள்ளன முறையே செம்மையாகிய, வட்டமாகிய, ஒன்றாகிய, துவராகிய என விரியும்.

மற்றவைகளுக்கு மிப்படியே.

**234.** ஒருபொருளுக்கு உண்டாயிருக்கிற பொதுப்பெயருக்கும் சிறப்புப்பெயருக்கும் நடுவில் 'ஆகிய' என்னும் உருபு தொக்க தொடர் இருபெயரொட்டுப்பண்புத்தொகையாம்.

(உ-ம்.) சாரைப்பாம்பு, ஆயன் சாத்தன், வைகையாறு, பொதியமலை, அசோகமரம், மதுரைநகர்.

**235.** உருவகவணி பற்றிக் கூறும்போதும் இத் தொகை நிகழும்.

(உ-ம்.) முக மதி—இது முகமாகிய மதியென விரியும்.

**236.** வினை, பயன், மெய், உரு இவைகளைப்பற்றி வரும் உவமையுருபு தொக்க தொடர்மொழி உவமைத்தொகையாம்.

(உ-ம்.) குருவி கூப்பிட்டான் .... வினையுவமைத்தொகை.
கற்பகக் கையான் .... பயனுவமைத்தொகை.
உடுக்கை யிடை .... மெய்யுவமைத்தொகை.
பவளவாய் .... உருவுவமைத்தொகை.

**237.** போல், நேர், நிகர் முதலியவை உவமையுருபுகளாம்.

(உ-ம்.) குருவிபோலக் கூப்பிட்டான்
கற்பகம்போலும் கையான் } என விரியும்.

**238.** இடையிலும் கடையிலும் உம்மை தொக்க சொற்களின் தொடர் உம்மைத்தொகையாம்.

இது—எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை நீட்டலளவை இவற்றால் நான்கு வகைப்படும்.

(உ-ம்.) ஒன்றேகால், கபிலபரணர் .... எண்ணலளவை
கழஞ்சேகால் .... எடுத்தலளவை
கலனே தூணி .... முகத்தலளவை
சாணங்குலம் .... நீட்டலளவை } உம்மைத் தொகை

இவை முறையே ஒன்றுங் காலும், கபிலனும் பரணனும், கழஞ்சுங் காலும், கலனுந் தூணியும், சாணும் அங்குலமும் என விரியும்.

**239.** வேற்றுமைத்தொகை முதலிய ஐவகைத் தொகைக்கும் புறத்தில் வேறுமொழி தொக்குவருவது அன்மொழித் தொகையாம்.

(உ-ம்.) பூங்குழல்—இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

தாழ்குழல்—வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

கருங்குழல்—பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

துடியிடை—உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

உயிர்மெய்—உம்மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

இவை முறையே பூவை முடித்த குழலையுடையாள்; தாழ்ந்த குழலினையுடையாள்; கருமையாகிய குழலையுடையாள்; துடிபோன்ற இடையை யுடையாள்; உயிரும் மெய்யுங் கூடிப்பிறந்த எழுத்து என விரியும்.

**240.** முன்மொழியும், பின்மொழியும், பன்மொழியும், புறமொழியும் என்கிற நான்கிடங்களிலும் தொகை நிலைத் தொடர் பொருள் சிறந்து நிற்கும்.

(உ-ம்.) வேங்கைப்பூ, செந்தாமரை—முன்மொழியிற் பொருள் சிறந்தன.

கண்ணிமை, வெண்மதி—பின்மொழியிற் பொருள் சிறந்தன.

பாக்குவெற்றிலை, சேர சோழ பாண்டியர் — பன்மொழியிற் பொருள் சிறந்தன.

தேன்மொழி, கருங்குழல்—(இவற்றையுடைய) பெண் என்கிற புறமொழியிற் பொருள் சிறந்தன.

**241.** உயர்திணை ஒருமையில் வருகிற உம்மைத் தொகை, ரவ்வொற்றும் கள்ளீறுமாகிய பலர்பால் விகுதியையுடையதாம்.

(உ-ம்.) கபிலபரணர், சேரசோழ பாண்டியர், தேவன்றேவிகள்.

**242.** அஃறிணை ஒருமையிலும் திணைப்பொது ஒருமையிலும் வருகிற உம்மைத்தொகை பன்மை விகுதி பெற்றும் பெறாதும் வரும்.

(உ-ம்.) ஆடுமாடுகள், ஆடுமாடு; தாய்தந்தையர், தாய் தந்தை.

**243.** வேற்றுமை யுருபுகள் முதலியன தொக்குநின்றவழி, பொருள்களினாலே மயங்குந் தன்மையையுடைய தொடர் மொழிகள் இரண்டுமுதல் ஏழீறாகிய பொருள்களால் மயங்கும்.

(உ—ம்.) 'தெய்வவணக்கம்' என்பது தெய்வத்தை வணங்குகின்ற வணக்கம், தெய்வத்துக்கு வணக்கம் என இருபொருளாலே மயங்கியது.

'நீர்மோர்' என்பது நீரையுடைய மோர், நீரோடுகூடிய மோர், நீரும் மோரும் என மூன்று பொருள்களாலே மயங்கியது.

'சொல்லிலக்கணம்' என்பது சொல்லின் இலக்கணம், சொற்கு இலக்கணம், சொல்லில் இலக்கணம், சொல்லிலக்கணஞ் சொன்ன நூல் என நான்கு பொருள்களாலே மயங்கியது.

'பொன்மணி' என்பது பொன்னாலாகியமணி, பொன்னாகிய மணி, பொன்னின்கண்மணி, பொன்னோடு சேர்ந்தமணி, பொன்னும் மணியும் என ஐந்துபொருள்களாலே மயங்கியது.

'மரவேலி' என்பது மரத்தைக் காக்கிறவேலி, மரத்துக்குவேலி, மரத்தினது வேலி, மரத்தின் புறத்துவேலி, மரத்தாலாகிய வேலி, மரமாகியவேலி என ஆறு பொருள்களாலே மயங்கியது.

'சொற்பொருள்' என்பது சொல்லால் அறியப்படுகிற பொருள், சொல்லினதுபொருள், சொல்லுக்குப் பொருள், சொல்லின் கட்பொருள், சொல்லும் பொருளும், சொல்லாகிய பொருள், சொல்லானது பொருள் என ஏழுபொருள்களாலே மயங்கியது.

## (4) தொகாநிலைத்தொடர்.

**244.** வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம், எழுவாய், விளி, வேற்றுமையுருபுகள் விரிந்து நிற்கும் புணர்ச்சி, இடைச்சொற் புணர்ச்சி, உரிச்சொற்புணர்ச்சி, அடுக்குப் புணர்ச்சி இவ்வொன்பதும் தொகாநிலைத் தொடர்மொழிகளாம்.

| | | |
|---|---|---|
| (உ—ம்.) உண்டான் சாத்தன் | .... | வினைமுற்றுத்தொடர். |
| உண்டசாத்தன் | .... | பெயரெச்சத்தொடர். |
| உண்டுவந்தான் | .... | வினையெச்சத்தொடர். |
| சாத்தன்வந்தான் | .... | எழுவாய்த்தொடர். |
| கொற்றுகொள் | .... | விளித்தொடர். |
| குடத்தைச்செய்தான் | .... | உ—ஆம் வேற்றுமைவிரி. |
| (மற்ற வேற்றுமை விரிகளுங்கொள்க.) | | |
| மற்றொன்று | .... | இடைச்சொற்றொடர். |
| நனிபேதை | .... | உரிச்சொற்றொடர். |
| பாம்பு பாம்பு | .... | அடுக்குத்தொடர். |

சொற்றொடரியல் முற்றிற்று.

# VIII

## புணரியல்.

### i புணர்ச்சி.

**245.** புணர்ச்சியாவது இரண்டு மொழிகள் ஒன்றுபட்டிணங்குவதாம்.

**246.** அவற்றுள், முதலில் நிற்கும் மொழி நிலைமொழியாம் அதற்குப் பின்னே வந்து அதனோடு சேரும் மொழி வருமொழியாம்.

(உ-ம்.) அவன் வந்தான்.
இதில் 'அவன்' நிலைமொழி ; 'வந்தான்' வருமொழி.

**247.** நிலைமொழியீறும் வருமொழி முதலுமே புணர்ச்சி நிகழுமிடமாம்.

**248.** புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சியென்றும் அல்வழிப் புணர்ச்சியென்றும் இருவகைப்படும்.

**249.** வேற்றுமைப் புணர்ச்சியாவது ஐ, ஆல், கு, இன், அது, இல் என்னும் ஆறுருபுகளும் மொழிக்கு நடுவில் மறைந்தும் வெளிப்பட்டும் நிற்கப் பதங்கள் பொருந்தும் புணர்ச்சியாம்.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) | நீர் குடித்தான் | .... ௨-ஆம் வேற்றுமைத்தொகை. |
| | நீரைக்குடித்தான் | .... ௨-ஆம் வேற்றுமை விரி. |
| | கல்லெறிந்தான் | .... ௩-ஆம் வேற்றுமைத்தொகை. |
| | கல்லாலெறிந்தான் | .... ௩-ஆம் வேற்றுமை விரி. |
| | கூலிவேலை | .... ௪-ஆம் வேற்றுமைத்தொகை. |
| | கூலிக்குவேலை | .... ௪-ஆம் வேற்றுமை விரி. |
| | மலைவீழருவி | .... ௫-ஆம் வேற்றுமைத்தொகை. |
| | மலையின் வீழருவி | .... ௫-ஆம் வேற்றுமை விரி. |
| | சாத்தன் கை | .... ௬-ஆம் வேற்றுமைத்தொகை. |
| | சாத்தனது கை | .... ௬-ஆம் வேற்றுமை விரி. |
| | காட்டுப்புலி | .... ௭-ஆம் வேற்றுமைத்தொகை. |
| | காட்டிற்புலி | .... ௭-ஆம் வேற்றுமை விரி. |

**250.** அல்வழிப் புணர்ச்சியாவது வேற்றுமை உருபுகள் இடையில் வராமல் நிலைமொழியும் வருமொழியும் ஒன்று

படப் புணர்வது. அது பதினான்கு வகைப்படும் [அப் பதி னான்கு வகைகளையும் பின்வரும் உதாரணங்களிற் கண்டு கொள்க.]

(உ-ம்.)

| | | |
|---|---|---|
| 1. | கொல்யானை | .... வினைத்தொகை. |
| 2. | கருங்குதிரை | .... பண்புத்தொகை. |
| | சாரைப்பாம்பு | .... இருபெயரொட்டுப்பண்புத்தொகை. |
| 3. | மதிமுகம் | .... உவமைத்தொகை. |
| 4. | இராப்பகல் | .... உம்மைத்தொகை. |
| 5. | தேன்மொழி வந்தாள் | .... அன்மொழித்தொகை. |
| 6. | சாத்தன் வந்தான் | .... எழுவாய்த்தொடர். |
| 7. | சாத்தா வா | .... விளித்தொடர். |
| 8. | வந்தகுதிரை | .... தெரிநிலைப் பெயரெச்சத்தொடர். |
| | பெரியசாத்தன் | .... குறிப்புப் பெயரெச்சத்தொடர். |
| 9. | வந்துபோனான் | .... தெரிநிலை வினையெச்சத்தொடர். |
| | விருந்தின்றி யுண்ணான் | .... குறிப்பு வினையெச்சத்தொடர். |
| 10. | வந்தான் சாத்தன் | .... தெரிநிலை வினைமுற்றுத்தொடர். |
| 11. | பொன்னனிவன் | .... குறிப்பு வினைமுற்றுத்தொடர். |
| 12. | மற்றொன்று | .... இடைச்சொற்றொடர். |
| 13. | நனிபேதை | .... உரிச்சொற்றொடர். |
| 14. | பாம்பு பாம்பு | .... அடுக்குத்தொடர். |

**251.** இப் புணர்ச்சிகளுள் ஒவ்வொன்றும் இயல்பு புணர்ச்சி விகாரப்புணர்ச்சி என இருவகைப்படும்.

**252.** நிலைமொழியும் வருமொழியும் ஒருவித வேறுபாடும் அடையாமற் புணர்வது இயல்பு புணர்ச்சியாம்.

(உ-ம்.) பொன்மணி ; அலைபெரிது.

**253.** பதங்கள் ஒன்றோடொன்று புணரும்போது இடை யில் எழுத்தாவது சாரியையாவது தோன்றுதலும், நிலைமொழி யீற்றெழுத்தாவது வருமொழி முதலெழுத்தாவது திரிதலும், கெடுதலும் அடைந்த புணர்ச்சி விகாரப்புணர்ச்சி எனப்படும். இது சந்தி யென்றுஞ் சொல்லப்படும். இவ்வாறு ஓரெழுத்துத் தோன்றுவதைத் தோன்றல் விகாரமென்றும், திரிந்து வருவ தைத் திரிதல் விகாரமென்றும், கெட்டு வருவதைக் கெடுதல் விகாரமென்றுஞ் சொல்லுவர்.

(உ—ம்.) மா + காய் = மாங்காய்
ஆல் + காய் = ஆலங்காய் } தோன்றல் விகாரம்.
எள் + நெய் = எண்ணெய் .... திரிதல் விகாரம்.
மரம் + வேர் = மரவேர் .... கெடுதல் விகாரம்.

## ii உயிரீற்றுப் புணர்ச்சி.

**254.** இ, ஈ, ஐ இம்மூன்று உயிர்களுக்குமுன் உயிர்வந்தால் யகரம் உடம்படுமெய்யாக வரும்.

உயிரோடு உயிர்க்கு மயக்கமில்லாமையாலும் ஈருயிர் ஓருடம்பிலிருத்த லிசையாமையாலும் வருமுயிர்க்கு உடம்பாக அடுக்கும் மெய் உடம்படுமெய்யாம். அன்றி ஈருயிரையும் உடன்படுத்தும் பொருட்டுவரும் மெய்யாதலின் உடம்படுமெய் என்னலுமாம். அப்பொழுது உடன்படுமெய் என்பது உடம்படுமெய் என மருவிற்று எனக.

(உ—ம்.) மணி + அழகு = மணியழகு, தீ + அழகு = தீயழகு, மனை + அழகு = மனையழகு.

**255.** அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ இவ் வாறு உயிருக்குமுன் உயிர்வந்தால் இடையில் வகரம் உடம்படுமெய்யாக வரும்.

(உ—ம்.) பல + அழகு = பலவழகு, பலா + அழகு = பலாவழகு, மது + அழகு = மதுவழகு, பூ + அழகு = பூவழகு, கோ + அழகு = கோவழகு, கௌ + அழகு = கௌவழகு.

**256.** அது, இது, உது, எது என்னும் உகரவீற்றுச் சுட்டுப்பெயர் முன்னும் வினாப்பெயர் முன்னும் உயிரெழுத்து வந்தால் நிலைமொழியினிடையே ஆய்தம் பெரும்பாலும் விரியும். இது எது இவ்விரண்டும் முதல் நீளவும் பெறும்.

(உ—ம்.) அது + ஒளிரும் = அஃதொளிரும்.
இது + எங்கே = இஃதெங்கே ; ஈதெங்கே.
உது + ஓடும் = உஃதோடும்.
எது + இருந்தது = எஃதிருந்தது ; ஏதிருந்தது.

**257.** ஓரெழுத் தொருமொழியாகிய ஏ, சே, தே என்னும் பெயர்ச்சொல் ஏகாரத்துக்குமுன் உயிர்வந்தால் வகரமும், பண்புச்சொல்லின் விகாரமாகிய சே என்பதற்குமுன் உயிர்

வந்தால் யகரமும் வகரமும் தோன்றும். இனி, ஏகாரத்தை எடுத்து உச்சரிக்கும்போது யகரமும், படுத்து உச்சரிக்கும் போது வகரமுந் தோன்றுதல் காண்க.

(உ–ம்.) ஏ + அழகு = ஏவழகு, சே + அழகு = சேவழகு, தே + அழகு = தேவழகு. சே + அடி = சேயடி, சேவடி.

**258.** இடைச்சொல் ஏகாரத்துக்குமுன் உயிர்வந்தால் யகரமே உடம்படுமெய்யாகும்.

(உ–ம்.) அவனே + அடித்தான் = அவனேயடித்தான்.

**259.** எகரவினா முன்னும், சுட்டு முன்னும் உயிரும் யகரமும் வந்தால் வகரமும், மற்றை மூன்றினமும் வந்தால் அந்த அந்த எழுத்தும் தோன்றும்.

(உ–ம்.) எ + உயிர் = எவ்வுயிர், எ + யானை = எவ்யானை, அ + உயிர் = அவ்வுயிர், அ + யானை = அவ்யானை, எ + காலம் = எக்காலம், எ + நாள் = எந்நாள், எ + வலி = எவ்வலி, அ + காலம் = அக்காலம், அ + நாள் = அந்நாள், அ + வலி = அவ்வலி.

**260.** குற்றியலுகரத்தின் முன் உயிர்வந்தால் உகரங் கெட்டு அது ஏறிய மெய்யில் வந்த உயிரேறும்.

(உ–ம்.) நாடு + ஆண்டான் = நாடாண்டான்.

**261.** குற்றியலுகரம் வடமொழியா யிருந்தாற் கெடாது.

இதனைக் குற்றியலுகர மென்னாது முற்றுகரமென்னலே சிறப்பு.

(உ–ம்.) சம்பு + ஐ = சம்புவை, விண்டு + ஐ = விண்டுவை, இந்து + ஐ = இந்துவை.

**262.** தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்த கு, சு, டு, து, பு, றுக்களாகிய முற்றிய லுகரத்துக்கு முன் உயிர் வந்தால் அவ்வுகரங் கெடாமல் உடம்படுமெய் தோன்றும்.

(உ–ம்.) வெகு + அழகு = வெகுவழகு, பசு + அழகு = பசுவழகு, மடு + அழகு = மடுவழகு, மது + அழகு = மதுவழகு, மறு + அறுத்தான் = மறுவறுத்தான்.

**263.** டுகர றுகர வீறுகளையுடைய உயிர்த்தொடர்க் குற்றிய லுகரத்திற்கு முன்னும், நெடிற்றொடர்க் குற்றிய லுகரத்

திற்கு முன்னும், வேற்றுமையில் நாற்கணமும் வந்தால் உகர மேறிய மெய் இரட்டும்.

(உ—ம்.)

துறடு + ஆணி = துறட்டாணி
துறடு + கோல் = துறட்டுக்கோல்
துறடு + மூங்கில் = துறட்டுமூங்கில்
துறடு + வாய் = துறட்டுவாய்
மிடறு + ஒலி = மிடற்றொலி
மிடறு + பாட்டு = மிடற்றுப்பாட்டு
கிணறு + நீர் = கிணற்று நீர்
வயிறு + வலி = வயிற்றுவலி
} உயிர்த்தொடர்.

காடு + ஆறு = காட்டாறு
காடு + குதிரை = காட்டுக்குதிரை
காடு + மரம் = காட்டுமரம்
காடுவாழ்க்கை = காட்டுவாழ்க்கை
ஆறு + ஓரம் = ஆற்றோரம்
ஆறு + கால் = ஆற்றுக்கால்
ஆறு + மேடு = ஆற்றுமேடு
ஆறு + வாய்க்கால் = ஆற்றுவாய்க்கால்
} நெடிற்றொடர்.

**264.** இக் குற்றியலுகரங்கள் பண்புத்தொகையிலும் இரட்டும்.

(உ—ம்.) குருடு + கண் = குருட்டுக்கண், மூடு + பூச்சி = மூட்டுப் பூச்சி, வறடு + ஆடு = வறட்டாடு, முயிறு + எறும்பு = முயிற்றெறும்பு.

**265.** எருது என்னும் உயிர்த்தொடரும் இரட்டும்.

(உ—ம்.) எருது + மாடு = எருத்துமாடு.

**266.** ஆறும்வேற்றுமைத் தொகையிலும் விரியிலும் இரட்டும்.

(உ—ம்.) ஆடு + கால் = ஆட்டுக்கால், ஆட்டினதுகால்.

**267.** மேற்சொல்லிய இருதொடரும் இரண்டாம் வேற்றுமைத் தொகையிலும் ஏழாம் வேற்றுமைத் தொகையிலும் இரட்டாவாம்.

(உ—ம்.) நாடு + ஆண்டான் = நாடாண்டான், காடு + சென்றான் = காடுசென்றான், துறடு + எறிந்தான் = துறடெறிந்தான், கிணறு + இழிந்தான் = கிணறிழிந்தான்.

**268.** தனிநெடில் மொழி முன்னும் குறில்நெடி லிணைந்த மொழி முன்னும் இருவழியும் வல்லினம் மிகும்.

(உ—ம்.) பூ + பூத்தது = பூப்பூத்தது, பூ + பறித்தான் = பூப்பறித்தான், சுறு + பாய்ந்தது = சுறுப்பாய்ந்தது, சுறு + பிடித்தான் = சுறுப்பிடித்தான்.

## இரட்டலுக்கும் மிகுதலுக்குமுள்ள பேதம்.

இரட்டலெல்லாம் நிலைமொழியோடு இயைபுடைத்தாயிருக்கும்; மிகுதலெல்லாம் வருமொழியோடு இயைபுடைத்தாயிருக்கும்.

(உ—ம்.) கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்; இது இரட்டல்.
கற்று + கொண்டான் = கற்றுக்கொண்டான், இது மிகுதல்.

**269.** உயிரையும் மெய்யையும் இறுதியாகவுடைய உயர்திணைப்பெயர், பொதுப்பெயர், வினையை அடுத்தபெயர், விளிப்பெயர், எழுவாய்த்தொடர் இவ் வைந்தின் முன்னும் வல்லெழுத்து மிகாது.

(உ—ம்.) { தம்பி + கை = தம்பிகை / கண்ணன் + கை = கண்ணன் கை } உயர்திணைப்பெயர்

{ நீ + குறியை = நீ குறியை / நீர் + குறியீர் = நீர் குறியீர் } பொதுப்பெயர்.

{ அவனை + கொண்டான் = அவனை கொண்டான். } வினையையடுத்த பெயர்.

சாத்தா + கொடு = சாத்தாகொடு—விளிப்பெயர்.

{ நம்பி + தந்தான் = நம்பி தந்தான். / நளன் + கண்டான் = நளன்கண்டான். } எழுவாய்த் தொடர்.

**270.** பலவகையாகிய வினைமுற்றின் முன்னும், பெயரெச்சத்தின் முன்னும், வினைத்தொகை முன்னும் வல்லொற்று மிகாது.

(உ—ம்.) வந்தார் கொற்றர்....உயர்திணைப் படர்க்கை வினைமுற்று.

{ உண்டது குதிரை / உண்டன குதிரைகள் } அஃறிணைப் படர்க்கை வினைமுற்று.

வாழ்க கொற்று........வியங்கோள் வினைமுற்று.

| | |
|---|---|
| உண்டி கொற்றா<br>உண்டனை கொற்றா<br>உண்டாய் கொற்றா<br>உண்டீர் கொற்றரே | முன்னிலை வினைமுற்று. |
| ஓடு சாத்தா<br>உண்ணாய் கொற்றா<br>உண்ணு கொற்றா<br>உண்ணீர் கொற்றரே | ஏவல் வினைமுற்று. |

வந்த குதிரை .... .... .... பெயரெச்சம்.
குளிர் காற்று .... .... .... வினைத்தொகை.

**271.** உயிரீற்றுச் சுட்டுப்பெயர் முன்னும் வினாப்பெயர் முன்னும் வலி மிகாது.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) | அது + குறிது = அது குறிது<br>அவை + குறிய = அவை குறிய | சுட்டு. |
| | எது + குறிது = எது குறிது<br>எவை + குறிய = எவை குறிய | வினா. |

**272.** சுட்டுத்திரிபின் முன்னும், வினாத்திரிபின் முன்னும் வலி மிகும்.

(உ-ம்.) அந்த + குதிரை = அந்தக் குதிரை, எந்த + பையன் = எந்தப் பையன்.

**273.** உகரவீற்று விகாரவெண்ணுப் பெயர் முன் வலி மிகாது.

(உ-ம்.) ஒருசாண், இருகை, அறுசுவை, எழுகடல்.

**274.** உயிரையும் மெய்யையும் இறுதியாக உடைய அஃறிணைப் பெயர்முன் வேற்றுமையில் வலிமிகும்.

(உ-ம்.) குதிரை + கால் = குதிரைக்கால், கிளி + சிறகு = கிளிச்சிறகு, நாய் + கால் = நாய்க்கால், தேர் + கால் = தேர்க்கால்.

**275.** பண்புத்தொகையின் கண் உயர்திணையிலும் அஃறிணையிலும் வலி மிகும்.

(உ-ம்.) நம்பி + கொற்றன் = நம்பிக்கொற்றன், சாரை + பாம்பு = சாரைப்பாம்பு.

**276.** சிறு என்னும் பண்படியின்முன் மாத்திரம் பெரும்பாலும் வலி மிகாது.

(உ-ம்.) சிறு + துரும்பு = சிறு துரும்பு.

**277.** சிறு, வெறு, குறு, நடு, புது என்னும் பண்படிகளின் முன் உயிர்வந்தால் உகரமேறிய மெய் இரட்டும்.

(உ—ம்.) சிறு + அப்பன் = சிற்றப்பன்.
வெறு + இலை = வெற்றிலை.
குறு + உடைவாள் = குற்றுடைவாள்.
நடு + ஆறு = நட்டாறு.
புது + உருக்குநெய் = புத்துருக்குநெய்.

**278.** சிறு என்பது தவிர, குறு, வெறு, நெடு, பெரு, அரு, கரு என்னும் பண்படிகளின் முன் வல்லினம் வந்தால் இனவெழுத்துத் தோன்றும்.

(உ—ம்.) குறு + கை = குறுங்கை, வெறு + பொய் = வெறும் பொய், நெடு + தூண் = நெடுந்தூண், பெரு + பேச்சு = பெரும்பேச்சு, அரு + பொருள் = அரும்பொருள், கரு + குதிரை = கருங்குதிரை.

**279.** பெரு அரு கரு என்பன, உயிர்வந்தால் முதல் நீண்டே வரும்.

(உ—ம்.) பெரு + ஆசை = பேராசை, அரு + உயிர் = ஆருயிர், கரு + ஆடு = காராடு.

**280.** பல சில என்னும் சொற்களின்முன், வலி இயல் பாம்.

(உ—ம்.) பல + பேச்சு = பலபேச்சு, சில + பொருள் = சில பொருள்.

**281.** இகர யகர ஈற்றுச் செய்தென்னும் வினையெச்சத்தின் முன்னும், அகரவீற்றுச் செயவென்னும் வினையெச்சத்தின் முன்னும் வல்லொற்று மிகும்.

(உ—ம்.) ஆடி + கொண்டான் = ஆடிக்கொண்டான், போய் + கண்டான் = போய்க்கண்டான், பார்க்க + போனான் = பார்க்கப்போனான்.

**282.** மென்றொடர், இடைத்தொடர், ஒற்றிடையே மிகாத நெடிற்றொடர் உயிர்த்தொடர்களாகிய இக் குற்றியலுகர மொழிகளுக்குமுன் அல்வழியில் வலிமிகாது.

(உ—ம்.) வந்து + போனான் = வந்துபோனான், செய்து தந்தான், ஆறு தூண், வரகு காய்த்தது.

**283.** சில மென்றொடர்க் குற்றியலுகரம் வன்றொடர்க் குற்றியலுகரமாதலும், அதனோடு அம்முச்சாரியை பெறுதலும் உண்டு.

(உ-ம்.) இரும்பு + உலக்கை = இருப்புலக்கை.
கரும்பு + சாறு = கருப்பஞ்சாறு.

**284.** வன்றொடர்முன் இருவழியிலும் வலி மிகும்; மென்றொடர்முன் வேற்றுமையில் வலிமிகும்.

(உ-ம்.) அறுத்து + தந்தான் = அறுத்துத்தந்தான், கொக்கு + கால் = கொக்குக்கால், குறிப்பு + கள் = குறிப்புக்கள்.
வண்டு + கால் = வண்டுக்கால்.

**285.** அன்று இன்று என்று என்னும் மென்றொடரும், நேற்று என்னும் வன்றொடரும் ஐகாரச்சாரியை பெறும்.

(உ-ம்.) அன்று + கு = அன்றைக்கு. இவ்வாறே இன்றைக்கு, என்றைக்கு, நேற்றைக்கு என வரும்.

**286.** படி என்னும் இடைச்சொல், வினையையடுத்துவரும்போது வலி மிகாமையும், சுட்டு வினையையடுத்து வரும்போது வலி மிகுதலும் உண்டாம்.

(உ-ம்.) வரும்படி சொன்னான், அப்படிச் செய்தான்.

**287.** தனை அளவு என்னும் பண்புச்சொற்களின்முன் வலி மிகாது.

(உ-ம்.) அத்தனை பேச்சு, அவ்வளவு பேச்சு.

**288.** அன்றி இன்றி என்னும் எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம், மெல்ல பைய வலிய என்னும் உடன்பாட்டுக் குறிப்பு வினையெச்சம் இவைகளுக்குமுன் வலி மிகும்.

(உ-ம்.) அன்றி + போனான் = அன்றிப்போனான், இன்றி + கண்டான் = இன்றிக்கண்டான், மெல்ல + பேசினான் = மெல்லப்பேசினான், பைய + சென்றான் = பையச்சென்றான், வலிய + சொன்னான் = வலியச்சொன்னான்.

**289.** ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்முன் வல்லொற்று மிகும்.

(உ-ம்.) நடவா + குதிரை = நடவாக்குதிரை, இல்லா + பொருள் = இல்லாப்பொருள்.

**290.** உயிரீற்றுச் சில மரப்பெயர்முன் வலிவந்தால் இனவெழுத்துத் தோன்றும்.

(உ—ம்.) மா + காய் = மாங்காய்.
விளா + காய் = விளாங்காய்.

**291.** ஐகாரஈற்றுச் சில மரப்பெயர்க்குமுன் ஐ கெட்டு அம்முச்சாரியை தோன்றும்.

(உ—ம்.) எலுமிச்சை + காய் = எலுமிச்சங்காய்.
மாதுளை + கனி = மாதுளங்கனி.
தாழை + பூ = தாழம்பூ.
நாரத்தை + பழம் = நாரத்தம்பழம்.
தூதுளை + கீரை = தூதுளங்கீரை.
பாவட்டை + காய் = பாவட்டங்காய்.

**292.** இகர உகரங்களையும் லகரத்தையும் ஈற்றிலுடைய சொற்களின் முன் அம்முச்சாரியை தோன்றும்.

(உ—ம்.) புளி + காய் = புளியங்காய், புன்கு + காய் = புங்கங்காய், ஆல் + காய் = ஆலங்காய்.

**293.** ஒன்று என்னும் எண் வருமொழியோடு புணரும்போது ஈற்றுயிர்மெய் கெட்டு னகரம் ரகரமாய் அதன்மேல் உகரச்சாரியை வரும்.

(உ—ம்.) ஒன்று + கழஞ்சு = ஒரு கழஞ்சு, ஒரு நாள்.

வருமொழி உயிராயின், முதல் நீண்டு உகரச்சாரியை கெடும்.

(உ—ம்.) ஒரு + ஆயிரம் = ஓராயிரம், ஓரம்பு.

**294.** இரண்டு என்னும் எண் வருமொழியோடு புணரும்போது இகரமும் ரகர ஒற்றுமே நின்று, மற்றைய எழுத்தெல்லாங் கெட உகரச்சாரியை பெறும்.

(உ—ம்.) இரண்டு + கழஞ்சு = இருகழஞ்சு, இருநாள்.

உயிர்வரின், முதல் நீண்டு உகரச்சாரியை கெடும்.

(உ—ம்.) இரண்டு + ஆயிரம் = ஈராயிரம், ஈருயிர்.

**295.** மூன்று என்னும் எண் உயிர்வரின் ஈற்றுயிர் மெய்யும் னகரமுங் கெடுதலும், மெய்வரின் முதற்குறுகி ஈறுகெட்டு னகரம் வருகிற மெய்யாகத் திரிதலுமாம்.

(உ—ம்.) மூன்று + ஆயிரம் = மூவாயிரம், மூன்று + கலம் = முக்கலம், மூன்று + நாழி = முந்நாழி, மூன்று + வட்டி = முவ்வட்டி.

மூன்று என்னும் நிலைமொழியின் முன் வகரம் வந்தால் முதற் குறுகாமையுமாம்.

(உ–ம்.) மூன்று + வகை = மூவகை.

**296.** நான்கு என்னும் எண் ஈறுகெட்டு னகரம் லகர றகரமாகத் திரியும்.

(உ–ம்.) நான்கு + ஆயிரம் = நாலாயிரம், நான்கு + பத்து = நாற்பது.

**297.** ஐந்து என்னும் எண் மெய்வரின் ஈறுகெட்டு நகரம் வருகிற மெய்யாதலும் அதற்கினமாதலும் உயிர்வரிற் கெடுதலுமாம்.

(உ–ம்.) ஐந்து + மூன்று = ஐம்மூன்று, ஐந்து + கலம் = ஐங்கலம், ஐந்து + ஆயிரம் = ஐயாயிரம்.

**298.** ஆறு என்னும் எண் குறுகலும் இயல்புமாம்.

(உ–ம்.) ஆறு + தொழில் = அறுதொழில், ஆறு + முகம் = அறுமுகம்.

உயிர் முதன் மொழிவரின் முதற்குறுகா தியல்பாகவே வரும்.

(உ–ம்.) ஆறு + ஆயிரம் = ஆறுயிரம்.

**299.** ஏழு என்னும் எண் உயிர்வரின், ஈற் றுகரங் கெடுதலும், மெய்வரின் முதற் குறுகலும் குறுகாமையுமாம்.

(உ–ம்.) ஏழு + ஆயிரம் = ஏழாயிரம், ஏழு + கடல் = எழுகடல், ஏழு + பணம் = எழுபணம்.

**300.** எட்டு என்னும் எண் உயிரும் மெய்யும் முதலாகிய எண்ணுப்பெயர்கள் வந்தால் ஈறுகெட்டு டகரம் ணகரமாம். மற்றைய மெய்ம்முதற் பெயரும் உயிர்முதற் பெயரும் வந்தால் வழக்கத்தி லியல்பாம்.

(உ–ம்.) எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம், எட்டு + நூறு = எண்ணூறு, எட்டு + மாடு = எட்டுமாடு, எட்டு + இலை = எட்டிலை.

**301.** ஒன்பது என்னும் எண்முன் எண்களல்லாத மற்ற உயிர்முதன் மொழிகளும் மெய்ம்முதன் மொழிகளும் வந்

தால், முறையே பொதுவிதிகளிற் சொல்லியபடி உகரங்கெட, நின்ற மெய்யின்மேல் உயிரேறலும் இயல்புமாம்.

(உ-ம்) ஒன்பது + ஆடு = ஒன்பதாடு, ஒன்பது + பாட்டு = ஒன்பது பாட்டு.

**302.** பத்து என்னும் எண்முன் 'இரண்டு' வந்தால் ஈற்று மெய் கெட்டுத் தகரவொற்று னகரமாகும்.

(உ-ம்.) பத்து + இரண்டு = பன்னிரண்டு.

**303.** பத்து என்பதன் முன் ஒன்று மூன்று நான்கு ஐந்து ஆறு எழு எட்டு இவ்வேழெண்களும் உம்மைத் தொகையிலும், 'ஆயிரம்' பண்புத்தொகையிலும் வந்தால் ஈற்றுயிர்மெய் கெட்டு இன்சாரியை தோன்றும்.

(உ-ம்.) பத்து + ஒன்று ழ = பதினொன்று, பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து, பதினாறு, பதினேழு, பதினெட்டு, பதினாயிரம்.

**304**. பத்து என்பதன் முன் 'ஒன்று' முதலாகிய எண்களும் 'ஆயிர'மும் வந்தாற் பண்புத்தொகையில் ஈற்றுயிர்மெய் கெட்டு 'இற்று'ச்சாரியை தோன்றும்.

(உ-ம்.) பத்து + ஒன்று ழ = பதிற்றொன்று, பதிற்றுமூன்று, பதிற்றுநான்கு, பதிற்றாயிரம்.

**305.** இரண்டுமுதல் எட்டீறாகிய எண்களின்முன் பத்தென்னும் எண்வந்தாற் பத்தின் இடையில் நின்ற தகரங் கெடும்.

(உ-ம்.) இரண்டு ழ + பத்து = இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது.

**306.** இருபது முதல் எண்பதீறாகிய எண்களின் முன் ஒன்றுமுதல் ஒன்பதெண்ணும் அதையடுத்த பிறபெயரும் வந்தால் நிலைமொழியீற்றுக்கு அயலில் தகர ஒற்றுத் தோன்றும்.

(உ-ம்.) இருபது ழ + இரண்டு ழ = இருபத்திரண்டு, முப்பத்து நான்கு, அறுபத்தேழரை, எண்பத்தொன்பது.

**307.** இருபதுமுதல் எண்பதீறாகிய எண்களின் முன்னும், ஒன்பது என்பதன் முன்னும், 'ஆயிரம்' வந்தால் இடையில் 'இன்' சாரியை தோன்றும்.

(உ-ம்.) இருபது + ஆயிரம் = இருபதினாயிரம், அறுபதினாயிரம், எண்பதினாயிரம், ஒன்பதினாயிரம்.

**308.** ஒன்பதொழிந்த ஒன்று முதற் பத்தீறாகிய எண்கள் அனைத்தும் இரட்டித்துவந்தால், நிலைமொழியின் முதலெழுத் தல்லாதவைகளெல்லாங் கெட, வருமொழி உயிர் முதன் மொழியாயின் வகரமும், மெய்ம்முதன் மொழியாயின் வந்த மெய்யும் மிகும்.

(உ–ம்.) ஒன்று + ஒன்று = ஒவ்வொன்று, இரண்டு + இரண்டு = இவ்விரண்டு, மூன்று + மூன்று = மும்மூன்று, நான்கு + நான்கு = நந் நான்கு, ஐந்து + ஐந்து + ஐவைந்து, ஆறு + ஆறு = அவ்வாறு, ஏழு + ஏழு = எவ்வேழு, எட்டு + எட்டு = எவ்வெட்டு, பத்து + பத்து = பப் பத்து.

**309.** தொண்ணூறு என்பதை, தொள் + நூறு = தொண் ணூறு என்றுகொண்டு, தொளையுண்டநூறு, அஃதாவது பத் துக்குறைந்த நூறு என்று உரைப்பர்.

**310.** தொள்ளாயிரம் என்பதை, தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம் என்றுகொண்டு, முன்னர்த் தொண்ணூறு என்பதற்கு உரைத்தபடி உரைப்பர்.

**311**. உயர்ந்த எண்முன் தாழ்ந்த எண் வந்தால் ஏகாரச் சாரியை வரும்.

(உ–ம்.) ஒன்று + கால் = ஒன்றேகால், இரண்டு + முக்கால் = இரண்டேமுக்கால், கலன் + குறுணி = கலனேகுறுணி.

**312.** ஒன்று முதலாகிய எண்களின் முன் அரை என் னும் எண்வந்தால் அவை சாரியை பெறுவாம்.

(உ–ம்.) இரண்டு + அரை = இரண்டரை.
ஏழு + அரை = ஏழரை.

**313.** கிழக்கு என்பது பிறபெயரோடு புணரும்போது ஈற் றுயிர் மெய்யுங் ககர வொற்றும் அகரவுயிருங் கெட்டு முதல் நீளும்.

(உ–ம்.) கிழக்கு + கடல் = கீழ்கடல், கிழக்கு + பால் = கீழ்பால், கிழக்கு + திசை = கீழ்திசை.

இது சிலவேளைகளில் முற்கூறிய திரிபுகளடைந்த பின் னர் வலிமிகலும், ஐகாரச்சாரியை பெறலும், பெற்று வலி மிகலுமாம்.

(உ–ம்.) கீழ்த்திசை, கீழைவீடு, கீழைத்தடி.

**314.** தெற்கு என்பது 'மேற்கு,' 'கிழக்கு' இவைகளோடும், பிற பெயரோடும் புணர்ந்தால் நிலைமொழியீற் றுயிர்மெய் கெட்டு றகரம் னகரமாகத் திரியும்.

(உ-ம்.) தெற்கு + மேற்கு = தென்மேற்கு, தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு, தெற்கு + நாடு = தென்னாடு, தெற்கு + மொழி = தென் மொழி.

**315.** மேற்கு என்பது பிறபெயர்களோடு புணரும்போது நிலைமொழி யீறுகெட்டு றகரம் லகரமாதலும் இயல்பாதலும், ஈறு கெடாமல் நிற்றலுமாம்.

(உ-ம்.) மேற்கு + புறம் = மேல்புறம், மேற்புறம்; மேற்கு + கடல் = மேல்கடல், மேற்கடல்; மேற்கு + ஊர் = மேற்கூர், மேலூர்.

இது சிலவேளைகளில் முற்கூறியபடி றகரம் லகரமான பின்னர் ஐகாரச்சாரியை பெறலும், பெற்று வலி மிகலுமாம்.

(உ-ம்.) மேலைவயல், மேலைப்புலம்.

**316.** வடக்கு என்பது 'மேற்கு' 'கிழக்கு' என்னும் பெயர் களோடும், பிறபெயரோடும் புணரும்போது நிலைமொழி யீற்று உயிர்மெய்யும் ககரவொற்றுங் கெடும்.

(உ-ம்.) வடக்கு + மேற்கு = வடமேற்கு, வடக்கு + கிழக்கு = வடகிழக்கு, வடக்கு + மலை = வடமலை, வடக்கு + நாடு = வடநாடு.

**317.** ஒடு ஓடு உருபின் முன்னும், அது உருபின் முன் னும் வலி மிகாது.

(உ-ம்.) அவனொடு + போனான் = அவனொடு போனான், அவ னோடு சொன்னான், அவனது குதிரை.

**318.** விகாரப்பட்ட என்ன என்னும் வினாவின் முன் வலி மிகாது.

[இது எவன் என்னும் வினாவினைக் குறிப்பின் விகாரமாம். என், என்னை, என் என்பவைகளும் அப்படியே.]

(உ-ம்.) என்ன + செய்தி = என்னசெய்தி, என்ன கொடுத்தான்.

**319.** இரண்டாம் வேற்றுமைத் தொகையின்முன் வலி மிகாது; விரியின்முன் மிகும்.

(உ-ம்.) புளி + தின்றான் = புளிதின்றான். நீர் + குடித்தான் = நீர் குடித்தான்; புளியை + தின்றான் = புளியைத் தின்றான், நீரை + குடித்தான் = நீரைக்குடித்தான்.

**320.** இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் தொக்க தொகையில் வல்லொற்று மிகும்.

(உ—ம்.) குடிமி + பையன் = குடிமிப்பையன், தயிர் + குடம் = தயிர்க்குடம்.

**321.** உலகவழக்கிலே உயர்திணையில் இரண்டாம் வேற்றுமை விரிந்தே வரும்

(உ—ம்.) தமையனை + கண்டான் = தமையனைக் கண்டான்.

## iii. மெய்யீற்றுப் புணர்ச்சி.

**322.** மெய்யெழுத்துக்குமுன் உயிர்வந்தால் அவ்வுயிர் மெய்யெழுத்தின்மேல் ஏறும். இதுவும் இயல்பு புணர்ச்சியேயாம்.

(உ—ம்.) வேல் + அழகு = வேலழகு.

**323.** தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்த மெய்யின்முன் உயிர் வந்தால் அந்த மெய் இரட்டும்.

(உ—ம்.) கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.

**324.** வேற்றுமையில் ணகரமும் னகரமும் வல்லினம் வந்தால் டகர றகரங்களாம்; அல்வழியில் இயல்பாம்.

(உ—ம்.) மண் + குடம் = மட்குடம், பொன் + குடம் = பொற்குடம். மண்குறிது, பொன்குறிது.

**325.** தனிக்குறிலணையாத ணகரமும் னகரமும், வந்த நகரம் திரிந்தபோது கெடும்.

(உ—ம்.) தூண் + நன்று = தூணன்று, பசுமண் + நன்று = பசுமணன்று, கோன் + நல்லன் = கோனல்லன், செம்பொன் + நன்று = செம்பொனன்று.

**326.** வேற்றுமையில், லகர ளகரங்கள் வல்லினம் வந்தால் றகர டகரங்களாம்; அல்வழியில் இயல்பாம்.

(உ—ம்.) கல் + சட்டி = கற்சட்டி, முள் + குறை = முட்குறை. கல் + குறிது = கல்குறிது, முள் + குறிது = முள்குறிது.

**327.** லகர ளகரங்கள், இருவழியிலும் மெல்லெழுத்து வரின் னகர ணகரங்களாகத் திரியும்.

(உ—ம்.) கல் + மறைந்தது = கன்மறைந்தது, எள் + நெய் = எண்ணெய்.

**328.** அல்வழியில் தனிக் குற்றெழுத்தைச் சேராத லகர ளகரங்கள், வருமொழி முதலில் இருந்த தகரம் றகர டகரங்களாகத் திரியும்போது கெடும்.

(உ–ம்.) தோன்றல் + தீயன் = தோன்றறீயன், வேள் + தீயன் = வேடீயன்.

**329.** அல்வழியிலும் வேற்றுமையிலும் தனிக்குறிலைச் சாராத லகர ளகரங்கள், வருமொழி முதல் நகரம் னகர ணகரங்களாகத் திரியும்போது கெடும்.

(உ–ம்.) தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன், வேள் + நல்லன் = வேணல்லன் எனவும்; தோன்றல் + நன்மை = தோற்றனன்மை, வேள் + நன்மை = வேணன்மை எனவும் இருவழியிலும் வந்தமை காண்க.

**330.** னகர லகரங்களுக்கு முன், தகர நகரங்கள் வந்தால், அவை முறையே றகர னகரங்களாம்.

(உ–ம்.) பொன் + தீது = பொன்றீது, பொன் + நன்மை = பொன்னன்மை, கல் + தீது = கற்றீது, கல் + நன்று = கன்னன்று.

**331.** ணகர ளகரங்களுக்குமுன், தகர நகரங்கள் வந்தால் அவை முறையே டகர ணகரங்களாம்.

(உ–ம்.) மண் + தீது = மண்டீது, மண் + நன்று = மண்ணன்று, முள் + தீது = முட்டீது, முள் + நன்று = முண்ணன்று.

**332.** மகரம் அல்வழியில் வல்லினம் வந்தால் அதற்கின வெழுத்தாகத் திரியும்.

(உ–ம்.) மரம் + குறிது = மரங்குறிது, மரம் + சிறிது = மரஞ்சிறிது, மரம் + தீது = மரந்தீது.

**333.** மகரம் வேற்றுமையிலும் அல்வழியிலும் உயிரும் மெல்லினமும் இடையினமும் வந்தாற் கெடும்.

(உ–ம்.) வட்டம் + ஆழி = வட்டவாழி, வட்டம் + நேமி = வட்டநேமி, வட்டம் + வளை = வட்டவளை எனவும்; மரம் + அடி = மரவடி, மரம் + நார் = மரநார், மரம் + வேர் = மரவேர் எனவும், இருவழியிலும் வந்தன.

**334.** மகரங்கெட்டநின்ற மொழிக்குமுன் வலி வந்தால் வல்லெழுத்துத் தோன்றும்.

(உ–ம்.) குளம் + கரை = குளக்கரை.

**335.** எல்லாம் என்னுஞ் சொல் வேற்றுமையுருபை யேற்கும்போது, மகரங்கெட்டு இடையில் 'அற்று'ச்சாரியை தோன்றக் கடையில் உம்மை பெற்றுவரும்.

(உ-ம்.) எல்லாவற்றையும், எல்லாவற்றாலும்.

**336.** மகரவீற்றுச் சொல்லோடு, 'அத்து'ச்சாரியை புணரும்போது, மகரமும் சாரியையின் முதல் அகரமுங் கெடும்.

(உ-ம்.) மரம் + அத்து + குறை = மரத்துக்குறை.

**337.** அஃறிணைப் பெயர் அன்மொழியாகியும் ஆகுபெயராகியும் உயர்திணையை யுணர்த்தின் வலி இயல்பாம்.

(உ-ம்.) பொற்றொடிகை, அரசுகை.

புணரியல் முற்றிற்று.

---

# IX

## பதவியல்

### i. பதம்.

**338.** பதமாவது சொல். அது பகாப்பதமென்றும் பகுபதமென்றும் இருவகையாம்.

### ii. பகாப்பதம்.

**339.** பகாப்பதமாவது, சொல்லைப் பகுத்தலாற் பகுதி விகுதி முதலாகிய பிரயோசனமில்லாமல் ஒரு பொருளைக் காட்டுதற்கு ஏற்படுத்திய சொல்லாம்.

**340.** அது, பெயர்ப்பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப்பகாப்பதம், உரிப்பகாப்பதம் என நான்கு வகையாம்.

(உ-ம்.) பொன், மண். — பெயர்ப்பகாப்பதம்.
நட, வா. — வினைப்பகாப்பதம்.
ஏ, மற்று. — இடைப்பகாப்பதம்.
மா, நனி. — உரிப்பகாப்பதம்.

### iii. பகுபதம்.

**341.** பகுபதமாவது, சொல்லைப் பகுக்கும்போது பகுதிக்கும் விகுதிக்கும் வேறு பொருள் உண்டாய், ஒரு பொருளைத் தெரிவிக்குஞ் சொல்லாம்.

**342.** பகுபதம், பெயர்ப்பகுபதம் வினைப்பகுபதம் என இருவகையாம்.

[குறிப்பு.—இடைச்சொல்லிலும் உரிச்சொல்லிலும் பகுபதம் இல்லை.]

(உ–ம்.) பொன்னன், துறையன். — பெயர்ப்பகுபதம்.
வந்து, வந்த, வந்தான். — வினைப்பகுபதம்.

## (1) பகுபத உறுப்புகள்.

**343.** பகுபதத்தின் உறுப்புகள் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறும்.

**344.** அவற்றுள், பகுதியாவது பகுபதத்தைப் பிரித்தால் முதலில் நிற்கும் உறுப்பு.

(உ–ம்) பொன்னன் — பொன் பகுதி.
நடந்தான் — நட ,,

**345.** விகுதியாவது பகுபதத்தைப் பிரித்தால் ஈற்றில் நிற்கும் உறுப்பு.

(உ–ம்.) பொன்னன் — அன் விகுதி.
நடந்தான் — ஆன் ,,

**346.** இடைநிலையாவது, பெயர்ப் பகுபதத்திலே காலத்தைக் காட்டாமலும், வினைப் பகுபதத்திலே காலத்தைக் காட்டிக்கொண்டும், பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலே வருவது.

(உ–ம்.) அறிஞன் — ஞ் இடைநிலை.
உண்டான் — ட் ,,

**347.** சாரியைகளாவன, பகுதிகளோடு இடைநிலைகளும் இடைநிலைகளோடு விகுதிகளும் சேரும்போது, அவற்றைச் சார்ந்து அவற்றுக்கு இடையில் நிற்கும் அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் முதலியனவாம்.

(உ–ம்.) (பகுபதம்) (சாரியை)
செய்தனன்.................. அன்.

[இது இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வந்தது.]

(பகுபதம்) (சாரியை)
செய்குவான்.........கு.

[இது பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வந்தது.]

**348.** இச் சாரியைகள் பெயர்ச்சொற்களோடு வேற்றுமை உருபுகள் சாரும்போதும் வரும். பெயர்ச்சொல்லைப்பற்றிக் கூறிய இடத்தில் அவற்றைக் காண்க.

**349.** சந்தியாவன, புணரியலில் கூறப்படும் தோன்றல் திரிதல் கெடுதல் என்னும் புணர்ச்சிவிகாரங்கள் மூன்றும் ஆம்.

(உ-ம்.) (பகுபதம்) (சந்தி.)
படித்தான்.................த் தோன்றியது.
கற்க...........................கல் என்னும் பகுதியில் உள்ள ல், ற் ஆகத் திரிந்தது.
ஓடினன்.....................ஓடு என்னும் பகுதியின் உகரங் கெட்டது.

**350.** விகாரம் ஆவன வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், தொகுத்தல், விரித்தல், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என்னும் செய்யுளுக்குரிய விகாரங்கள் ஒன்பதும் ஆம்.

(உ-ம்.) நீத்தம்—(நீந்து – பகுதி) இதில் ந், த் ஆனது வலித்தல்.
நடந்தான் — இதில் சந்தியாக வந்த த், ந் ஆனது மெலித்தல்.
கோடும் — இதில் கொள் என்னும் பகுதியின் முதல் எழுத்தாகிய கொ என்பது கோ என்றானது நீட்டல்.
வந்தான் — இதில் வா என்னும் பகுதி வ என்றானது குறுக்கல்.
வருவான்—இதில் ரு வந்தது விரித்தல்.
நலம் — இதில் சந்தியாகத் தோன்றவேண்டிய ல் தோன்றாமல் மறைந்தது தொகுத்தல்.
ஆன — இதில் இன் என்னும் இறந்தகால இடைநிலையின் முதல் எழுத்தாகிய இகரங் கெட்டது முதற்குறை.
நசை — இதில் 'நச்சு' என்னும் பகுதியின் இடையில் உள்ள ச் கெட்டது இடைக்குறை.
நடை— இதில் 'நட' என்னும் பகுதியில் ஈற்றகரம் கெட்டது கடைக்குறை.

**351.** பகுபதம், பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் என்னும் இவ்வா றுறுப்புக்களையும் பெற்றும், பகுதி விகுதிகள் அல்லாத மற்றைய வுறுப்புக்களிற் சில பெறாதும் வரும்.

பெயர்ப் பகுபதம்:—

(உ—ம்.) கூனி = கூன் + இ, எனப் பகுதி விகுதியால் முடிந்தது.

அறிஞன்—அறி + ஞ் + அன், எனப் பகுதி, விகுதி, இடைநிலையால் முடிந்தது.

குழையான்—குழை + ய் + ஆன், எனப் பகுதி, விகுதி, சந்தியால் முடிந்தது.

குழையினன்—குழை + ய் + இன் + அன், எனப் பகுதி, விகுதி, சாரியை, சந்தியால் முடிந்தது.

வினைப் பகுபதம்:—

(உ—ம்.) கேளாய் — கேள் + ஆய், எனப் பகுதி விகுதியால் முடிந்தது.

உண்டான்—உண் + ட் + ஆன், எனப் பகுதி, விகுதி, இடைநிலையால் முடிந்தது.

உண்டனன்—உண் + ட் + அன் + அன், எனப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியையால் முடிந்தது.

பிடித்தனன்—பிடி + த் + த் + அன் + அன், எனப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தியால் முடிந்தது.

நடந்தனன் — நட + த் + த் + அன் + அன், என மேற்குறித்த உறுப்புக்கள் ஐந்தும் பெற்றுச் சந்தியால் வந்த தகரவொற்று நகரவொற்றாகத் திரியும் விகாரத்தையும் பெற்று ஆறுறுப்பால் முடிந்தது.

[சாரியை சந்தி விகாரம் என்பனவும் பகுதிக்கும் விகுதிக்கும் இடையிலே வருவனவாயினும், இடைநிலை என்னும் உறுப்பு, பகுதி விகுதிகளைப்போல வினைப்பகுபதத்திலே காலத்தைக் காட்டுதலாகிய பொருள் பயந்து நிற்பதாகையாலும், சாரியை சந்தி விகாரம் என்னும் உறுப்புகள் அங்ஙனம் பொருள் பயந்து வருவனவல்லவாகையாலும், இடைநிலையே அங்ஙனம் கூறப்படுவதாயிற்று.]

## (2) பெயர்ப்பகுபத உறுப்புகள்.

**352.** பெயர்ப்பகுபதத்தின் பகுதிகள், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்ப் பகாப்பதங்கள்.

(உ-ம்.) (பகுபதம்) (பகுதி.)

| | | |
|---|---|---|
| பொன்னன் — | பொன் — | பொருள். |
| ஊரான் — | ஊர் — | இடம். |
| ஓணத்தான் — | ஓணம் — | காலம். |
| கண்ணன் — | கண் — | சினை. |
| கரியன் — | கருமை — | குணம். |
| தட்டான் — | தட்டு — | தொழில். |

**353.** சில இடைச் சொற்களும் சில உரிச்சொற்களும் பெயர்ப்பகுபதத்தின் பகுதிகளாக வருதல் உண்டு.

(உ-ம்.) (பகுபதம்)—(பகுதி)

மற்றவன் —மற்று (இடை.)

கடியன் —கடி (உரி.)

**354.** பெயர்ப்பகுபத விகுதிகள், அன், ஆன், அள், ஆள், அர், ஆர், அ, து, இ, மார், மன், மான், கள், வை, கை, பி, ன், ள், ர் என்னும் இவை முதலியன.

உதாரணம் :

| (பகுபதம்) | (விகுதி.) | (பகுபதம்) | (விகுதி.) |
|---|---|---|---|
| குழையன் | அன். | வடமன் | மன். |
| வானத்தான் | ஆன். | கோமான் | மான் |
| குழையள் | அள். | கோக்கள் | கள். |
| குழையாள் | ஆள். | அவை | வை. |
| குழையர் | அர். | தங்கை | கை. |
| வானத்தார் | ஆர். | தம்பி | பி. |
| குழையன | அ. | பிறன் | ன். |
| யாது | து. | மகள் | ள். |
| பொன்னி | இ. | பிறர் | ர். |
| தேவிமார் | மார். | | |

**355.** பெயர்ப்பகுபதத்தைப் பகுதி விகுதிகளாகப் பிரிக்கும்போது, நடுவில் யாதேனும் ஓரெழுத் திருந்தால், அது பெயர்ப்பகுபத இடைநிலை எனப்படும்.

(உ-ம்.) (பகுபதம்) (இடைநிலை.)

வலைச்சி .................. ச்.

வலைஞன் .................. ஞ்.

## (3) வினைப்பகுபத உறுப்புகள்.

**356.** வினைப்பகுபதத்தின் பகுதிகள், நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நொ, போ, வெள, உரிஞ், உண், தின், தேய்,

பார், செல், வவ், வாழ், கேள், என்னும் இவை முதலிய வினைப் பகாப்பதங்களாம். (இவை தன்வினைப் பகுதிகள்.)

(உ-ம்.) (பகுபதம்.) (பகுதி.)
நடந்த..................நட.
வந்து..................வா.
மடித்தான்..............மடி.

**357.** சில பெயர்ச்சொற்களும், சில இடைச்சொற்களும், சில உரிச்சொற்களும், வினைப்பகுபதப் பகுதிகளாக வருதல் உண்டு.

(உ-ம்.) (பகுபதம்) (பகுதி.)
கடைக்கணித்தான்......கடைக்கண் (பெயர்.)
போன்றான்.............போல் (இடை.)
கூர்ந்தான்...............கூர் (உரி.)

**358.** வினைப்பகுபத விகுதிகள், அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, அ, ஆ, ஐ, ஆய், இர், ஈர், ஏன், அம், ஆம், ஓம், உம், க, உ, இ, ய், கு, இன், கால், மல், மே, து என்னும் இவை முதலியன.

(உதாரணம்.)

| (பகுபதம்.) | (விகுதி.) | (பகுபதம்.) | (விகுதி.) |
|---|---|---|---|
| வந்தனன் | அன். | வந்தாம் | ஆம். |
| வந்தான் | ஆன். | வந்தோம் | ஓம். |
| வந்தனள் | அள். | வாரும் | உம். |
| வந்தாள் | ஆள். | வருக | க. |
| வந்தனர் | அர். | வந்து | உ. |
| வந்தார் | ஆர். | ஓடி | இ. |
| வந்தது | து. | போய் | ய். |
| வந்தன | அ. | உண்ணற்கு | கு. |
| வரா | ஆ. | வரின் | இன். |
| வந்தனை | ஐ. | வந்தால் | ஆல் |
| வந்தாய் | ஆய். | வந்தக்கால் | கால் |
| வந்தனிர் | இர். | வராமல் | மல். |
| வந்தீர் | ஈர். | வராமே | மே. |
| வந்தேன் | ஏன் | வராது | து. |
| வந்தனம் | அம். | | |

**359.** வினைப்பகுபத இடைநிலை, இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை என மூன்று வகையாம்.

**360.** இறந்தகால இடைநிலைகள், த், ட், ற், இன் என்பன.

| (உ—ம்.) (பகுபதம்) | (இடைநிலை.) |
|---|---|
| செய்தான்.................... | த். |
| கண்டான்.................... | ட். |
| சென்றான்.................... | ற். |
| கூடினான்.................... | இன். |

**361.** நிகழ்கால இடைநிலைகள், கிறு, கின்று, ஆநின்று என்பன.

| (உ—ம்.) (பகுபதம்) | (இடைநிலை.) |
|---|---|
| செய்கிறான்.................... | கிறு. |
| செய்கின்றான்.................... | கின்று |
| செய்யாநின்றான்.................... | ஆநின்று |

**362.** எதிர்கால இடைநிலைகள், ப், வ் என்பன.

| (உ—ம்.) (பகுபதம்) | (இடைநிலை.) |
|---|---|
| காண்பான்.................... | ப். |
| செய்வான்.................... | வ். |

**363.** மேற்கூறிய நட வா முதலிய பகுதிகளின்மேல் வி, பி, கு, சு, டு, து, பு, று என்கிற எட்டு விகுதிகளும் வந்தாற் பிறவினைப் பகுதிகளாம்.

(உ—ம்.) கொல்வி, கொடுப்பி, போக்கு, பாய்ச்சு, உருட்டு, நடத்து, எழுப்பு, துயிற்று.

[இவற்றுள் முறையே கொல், கொடு, போ, பாய், உருள், நட, எழு, துயில் என்பன தன்வினைப் பகுதிகளாம்.]

**364.** சில பகுதிகளின் இடையிலிருக்கும் மெல்லொற்று வல்லொற்றாகத் திரிதலாலும், நடுவில் ஓரொற்றுத் தோன்றுதலாலும் பிறவினையாவது உண்டு.

(உ—ம்.) எழும்பு, எழுப்பு ; உருகு, உருக்கு.

**365.** அ, உம்: இவ்விரண்டும் பெயரெச்சவிகுதிகளாம்.

(உ—ம்.) வந்த, வருகின்ற, நடக்கும்.

**366.** உ, இ, ய, அ, கு, ன், ஆல், கால், மல், மே, து, றி: இப் பன்னிரண்டும் பிறவும் **வினையெச்ச விகுதிகளாம்.**

(உ—ம்.) நடந்து, ஓடி, போய், நடக்க, உண்ணற்கு, நடக்கின், நடந்தால், நடந்தக்கால், உண்ணுமல், உண்ணுமே, அல்லது, அன்றி.

**367.** தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, மை, து: இவை பதினேழும் பிறவும் **தொழிற்பெயர் விகுதிகளாம்.**

(உ—ம்.) நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, வருகை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, உணர்ச்சி, கல்வி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, நடவாமை, வருவது.

**368.** மை, ஐ, பு, கு, றி, று, அம், பம், நர்: இவை ஒன்பதும் **பண்புப்பெயர் விகுதிகளாம்.**

(உ—ம்.) நன்மை, தொல்லை, நண்பு, நன்கு, நன்றி, நன்கு, நலம், ஒட்பம், நன்னர்.

**369.** இ, ஐ, அம்,—இம் மூன்றும் அலரி, பறவை, எச்சம் என **வினைமுதற் பொருளையும்**; ஊருணி, தொடை, தொல்காப்பியம் எனச் **செயப்படுபொருளையும்**; மண்வெட்டி, பார்வை, நோக்கம் எனக் **கருவிப்பொருளையும்** உணர்த்தும்.

**370.** கொள்,—தற்செயலில் வரும் விகுதியாம்.

(உ—ம்.) அடித்துக்கொள்.

**371.** உம்,—பிற்பொருட்டில் வரும்.

(உ—ம்.) வந்ததும் போனான்.

**372.** வினைப்பகுபதம்.—தெரிநிலை குறிப்பு என இரண்டு வகைப்படும்,

(உ—ம்.) நடந்தான், பொன்னன் (இவன்.)

**373.** தெரிநிலை வினையாலணையும் பெயரும் பகுபதமாம்.

(உ—ம்.) வந்தவன், பாடுவான்.

**374.** செய்யுமென்னும் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, ஏவல் வினைமுற்று, செய்யுமென்னும் பெயரெச்சம், இகர யகர வீற்றுச் செய்தென்னும் வினையெச்சம், செய,

செயின் என்னும் வினையெச்சங்கள் மேற்சொல்லிய வினைப் பகுபத இடைநிலைகளைப் பெறா. அவ்வச் சொற்களிலுள்ள விகுதிகளே காலங்காட்டும்.

(உ—ம்.) அவை நடக்கும், நீர் வருக, உண்ணுய், வருங்குதிரை, ஓடி, போய், நடக்க, நடக்கின்.

பதவியல் முற்றிற்று.

---

# X

# பொதுவியல்.

## i. சொல் பொருளை யுணர்த்துமாறு.

**375.** சொல் பொருளை உணர்த்துமிடத்துக் குறிப்பும் வெளிப்படையுமென இருவகைப்படும்.

**376.** அவற்றுள், குறிப்பு:—ஒன்றொழி பொதுச்சொல், விகாரம், தகுதி, ஆகுபெயர், அன்மொழித்தொகை, வினைக் குறிப்பு, முதற்குறிப்பு, தொகைக்குறிப்பு, பிறகுறிப்பு எனப் பலவாம்; இவைகளல்லாதன வெளிப்படையாம்.

(உ—ம்.) ஒன்றொழி பொதுச்சொல்—ஆயிரமக்கள் போர் செய்தார்கள்—இதில் 'மக்கள்' என்னும் பொதுப்பெயரும், 'செய்தார்கள்,' என்கிற பொதுவினையும், 'போர்' என்னுங் குறிப்பால் உயர்திணைப் பெண்பாலை யொழித்து ஆண்பாலைக் காட்டின.

விகாரம்—மரைமலர்—இதில் 'மரை' என்னுஞ் சொல் 'மலர்' என்னுங் குறிப்பால் தாமரையைக் காட்டிற்று. இது முதற்குறை என்னும் விகாரம்.

தகுதி—திருமுகம் படித்தான்—இதிற் 'படித்தான்' என்னுங் குறிப்பால் 'திருமுகம்' என்னுஞ் சொல் ஓலை யென்பதைக் காட்டிற்று.

ஆகுபெயர்—புளி தின்ருன்—இதிற் 'புளி' என்னுஞ் சொல் 'தின்ருன்' என்னுங் குறிப்பால் அதன் பழத்தைக் காட்டிற்று.

அன்மொழித்தொகை—தேன்மொழி சொன்ஞள்—இதில் 'தேன் மொழி' யென்னும் சொற்றொடர் 'சொன்ஞள்' என்னுங் குறிப்பால் தேன்போன்ற மொழியையுடைய பெண்ணைத் தெரிவித்தது.

வினைக்குறிப்பு—இவ னிப்போது பொன்னன்—இதிற் 'பொன் னன்' என்னுஞ்சொல் 'இப்போது' என்னுங் குறிப்பாற் பெயர்ட்

பொருளை யொழித்துப் 'பொன்னையுடையவனையிருக்கின்றான்' என்னும் வினைக்குறிப்பைக் காட்டிற்று.

**முதற்குறிப்பு**—ஆத்திசூடி படித்தான்—இதில் 'ஆத்திசூடி' யென்னுஞ் சொற்கள், 'படித்தான்' என்னுங் குறிப்பால் அந்தச் சொற்களை முதலிலுடைய நூலைக் காட்டின.

**தொகைக்குறிப்பு**—ஐவரோடு குந்தி வந்தாள்—இதில் 'ஐவர்' என்னுஞ்சொல் 'குந்தி' யென்னுங் குறிப்பால், பாண்டவரைத் தெரிவித்தது.

**பிற குறிப்பு**—கல்லைக் கடிக்க நன்றாய்ச் சமைத்தாய், பாயா வேங்கை, பறவாக் கொக்கு—என்பனவற்றிற், 'கல்லைக்கடிக்க' என்னுங் குறிப்பால் நன்றாய்ச் சமைக்கவில்லை என்பதும், 'பாயா' 'பறவா' என்னுங் குறிப்பால் 'வேங்கை' மரமென்பதும், 'கொக்கு' குதிரை யென்பதும் தெரிவிக்கப்பட்டன.

### ii. திணைபாலிடப் பொதுமை நீங்குமாறு.

**377.** இருதிணையிலும் ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச் சொற்களும் அப்படிப்பட்ட வினைச் சொற்களும், ஆண்பால் பெண்பால்களுள் ஒன்றைத் தொழில் முதலிய குறிப்பால் ஒழிக்கும்.

(உ—ம்.) போரிற் பட்ட மக்கள் சுவர்க்கம் புகுவார்—இதில் 'மக்கள்' என்னும் உயர்திணை இருபாலுக்குமுரிய பொதுப்பெயரும், 'புகுவார்' என்னும் பொதுவினையும், 'போர்' என்னுங் குறிப்பினாற் பெண்பாலை யொழித்தன.

இக் கன்னிமாடத்து நால்வர் மக்களுளர்—இதில் 'மக்கள்' என்னும் பொதுப்பெயரும், 'உளர்' என்னும் பொதுவினையும், 'கன்னிமாடம்' என்னும் குறிப்பினால் உயர்திணையாண்பாலை யொழித்தன.

இப் பெற்றம் உழவொழிந்தன—இதிற் 'பெற்றம்' என்னும் அஃறிணைப் பொதுப்பெயரும், 'ஒழிந்தன' என்னும் பொதுவினையும் 'உழவு' என்னுங் குறிப்பினால் அஃறிணைப்பெண்பாலை யொழித்தன.

இப் பெற்றம் பால் சொரிந்தன—இதிற் 'பெற்றம்' என்னும் அஃறிணைப் பொதுப்பெயரும், 'சொரிந்தன' என்னும் பொதுவினையும், 'பால்' என்னுங் குறிப்பினால் அஃறிணை யாண்பாலை யொழித்தன.

**378.** திணை பா லிடங்களுக்குப் பொதுவாகிய பெயர் வினைகளினுடைய பொதுத்தன்மையை மேலே வருகிற சிறப்புப் பெயரும் சிறப்புவினையும் நீக்கும்.

(உ-ம்.) சாத்தன் இவன், சாத்தன் இது, சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது எனவும்; ஒருவர் என் தாயார், ஒருவர் என் தகப்பனார் எனவும்; மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன எனவும், பெயரின் திணைப் பொதுமையையும் பாற்பொதுமையையும் சிறப்புப் பெயர் வினைகள் வந்து நீக்கின.

அவரெல்லாம் இருந்தார், அவையெல்லா மிருந்தன, யாமெல்லாம் வருவோம், நீரெல்லாம் போமின், எனப் பெயரின் திணைப்பொதுமையையும் இடப்பொதுமையையும் சிறப்புப்பெயர் வினைகள் வந்து நீக்கின.

வாழ்க அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர் —என வினையின் திணை பால் இடப்பொதுமையினைச் சிறப்புப்பெயர்கள் வந்து நீக்கின. மற்றவைகளையும் சிறப்புச்சொல்லோடு சேர்த்துக் காண்க.

## iii. செய்யுள் வழக்கிலாம் சில திரிபுகள்.

**379.** பெயரிலும் வினையிலும் ரகரவீற்றுச் சொல்லின் அயலிலிருக்கும் ஆகாரம் ஓகாரமாம்,

(உ-ம்.) நல்லார் = நல்லோர் ; கொண்டார் = கொண்டோர்.

**380.** செய்யுளில் ன, ள, ய ஈற்றயல் ஆகாரம் ஓகாரமாகும்.

(உ-ம்.) வந்தான் = வந்தோன், செய்தாள் = செய்தோள், வந்தாய் = வந்தோய்.

**381.** செய்யுளிற் சில சமயங்களில் இவற்றையடுத்த அகரமும் ஓகாரமாகும்.

(உ-ம்.) கிழவன் = கிழவோன்.

## iv. சொன் முடிபு.

**382.** வேற்றுமையுருபுகள் பலவடுக்கி வந்தாலும், வேறு பல வடுக்கி வந்தாலும், வினைவேறு பலவடுக்கி வந்தாலும், இறுதியில் ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொண்டு முடியும்.

(உ-ம்.) அரசன் பகைவனை வாளால் வெட்டினன்—உருபு பல வடுக்கி ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொண்டது.

சாத்தனையுங் கொற்றனையும் வாழ்த்தினன், சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை —என ஐயுருபும் குவ்வுருபும் வேறு பலவடுக்கி ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொண்டன.

வாள் கைக்கொண்டான், அருளறமுடையான்—என உருபுகள் தொக்கு அவ்வாறு வந்தன.

ஆடினன் பாடினன் சாத்தன், ஆடி ஓடி வந்தான், கற்ற கேட்ட பெரியோர் என வினைமுற்றும் வினையெச்சமும் வேறு பலவடுக்கி ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொண்டன.

**383.** வேற்றுமையுருபுகளும், வினைமுற்றுக்களும், பெயரெச்ச வினையெச்சங்களுமாகிய இவைகளுக்கும், இவற்றை முடிக்குஞ் சொல்லாகிய பெயர்வினைகளுக்கும் நடுவில், அவ்விடத்துக்குப் பொருந்துவனவாகிய வேறு சொற்கள் வருதலுமுண்டு. அவற்றிற்கு **இடைப்பிறவரல்** என்று பெயர்.

(உ—ம்.) சாத்தன் வயிறார உண்டான்; அறத்தை அழகு பெறச் செய்தான்; இவைகளில் 'வயிறார,' 'அழகுபெற' என்பன இடைப் பிறவரலாம். வந்தா னவ்வூருக்குப் போன சாத்தன், வந்த வடகாசி மன்னன், வந்து அவனூருக்குப் போனான் இவைகளும் அப்படியே.

**384**. வினைமுற்றும் வினையெச்சமும் முடிக்குஞ் சொல்லுக்கு முதலில் நிற்பதுமல்லாமல் ஈற்றிலும் நிற்கும்.

(உ—ம்.) வந்தான் சாத்தன் என்பது சாத்தன் வந்தான் எனவும், வந்துபோனான் என்பது போனான் வந்து எனவும் வரும்.

**385.** ஆறும்வேற்றுமை யுருபொழிந்த ஐ, ஆல், கு, இன், இல் என்னும் ஐந்துருபுகளும், முடிக்கும் வினைக்கு ஈற்றிலும் வரும்.

(உ—ம்.) குறைத்தான் மரத்தை.
வந்தான் கொற்றனால்.
கொடுத்தான் கொற்றனுக்கு.
நீங்கினான் ஊரின்.
போனான் வீட்டில்.

'புத்தகம் சாத்தனது' என ஆறும் வேற்றுமை யுருபை ஈற்றில் வைத்துரைத்தால் 'சாத்தனது' என்பது குறிப்பு வினைமுற்றாகக் கருதப்படுமே யல்லாது, ஆறும் வேற்றுமை யுருபாகக் கருதப்பட மாட்டாது.

**386.** ஐயுருபு ஒன்றும் முடிக்குஞ் சொல்லின் ஈற்றில் தொகும்.

(உ—ம்.) கட்டினான் வீடு, வெட்டினான் மரம்.

**387.** சில சொற்கள் வினைகொண்டு முடியும்போது தம் இனத்தையுந் தெரிவிக்கும்.

(உ-ம்.) சோறுண்டான்—என்பது கறி முதலியவைகளையும் உண்டான் என்ற தன் இனத்தையுந் தழுவியது.

நஞ்சுண்டவன் சாவான்—இதில் நஞ்சுண்டவன் என்னும் உயர்திணை ஆண்பாற்பெயர், நஞ்சுண்டவள், நஞ்சுண்டவர், நஞ்சுண்டது, நஞ்சுண்டன என்னும் உயர்திணைப் பெண்பால், பலர்பால், அஃறிணையொன்றன்பால், பலவின்பால் இவைகளையுந் தழுவியது.

இதனை **உபலக்ஷணம்** என்பர் வடநூலார்.

**388.** பெயரெச்சம், வினையெச்சம், உம்மையெச்சம், சொல்லெச்சம், பிரிநிலையெச்சம், எனவெச்சம், ஒழியிசையெச்சம், எதிர்மறையெச்சம், இசையெச்சம், குறிப்பெச்சம் என்கிற பத்துவகை யெச்சமும், தம் எச்சமாகிய பெயர் வினைகளைக் கொண்டு முடியும்.

(உ-ம்.) செய்த சாத்தன் என்பதிற் 'செய்த' என்னும் பெயரெச்சம் தன்னெச்சமாகிய 'சாத்தன்' என்னும் பெயரைக் கொண்டது.

செய்து வந்தான் என்பதிற் 'செய்து' என்னும் வினையெச்சம் தன்னெச்சமாகிய 'வந்தான்' என்னும் வினையைக் கொண்டது.

சாத்தனும் வந்தான் என்னும் உம்மையெச்சம், 'முன்னே கொற்றன் வந்ததல்லாமல்' என்கிற தன்னெச்சமாகிய சில சொற்களைக் கொண்டது.

நல்லவ னென்றான் என்னுஞ் சொல்லெச்சம், நல்லவனென்று சொன்னான் எனச் 'சொல்' என்னுந் தன்னெச்சங் கொண்டது.

சாத்தனே கொண்டான் என்னும் பிரிநிலை யெச்சம் 'பிறர் கொள்ளவில்லை' யெனத் தன்னெச்சங் கொண்டது.

கடல் ஒல்லென ஒலித்தது என்னும் எனவெச்சம் தன்னெச்சமாகிய ஒலித்தது என்னும் வினையைக் கொண்டது.

கூரியவாள் காண், உண்ணுதற்கோ வந்தான் என்னும் ஒழியிசையெச்சம் முறையே இப்போது ஒடிந்துவிட்டது, கலகஞ்செய்ய வந்தான் எனத் தம்மெச்சங் கொண்டன.

யானோ செய்தேன், வருவதற்கு முரியன், என்பன எதிர்மறையெச்சம்; இவை முறையே யான் செய்திலேன், வாராமைக்கு முரியன் என தம்மெச்சங் கொண்டன.

"கற்றதனு லாய பயனென்கொல்?" இந்த இசையெச்சம் ஒருவன் பல நூல்களை நிரம்பக் கற்றதனால் என்று பொருள்படுதலால் எஞ்சி நின்ற இப் பல சொற்களைக் கொண்டது.

கல்லைக் கடிக்க நன்றாய்ச் சமைத்தாய் என்கிற குறிப்பெச்சம் நன்றாய்ச் சமைக்கவில்லை யெனத் தன்னெச்சங் கொண்டது.

## v. வினாவகை.

**389.** அறிவு, அறியாமை, ஐயம், கொளல், கொடை, ஏவல் என **வினா** அறுவகைப்படும்.

(உ—ம்.)

| | |
|---|---|
| ஆசிரியன் மாணாக்கனை 'இப் பாட்டுக்குப் பொருளென்னை?' எனக் கேட்பது | அறிவினா. |
| மாணாக்கன் ஆசிரியனை 'இப் பாட்டுக்குப் பொருளென்னை?' எனக் கேட்பது | அறியாவினா. |
| 'குற்றியோ மகனோ?' எனக் கேட்பது | ...ஐயவினா. |
| 'பயறுண்டோ செட்டியாரே?' எனக் கேட்பது | கொளல்வினா. |
| 'சாத்தா உனக்கு ஆடையில்லையோ?' எனக் கேட்பது | கொடைவினா. |
| 'சாத்தா உண்டிலையோ?' எனக் கேட்பது | ...ஏவல்வினா. |

## vi. விடைவகை.

**390.** சுட்டு, மறை, நேர், ஏவல், வினாதல், உற்ற துரைத்தல், உறுவது கூறல், இனமொழி என விடை எட்டு வகைப்படும்.

(உ—ம்.)

| | |
|---|---|
| தில்லைக்கு வழியாது? எனின், 'இது' என்பது | சுட்டுவிடை. |
| சாத்தா இது செய்வாயா? என்றவனுக்கு, | |
| 'செய்யே'னென்பது .... | மறைவிடை. |
| 'செய்வேன்' என்பது .... | நேர்விடை. |
| 'நீ செய்' என்பது .... | ஏவல்விடை. |
| 'செய்வேனோ?' என்பது .... | வினாவிடை. |
| 'தலைநொந்தது,' 'நோகிறது' என்பன | உற்றதுரைத்தல்விடை |
| 'தலைநோகும்' என்பது .... | உறுவதுகூறல்விடை |
| 'மற்றொன்று செய்வேன்' என்பது | இனவிடை. |

## vii. மரபு.

**391.** எந்தப்பொருளை எந்தச் சொல்லாற் பெரியோர்கள் சொன்னார்களோ அப்படியே நாமும் சொல்லுதல் மரபு ஆம்.

(உ–ம்.) பசுவின்கன்று, வாழைக்கன்று, குதிரைக்குட்டி, பாம்புக் குட்டி, அணிற்பிள்ளை, தென்னம்பிள்ளை, கீரிப்பிள்ளை, குருவிக் குஞ்சு, என்பன மரபாம். பசுவின்குட்டி, குதிரைக்கன்று, அணிற் குட்டி, கீரிக்குஞ்சு என்பன மரபுவழுவாம்.

**392.** எழுத்தின் தன்மை திரியாமல் பொருள் வேறுபட்ட தொடர்ச்சொற்கள், குறித்த சொல்லின் இறுதியும் முதலுந் தோன்ற, இசையறுத்துச் சொல்லுகிற வேறுபாட்டால் பொருள் துணிவு காட்டும்.

(உ–ம்.) குறும்பாம்பு, செம்பொன்பதின்கழஞ்சு : இவற்றைக் குறும் பாம்பு, குறும்ப ரம்பு (குறும்பர் அம்பு), எனவும் : செம்பொன் பதின் கழஞ்சு, செம் பொன்பதின் கழஞ்சு (செம்பு ஒன்பதின் கழஞ்சு) எனவும் இசையறுத்து உச்சரிக்க.

**393.** சுட்டுப்பெயர் வாக்கியத்திற்குப் பின்னே வரும்.

(உ–ம்.) நம்பிவந்தான், அவனுக்குச் சோறிடு; எருது வந்தது, அதற் குப் புல்லிடு. மற்றைத் திணை பால்களிலும் இவ்வாறே காண்க.

**394.** விரைவு, சினம், உவகை, அச்சம், அவலம், மிகுதி இப் பொருள்களைப்பற்றிச் சொற்கள் அடுக்காக இரட்டும்.

| | | | |
|---|---|---|---|
| (உ–ம்.) | போ போ | .... | விரைவு. |
| | எறி எறி | .... | சினம். |
| | வருக வருக | .... | உவகை. |
| | பாம்பு பாம்பு | .... | அச்சம். |
| | வாழேன் வாழேன் | .... | அவலம். |
| | வந்து வந்து போனான் | .... | மிகுதி |

**395.** இவ்வளவென்று அறிந்த பொருளையும், எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளையும், வினையோடு கூட்டிச் சொல்லும்போது முற்றும்மை வேண்டும்.

(உ–ம்.) தமிழ் நாட்டு மூவரசரும் வந்தார் ; இறைவனுக்குக் கண் மூன்றும் முச்சுடர் ; முயற்கோடு எங்கும் இல்லை ; ஆகாயப்பூ என்று மில்லை.

**396.** செயப்படுபொருளை வினைமுதல் போல வைத்து அதன்மேல் வினைமுதல் வினையைச் சொல்லுதலே வழக்கத்திற் பெரும்பான்மை. இதுவே தமிழ் மரபு.

(உ-ம்.) இம் மாடு யான் கொண்டது.
= (இம் மாடு என்னாற் கொள்ளப்பட்டது.)
இச் சோறு யான் கொடுத்தது.
= (இச்சோறு என்னாற் கொடுக்கப்பட்டது.)

**397.** கருவி, நிலம், செயல், காலங்களையும் வினைமுதல போல வைத்துக் கூறுதலும் உண்டு.

(உ-ம்.) இவ்வெழுத்தாணி யானெழுதியது — **கருவி.**
இவ்வீடு யானிருந்தது — **நிலம்.**
இத்தொழில் யான்செய்தது — **செயல்.**
இந்நாள் யான்பிறந்தது — **காலம்.**

**398.** பொருள் முதலாகிய ஆறினையும் அடையாகப் பெற்றுவருகிற சொற்கள் இனமுள்ளனவா யிருப்பதும் அன்றி, இனம் இல்லாதனவுமாம்.

| இனமுள்ளன. | இனமில்லாதன. | | |
|---|---|---|---|
| நெய்க்குடம் | உப்பளம் | .... | பொருள். |
| குளநெல் | ஊர்ச்சவை | .... | இடம். |
| கார்த்திகைவிளக்கு | நாளரும்பு | .... | காலம். |
| பூமரம் | இலைமரம் | .... | சினை. |
| செந்தாமரை | வெண்மதி | .... | குணம். |
| ஊதுகொம்பு. | தோய்தயிர் | .... | தொழில். |

**399.** இனமுள்ள அடைமொழிகள் பிறிதினியைபு நீக்கிய விசேடணங்கள் என்றும், இனமில்லாத அடைமொழிகள் இயைபின்மை நீக்கிய **விசேடணங்கள்** என்றும் பெயர் பெறும்.

**400.** ஓர் அடையும் ஒரு சினையும் ஒரு முதலையடுத்து ஒன்றை ஒன்று விசேடித்து வருதலும், இரண்டடை முதலை விசேடித்து வருதலும் உளவாம்.

(உ-ம்.) வேற்கை முருகன், செங்கால் நாரை, பெருவெள் ளரிசி, சிறு கருங் காக்கை.

### viii. வழூ.

**401.** திணையும், பாலும், இடமும், காலமும், வினவும், விடையும், மரபும் ஆகிய இவை மயங்கிவந்தால் வழூவாம்.

| | | |
|---|---|---|
| (உ-ம்.) | அவன் வந்தது .... .... | திணைவழூ. |
| | அவர் வந்தான் .... .... | பால்வழூ. |
| | யான் வந்தான் .... .... | இடவழூ. |
| | நாளை வந்தான் .... .... | காலவழூ. |
| | ஒரு விரலைக் காட்டிச் 'சிறிதோ பெரிதோ' என்பது | வினவழூ. |
| | 'தில்லைக்கு வழி யாது?' என்றவனுக்குச் 'சிவப்புக் காளை முப்பது பணம்' என்பது | விடைவழூ. |
| | யானை மேய்ப்பானை இடையன் என்பது .... | மரபுவழூ. |

### ix. ஐயமும் துணிவும்.

**402.** திணை ஐயத்தையும், பால் ஐயத்தையும், அதன் அதன் பொதுச்சொல்லாலும், துணிந்த பொருளின்மேல் அல்லாத தன்மையை வைத்தும் சொல்வார்கள்.

(உ-ம்.) 'குற்றியோ மகனோ அவ்விடத்தே தோன்றுகிற உரு' எனத் திணையில் ஐயம் வந்தபோது, 'உரு' என்கிற பொதுச்சொல்லாலும்; 'ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர்' எனப் பாலில்ஐயம்வந்தபோது, 'தோன்றுகிறவர்' என்கிறபொதுச்சொல்லாலும்,

துணிந்தபொருள் குற்றியாயின் மகனன்று, மகனாயிற் குற்றியல்லன் எனவும்; ஆண்மகனெனிற் பெண்மகளல்லன், பெண்மகளெனின் ஆண்மகனல்லள் எனவும்; ஒன்றெனிற் பலவன்று, பலவெனின் ஒன்றல்ல எனவும் சொல்லுக.

**403.** வேறொருவகை துணிந்த பொருள்மேல் அன்மையை வைத்துச் சொல்லாமல், திணைப்பொதுச் சொல்லுக்கும் பாற்பொதுச் சொல்லுக்கும் பயனிலையாக அப் பொருளின் பெயரைக் கூறுதலும் குற்றமன்று.

(உ-ம்.) அவ்வுரு குற்றி, அவ்வுரு மகன், ஆண்மகன், பெண்மகள்.

### x. வழுவமைதி.

**404.** பால் திணை முதலானவை மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிப்பு, விரைவு, மிகுதி முதலிய காரணம் பற்றி வழூவிவந்தாலும் குற்றமில்லையெனச் சான்றோரால் அமைக்கப்பட்டன வழுவமைதியாம்.

## பால்வழுவமைதிகள்.

**405.** மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிவு ஆகிய இவற்றால் பால் வழுவின் பால்வழுவமைதியாம்.

(உ—ம்.) தன்மகனை 'என்னம்மை வந்தாள்' என்பதில் மகிழ்ச்சியினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

ஒருவனை 'அவர் வந்தார்' என்பதில் உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

"தாதா ! உலகுக்கோர் தாயே !" என்பதிற் சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

'கசையடி பெறுவீர் காளையரே'—இஃது ஒருவனைப் பார்த்துச் சொல்லியபடியால், இதிற் கோபத்தால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

பெண்புத்தி கேட்பானை 'இவன் பெண்' என்பதில் இழிப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

## திணைவழுவமைதிகள்.

**406.** பால்வழுவி வருமாறே திணைவழுவிவரின் திணைவழுவமைதியாம்.

ஒரு பசுவை 'என்னம்மை வந்தாள்' என்பதில் மகிழ்ச்சியால் அஃறிணை உயர்திணையாயிற்று.

'கிளியாரே' என்பதில் உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

'என் பிள்ளைகளே என்பொருள்' என்பதிற் சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

'ஒருவர் சொல்லுங் கேளான், தானும் அறிந்து கொள்ளான், அவ்வுயிரால் யாது பயன்?' என்பதிற் கோபத்தால் உயர்திணை அஃறிணையாயிற்று.

'நாம் அரண் உடைமை' என்பதில் இழிப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

**407**. ஒருமைப்பாலிற் பன்மைப்பாற் சொல்லையும் பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும் ஓரிடத்திற் பிற இடச்சொல்லையும் தழுவிக் கூறுதலும் உண்டு.

(உ—ம்.) வெயிலெல்லாம் மறைத்தது மேகம், இரண்டு கண்ணுஞ் சிவந்தது—என்பன ஒருமையிற் பன்மையும் பன்மையில் ஒருமையும் வந்தன.

## இடவழுவமைதி.

**408.** தன்மையிடத்தில் படர்க்கையிடம் வழுவமைதியாய் வருதலுண்டு.

(உ-ம்.) சாத்தன் தாய் இங்ஙனஞ் செய்வேனே?—'சாத்தன் தாய்' என்னும் படர்க்கை 'செய்வேனே?' என்னுந் தன்மையின் வினையைத் தழுவியது.

## காலவழுவமைதி

**409.** மூன்று காலத்திலும் தொழிலிடையறாமல் நடக்கின்ற பொருளை நிகழ்காலத்தாலும் எதிர்காலத்தாலுஞ் சொல்லவேண்டும்.

(உ-ம்.) தெய்வமிருக்கிறது, ஆறொழுகுகிறது, அரசன் ஆளுகின்றான், தீச்சுடும், குதிரை கனைக்கும், நாய் குரைக்கும்.

**410.** விரைவினாலும், மிகுதியினாலும், தெளிவினாலும், இயல்பினாலும், (1) எதிர்கால நிகழ்காலங்கள் இறந்தகாலமாகவும், (2) எதிர்காலம் இறந்தகால நிகழ்காலங்களாகவும், (3) இறந்தகாலம் எதிர்கால நிகழ்காலங்களாகவும் வரும்.

(உ-ம்.) (1) இனி உண்ணப்போகும் ஒருவனை உடன்கொண்டு போக விரும்பின மற்றொருவன் பார்த்து, 'இன்னும் உண்டிலையோ?' என்றால், 'உண்டேன் உண்டேன்' என்று அவன் சொல்லுவதும், உண்கிறவன் அப்படிச் சொல்வதும் வழக்கம் ஆதலால், எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாயின. இவை விரைவு.

(2) நீ அவனுடனே பகைத்தாற் செத்தாய், சாகிறாய்; இந்தக் காட்டிற் போனால் துணியிழந்தாய், இழக்கிறாய் என எதிர்காலம், முறையே இறந்தகாலமும் நிகழ்காலமுமாயிற்று. சாதலும், துணி இழத்தலும் ஒருவேளை தப்பினுந் தப்பும். ஆதலால், இவை பெரும் பான்மை கருதிய மிகுதி யென்று சொல்லப்படும்.

அறஞ்செய்தாற் சுவர்க்கம் புகுந்தான், புகுகிறான்; எறும்பு முட்டைகொண்டு திட்டை ஏறினால் மழை பெய்தது, பெய்கிறது: தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமும் நிகழ்காலமு மாயிற்று.

(3) யாம் பண்டு விளையாடுவது இச் சோலை, விளையாடுகிறது இச் சோலை: இயல்பினால் இறந்தகாலம், எதிர்காலமும் நிகழ்காலமுமாயிற்று.

## xi. இருவகைச் சொற்கள்.

**411.** தமிழுக்குரிய நான்குவகைச் சொற்களில் உரிச்சொல் ஒழிய மற்றை மூன்றில் ஒவ்வொன்றும் இயற்சொல், திரிசொல்லென இருவகையாம்; உரிச்சொல் எல்லாம் திரிசொற்களாம். எனவே அவை பெயரியற்சொல், பெயர்த்திரிசொல், வினையியற்சொல், வினைத்திரிசொல், இடையியற்சொல், இடைத்திரிசொல், உரித்திரிசொல் என எழுவகையாம்.

### (1) இயற்சொல்.

**412.** இயற்சொல்லாவது இயற்கையாய் யாவருக்கும் எளிதிற் பொருள் விளங்கும் சொல்.

(உ—ம்.) மண், பொன், மரம் முதலியன பெயரியற்சொல்; வா, போ முதலியன வினையியற்சொல்; வீட்டை, வீட்டில் இவற்றில் ஐ—இல்—இடையியற்சொல்.

### (2) திரிசொல்.

**413.** திரிசொல்லாவது ஒருபொருள் குறித்த பல சொல்லாகியும் பலபொருள் குறித்த ஒரு சொல்லாகியும் கற்றோராற் பொருளறியப்படுஞ் சொல்லாம்.

(உ—ம்.) கிள்ளை, சுகம், தத்தை — இவை கிளியென்கிற ஒரு பொருள் குறித்த பலபெயர்த் திரிசொல்.

வாரணம்—இது யானை, கோழி, சங்கு முதலிய பலபொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல்.

படர்ந்தான், ஏகினான், சென்றான்—இவை போயினானென ஒரு பொருள் குறித்த பலவினைத் திரிசொல்.

வரைந்தான்—இது நீக்கினான், கொண்டான், எழுதினான் என்கிற பலபொருள் குறித்த ஒருவினைத் திரிசொல்.

வருகிற, வருகின்ற என்பவற்றுள் கிறு, கின்று என்பன நிகழ் காலம் என்னும் ஒரு பொருள் குறித்த பல இடைத்திரிசொல்.

கொல் என்பது ஐயமும் அசைநிலையுமாகிய பல பொருள் குறித்த ஓர் இடைத்திரிசொல்.

(உரிச் சொல்லுக் குதாரணம் உரியியலில் காண்க.)

## xii. வழக்கு.

**414.** உலக வழக்கத்தில் சொற்கள் வழங்கும் வகை வழக்கு எனப்படும்.

அது இயல்பு வழக்கு தகுதி வழக்கு என இரு வகையாம்.

### (1) இயல்பு வழக்கு.

**415.** இயல்பு வழக்கு என்பது ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லால் அப்பொருளைக் கூறுவது. அஃது இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என மூன்று வகைப்படும்.

**416.** இலக்கணமுடையது என்பது இலக்கண நெறியால் வருவது.

(உ-ம்.) நிலம், நீர்.

**417.** இலக்கணப்போலி என்பது இலக்கணத்திற்கு ஒத்திராவிட்டாலும் இலக்கணமுடையதுபோல வருவது.

(உ-ம்.) முன்றில் —இது இல் முன் என்பது முன் பின்னாக மாறியது.
கடைத்தலை —இது தலைக்கடை என்பது முன் பின்னாக மாறியது.
புறநகர் —இது நகர்ப்புறம் என்பது முன் பின்னாக மாறியது.

**418.** மரூஉ என்பது இலக்கணஞ் சிதைந்து சொல்லுருக் குலைந்து ஆன்றோர் ஆட்சிபெற்று வருவது.

(உ-ம்.) அருமந்தபிள்ளை—இது அருமருந்தன்ன பிள்ளை என்பது சிதைந்து வந்தது.
தஞ்சை —இது தஞ்சாவூர் என்பது சிதைந்து வந்தது.
சென்னை —இது சென்னப்பட்டினம் என்பது சிதைந்து வந்தது.
உறந்தை —இது உறையூர் என்பது சிதைந்து வந்தது.

## (2) தகுதி வழக்கு.

**419.** தகுதி வழக்காவது, ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லை ஏதேனும் தகுதியான காரணம்பற்றி நீக்கி வேறொரு சொல்லால் அப் பொருளைக் கூறுவது.

**420.** அது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூன்று வகையாம்.

**421.** இடக்கரடக்கல் ஆவது சொல்லத்தகாததை மறைத்துச் சொல்லுதல்.

(உ–ம்.) கால் கழுவி வந்தான்.
வாய்பூசி வந்தான்.
தோட்டத்துக்குப் போனான்.

[இடக்கர் = சொல்லத்தகாதது. அடக்கல் = மறைத்தல். இடக்கர் என்பது இடக்கு + அர் எனப் பிரிக்கப்படும்; இதில் அர் என்பது போலி.]

இவ்வாறு அடக்கிச் சொல்லாவிடின் அது அருவருப்பு விளைக்கும்.

**422.** மங்கலம் ஆவது, மங்கலம் அல்லாததை மங்கலமாகச் சொல்லுவது.

(உ–ம்.) நன்காடு. (சுடுகாடு என்பது இப்படிச் சொல்லப்பட்டது.)
துஞ்சினான். (இறந்தான் என்பது இப்படிச் சொல்லப் பட்டது. துஞ்சுதல் = தூங்குதல்.)

இவ்வாறு மறைத்துக் கூறாவிடின் அது அவலச் சுவை விளைக்கும்.

**423.** குழூஉக்குறியாவது, ஒரு கூட்டத்தார் ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லை ஒழித்துத் தமக்குள் மாத்திரம் வழங்குதற் பொருட்டு அமைத்துக்கொண்ட குறி.

(உ–ம்.) சொல் விளம்பி (கள்.)
பறி (பொன்.)
குணவெள்ளை (மூன்று ரூபாய்.)

## xiii அந்நியபாஷைச் சொற்கள்.

**424.** தமிழுக்குரிய இந் நால்வகைச் சொற்களையுந் தவிர்த்துத் திசைச்சொல் வடசொல்லெனத் தமிழில் வந்து வழங்கும் அந்நியபாஷைச் சொற்கள் இருவகையாம்.

**425.** செந்தமிழ் வழங்காத பிறநாடுகளிலிருந்துவந்து நம் தமிழில் வழங்குஞ் சொற்களைத் திசைச்சொல் என்பார்கள்.

**426.** தாயைத் தள்ளையென்பது, தந்தையை அச்சனென்பது முதலியன திசைச்சொல்.

**427.** ஸமஸ்க்ருத பாஷையிலிருந்து வந்து நம் தமிழில் வழங்குஞ் சொற்கள் வடசொற்களாம்.

**428.** யானையைக் குஞ்சரமென்பது, முயற்சியைப் பிரயத்தன மென்பது முதலியன வடசொல்.

(1) வடசொல் தமிழில் வழங்குமாறு.

**429.** ஆரியச்சொல் தமிழுச்சாரணம் பெற்று, தமிழெழுத்தி லெழுதப்பட்டுத் தமிழில் வந்து வழங்கும்போது வடசொல் என்னப்படும்.

**430.** அது தற்சமம் தற்பவம் என இரண்டு வகைப்படும்.

**431.** வடசொல் உச்சாரணத்தில் மாறுபடாதிருப்பின் தற்சமம் எனப்படும்.

தத் = அதற்கு, சமம் = சரியானது.
(உ—ம்.) கமலம், காரணம்.

**432.** வடசொல் உச்சாரணத்தில் விகாரங்களெய்தின் தற்பவம் எனப்படும்.

(தத் = அதனின்றும், பவம் = பிறந்தது.)

**433.** அவற்றுள் ஜகாரம், மொழிக்கு முதலிற் சகரமாகவும், நடுவிற் சகரமாகவும் யகரமாகவும் திரியும்.

(உ—ம்.) ஜலம் = சலம் ; விஜயம் = விசயம் ; புஜம் = புயம்.

**434.** ஷகாரம், மொழிக்கு முதலிற் சகரமாகவும், இடையில் டகரமாகவுந் திரியும்.

(உ—ம்.) ஷஷ்டி = சட்டி ; விஷயம் = விடயம்.

**435.** க்ஷகாரம், இரண்டு ககரமாகவும், டகர சகரங்களாகவும், இரண்டு சகரமாகவுந் திரியும்.

(உ—ம்.) சாக்ஷி = சாக்கி, சாட்சி ; பிக்ஷை = பிச்சை.

**436.** ஸகாரம், சகரமாகவும், தகரமாகவுந் திரியும்.

(உ—ம்.) மாஸம் = மாசம், மாதம்.

**437.** ஹ மொழிக்கு முதலில் அகரமாகவும் நடுவிற் ககரமாகவுந் திரியும்.

(உ—ம்) ஹரன் = அரன் ; மோஹம் = மோகம்.

**438.** ஆகாரவீறு ஐகாரமாகத் திரிந்தும் சிறுபான்மை திரியாதும் வரும்.

(உ—ம்.) மாலா = மாலை ; தயா = தயா, தயை.

**439.** தமிழில் வசனமாக ஒரு நூல் செய்யும்போது மாலை தச்சன் முதலிய சில சொற்கள் தவிர மற்றச் சொற்களைத் திரியாமல் வடவெழுத்தாலே எழுதிக்கொள்ள விருப்பமிருந்தாற் செய்யலாம்.

(உ—ம்.) மாஸம், மோஹம், பிக்ஷை.

## (2) திசைச்சொற்கள் தமிழில் வழங்குமாறு.

**440.** திசைச்சொற்கள் தமக்குச் சிறப்பாயினவும் தமிழில் இல்லாதனவுமாகிய ஒலிகளைக் கொண்ட எழுத்துகளை உடையனவாகவேனும் தமிழ் நடைக்கு ஒவ்வாத உச்சரிப்பு உடையனவாகவேனும் இருந்தால், அவை தமிழில் வழங்கும் போது தமக்கு இயல்பான ஒலி சிறிது பேதப்பட்டுத் தமிழ் நடைக்கேற்ப மாறுதலடையும் ; அல்லாதவை தமக்குரிய ஓசையேகொண்டு வழங்கப்பெறும்.

(உ—ம்.) புனல் —இது Funnel என்னும் ஆங்கிலச்சொல். தன்ஒலி மாறித் தமிழொலி பெற்றது.

கலெக்ற்றர் —இது Collector என்னும் ஆங்கிலச்சொல். தன்ஒலி மாறாமல் நின்றது.

வாடிக்கை —இது வாடுக என்னும் தெலுங்குச்சொல். தன்ஒலி திரிந்தது.

கெம்பு —இது கெம்பு என்னும் தெலுங்குச்சொல். தனக்குரிய ஓசையே கொண்டு வழங்குவது.

அலமாரி —இது Almirah என்னும் போர்த்துகேசியச் சொல். தனக்குரிய ஓசைமாறித் தமிழோசை பெற்றது.

பொதுவியல் முற்றிற்று.

---

[இதிற் சுருங்கச்சொல்லிய இலக்கணங்களையே ஏதுவாகக்கொண்டு சொல்லாதுவிட்ட மற்றவைகளையும் ஆராய்ந்தறிந்துகொள்க.]

# தமிழ் இலக்கணக் குறியீடுகளுக்குச் சரியான ஆங்கிலக் குறியீடுகள்.

**(Tamil Grammatical terms with their English equivalents)**

அஃறிணை—Impersonal.
அசைநிலை—An Expletive.
அடைமொழி—Epithet, attribute.
அடைவாக்கியம்—Subordinate sentence.
அல்வழிச்சந்தி — Uninflected combination. The agreement of two words of which the first is undeclined by case.
அளபெடை—Prolongation of sounds.
அன்மொழித்தொகை — Ellipsis of other words. The words having the பயனிலை suppressed.
ஆகுபெயர் — Synecdoche. A word or phrase used metonymically.
ஆண்பால்—Masculine gender.
ஆய்தம்—Guttural.
ஆறும்வேற்றுமை — Genitive case.
இசைநிறை—Euphonic particles. The use of a word or letter to fill the measure.
இடம்—Person.
இடுகுறிப்பெயர் — Arbitrary nouns.
இடைச்சொற்கள் — Conjunctions and particles.
இடைநிலை—Middle particles. The characteristics of tense.
இடையினம் — Medial consonants.
இயற்சொல் — Unequivocal pure word. A word in common use.
இரட்டித்தல்—Reduplication.
இரண்டாம்வேற்றுமை – Accusative case.
இறந்தகாலம்—Past tense.
ஈற்றுநிலை—Final letters.
உடனிகழ்ச்சி — Happening simultaneously.
உடன்பாடு—Affirmation.
உயர்திணை — Personal, the rational class.
உம்மைத்தொகை — Ellipsis of the conjunction உம்.
உயிரெழுத்துகள்—Vowels.
உயிர்மெய்யெழுத்துகள் – Vowel-consonants.
உரிச்சொல் — Attributives: words or expressions of abstract qualities.
உருபுமயக்கம்—Interchange of casal signs.

உருபேலாப்பெயர்கள்–Indeclinable nouns.
உருவகம்—Metaphor.
உவமை—Simile.
உவமைச்சொற்கள் — Words of comparison.
உவமைத்தொகை — Ellipsis of particles denoting comparison.
எட்டாம்வேற்றுமை — Vocative case.
எண்—Number.
எதிர்காலம்—Future tense.
எதிர்காலவினையெச்சம் — Subjunctive mood.
எதிர்மறை — The Negative forms of expression.
எதிர்மறை ஏவல்–Negative imperative.
எதிர்மறைப்பெயரெச்சம் – Negative relative participle.
எதிர்மறைவினைமுற்று — Negative finite verbs.
எதிர்மறை வினையெச்சம் – Negative dependant verbal forms.
எழுத்தியல்—Orthography.
எழுத்துப்புணர்ச்சி — Combinations of letters.
எழுவாய்—Subject.
ஏது—Cause.
ஏவல்வினை—Imperative verb.
ஏழாம்வேற்றுமை — Locative case.
ஐகாரக்குறுக்கம்—Shortened ஐ.
ஐந்தாம்வேற்றுமை — Ablative case.
ஒப்பு—Similarity.
ஒருபொருட் பன்மொழி — Redundant words.
ஒருமை—Singular.
ஒருபொருள்குறித்த பலசொற்கள்-Synonyms.
ஒலிக்குறிப்பு—Onomotopœia.
ஒன்றன் கூட்டம்—A collection of similar things.
ஒன்றன்பால்–Neuter singular.
ஔகாரக்குறுக்கம் — Shortened ஔ.
கருத்தா—Agent: Nominative case.
காரணப்பெயர் — Derivative nouns.
காலம்—Tense.
குறைவினை—Defective verb.
குறிப்புவினை—Symbolic verb without variation of tense.
குறில்—Short vowel.
குற்றியலிகரம்—Shortened இ.
குற்றியலுகரம்—Shortened உ.
கொடை—Gift.
சாரியைகள்—Increments.
சிறப்புவிதி—Special rule.
சுட்டெழுத்து—Demonstrative letters.
செயப்படுபொருள்—Object.
செயப்படுபொருள் குன்றாவினை—Transitive verb.
செயப்படுபொருள்குன்றியவினை-Intransitive verb.
செயப்பாட்டுவினை — Passive verb.
செய்யுள் விகாரங்கள்—Poetical changes.
செய்வினை—Active verb.
சொல்—word.

சொல்லியல்—Etymology.
சொற்களின்வகை — Parts of speech.
சொற்றொடர்—Syntax.
தகவு—Suitableness.
தற்கிழமை—The thing closely connected with the possession.
தனிமொழி இலக்கணம்—Parsing.
தன்வினை — Verb denoting direct action.
திசைச்சொல்-Provincial word.
திரிசொல் — Equivocal pure word. Word not in common use.
துணைக்கருவி—Means to an end.
துணைவினை—Auxiliary verb.
தொழிற்பெயர்—Verbal noun.
நான்காம்வேற்றுமை-Dativecase.
நிகழ்காலம்—Present tense.
நெடில்—Long vowels.
நேர்ச்சி—Friendship.
பகாப்பதம் — A primitive indivisible word.
பகுதி—Root.
பகுபதம்—Compound word. A word which may be divided.
பகை—Variance.
பண்புத்தொகை — Ellipsis of adjectival sign.
பண்புப்பெயர்—Abstract noun. A term expressing quality.
பயனிலை—Finite verb.
பலவினீட்டம் — A collection of many things.
பலவின்பால்—Neuter plural.



பன்மை—Plural.
பால்—Gender.
பிறவினை—Causal verb.
பிறிதின் கிழமை—The relation between possessor and possessed when the latter is not a part of the former.
புணர்ச்சி—Combination.
புறனடை — Exception or remark.
பெண்பால்—Feminine gender.
பெயருரிச்சொல்—Adjective.
பெயரெச்சம்—Adjective participle.
பெயர்ச்சொல்—Noun.
பொதுப்பால்-Common gender.
பொதுவிதி—General rule.
பொதுமொழி — Ambiguous word.
பொருட்டு—For the sake of.
போலி—Interchange.
மரபு—Idiom.
மறைவினை—Negative verb.
மாத்திரை—Quantity.
முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சம்—Infinitive mood.
முதனிலை — Initial letter. A verbal root.
மூன்றும்வேற்றுமை' — Instrumental case.
மெய்யெழுத்து— Consonant.
மெல்லினம்—Soft consonant.
வடமொழி உபசர்க்கம்—Sanskrit prefix.
வடமொழிச்சந்தி — Sanskrit changes.

வடவெழுத்து—Sanskrit letter.
வல்லினம்—Hard consonant.
வழாநிலை — Grammatical expressions.
வழுவமைதி — Anamolies. Allowed deviation from grammatical rule.
வாக்கியம்—Sentence.
விகாரம்—Change of letters.
விகுதி—Termination.
விசேஷணம் — Epithet, A qualifying term, Attribute.
விசேஷியம்—The thing qualified.
வியங்கோள்—Optative verb.
விளி—The vocative case.
வினாவெழுத்து — Interrogative letter.
வினைச்சொல்—Verb.
வினைத்தொகை—An aorist form of the relative participle.
வினைப்பெயர்—தொழிற் பெயர்—Verbal noun.
வினைமுதல் — The agent or subject of the verb
வினையாலணையும் பெயர்—Finite verbs used as appellatives.
வினையுரிச்சொல்—Adverb.
வினையெச்சம்—Adverbial participle.
வேற்றுமை—Case.
வேற்றுமைச்சந்தி — Inflected combination.
வேற்றுமைத்தொகை — Ellipsis of casal sign.

Printed at the S.P.C.K. Press, Vepery, Madras—B. 13672

# இயற்கை விளக்க வாசகங்கள்.

## திவான்பஹதூர்—வி. கிருஷ்ணமாசாரியார் இயற்றியவை.

சிறுவயதிலேயே 'ஸைன்ஸ்' என்னும் இயற்கை ஞானத்தைப் பிள்ளைகளுக்குச் சிறிதுசிறிதாகப் புகட்டவேண்டுமென்பது இப்பொழுது உயர்ந்த கல்வியதிகாரிகள் ஒவ்வொருவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. பல வருஷங்களுக்கு முன்னேயே இவ்வுண்மையை அறிந்து காலஞ்சென்ற திவான்பஹதூர்-வி. கிருஷ்ணமாசாரியார் அவர்கள் 'இயற்கை விளக்க வாசகங்கள்' என்ற தொகுதியில் பல பாட புத்தகங்களை எழுதி வெளியிட்டார்கள். அவை கல்வியதிகாரிகளாலும் உபாத்திமார்களாலும் மிகவும் பாராட்டப்பட்டன. ஆனால் அவை எழுதப்பட்ட காலத்துக்கும் தற்காலத்துக்கும் இடையே, இயற்கை ஞானமும் போதனா முறையும் மிக விருத்தி யடைந்துள்ளபடியால், அவ் விருத்தியை யனுசரித்து அவை யாவும் திருத்தி மாற்றி விரித்துப் புதுமுறையில் வெளியிடப் பட்டுள்ளன.

அவை வருமாறு:—

| | | அ. | பை. |
|---|---|---|---|
| முதற் புத்தகம் | .. .. .. .. | 2 | 6 |
| இரண்டாம் புத்தகம் | .. .. .. | 5 | 0 |
| மூன்றும் ,, | .. .. .. .. | 5 | 0 |
| நான்காம் ,, | .. .. .. .. | 5 | 0 |
| ஐந்தாம் ,, | .. .. .. .. | 8 | 0 |

திவான்பஹதூர்—வி. கிருஷ்ணமாசாரியார் இயற்றிய

## சிறுவர்களுக்காகும் நீதிகதா கிருதிகள்.

3-வது, 4-வது வகுப்புகளுக்கு .. .. .. 4 0

'ஈஸாப் கதைகள்' என்று நீதிபுகட்டும் பல சிறு கதைகள் வழங்கி வருவதைப் பலரும் அறிந்திருக்கலாம். பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு அவை மிகவும் ஏற்றவை. ஆதலால் காலஞ்சென்ற திவான்பஹதூர்—வி. கிருஷ்ணமாசாரியார் அவர்கள், அக்கதைகளில் சிலவற்றை, சிறுவர்கள் இசையுடன் பாடுவதற்கேற்ற கீர்த்தனைகளாக, எளிய நடையில் இயற்றியுள்ளார். அவை, இப்பொழுது நல்ல சடிதத்தில் நீதிகதா கிருதிகள் என்னும் புத்தகமாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கதையும் ஓர் ஓர் அழகிய படத்துடன் பதிக்கப்பெற்றுள்ளது.

# தமிழ் இலக்கியத் திரட்டு.

திவான்பஹதூர்—ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்
(எப்.ஆர்.எச்.எஸ்.—லண்டன் :) (எம்.ஆர்.ஏ.எஸ்.—லண்டன் :) தொகுத்தது.

நம் முன்னோர் தேடிவைத்த எல்லையற்ற செந்தமிழ்ச் செல்வக் களஞ்சியத்தின் உட்புகுந்து உள்ளதை அனுபவிக்க விரும்பும் மாணவர்க்கு இது பொக்கிஷத் திறவுகோலாகும்.

இத்தொகுதியில் இதுகாறும் இரண்டு பகுதிகள் வெளிவந்துள்ளன. இவற்றுள், பூண்டி—அரங்கநாத முதலியார், எம்.ஏ., ஆறுமுக நாவலர், வேதநாயகம் பிள்ளை, தி. செல்வக்கேசவராய முதலியார், எம்.ஏ., திவான் பஹதூர்—ச. பவானந்தம் பிள்ளை, வித்துவான்—தாண்டவராய முதலியார், பி. விஜயரங்க முதலியார், எப்.எம்.யு., திவான்பஹதூர்—வி. கிருஷ்ண மாசாரியார், பி.வி. ராமசாமி ராஜு, பி.ஏ. முதலிய பிரபல வித்துவசிகாமணிகள் எழுதிய பிற்கால இலக்கியங்களினின்றும்,— நளவெண்பா, குசேலோபாக்கியானம், கபிலரகவல், அரிச்சந்திரபுராணம், தாயுமானவர், பட்டினத்தார், தேவாரம், நாலாயிரத் திவ்விய பிரபந்தம், அருட்பா, வில்லிபாரதம், கம்பராமாயணம், திருக்குறள், நாலடி, நான்மணி, ஏலாதி, திரிகடுகம், நீதிநெறிவிளக்கம் முதலிய முற்கால இலக்கியங்களினின்றும்,—இனிமையும், அருமையும், சுலபமுமான பல பகுதிகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

பகுதி I .... .... .... .... அணா 12.

(இதில், இராஜபக்தி, அறிவுவளர்ச்சி, சீதாகலியாணம், சகுந்தலை முதலிய 16 வசன பாடங்களும், 8 செய்யுட் பாடங்களும் உள்ளன.)

பகுதி II .... .... .... .... அணா 8.

(இதில், கல்வியின் பெருமை, மந்தரையின் சூழ்ச்சி, போலிவைத்தியர் முதலிய 15 வசன பாடங்களும் 8 செய்யுட் பாடங்களும் உள்ளன.)

குறிப்பு : இவை நான்காவது ஐந்தாவது பாரங்களுக்கு ஏற்றவை.

# தமிழ் இலக்கணம்.

முதற் புஸ்தகம் (ஐந்தாம் வகுப்புக்கு ஏற்றது.)
இரண்டாம் புஸ்தகம் (ஆறும் வகுப்புக்கு ஏற்றது.)
வித்வான் மகாலிங்கையர் அவர்கள் இயற்றிய இலக்கணம்.
வித்வான் இராசகோபால பிள்ளை அவர்கள் இயற்றிய இலக்கணம்.
வித்வான் இராமாநுஜ கவிராயர் அவர்கள் இயற்றிய இலக்கணம்.
வித்வான் விசாகப்பெருமாளையரவர்கள் இயற்றிய இலக்கணம்
நன்னூல் (புதிய பதிப்பு. உயர்தர வகுப்புகளுக்கு ஏற்றது.)

திவான்பஹதூர்—வி. கிருஷ்ணமாசாரியார் இயற்றிய

## தமிழ் இலக்கண விளையாட்டு.

## PICTORIAL PLAY GRAMMAR.

பாகம்-1. நான்காம் வகுப்புக்கு. பாகம்-2. ஐந்தாம் வகுப்புக்கு.